1117

09.01.08

வெளியீடு 5-10-2007

Issued 5-10-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 10, 2007—தொகுதி 36—எண் 2

Thursday, the 10th May, 2007—Volume 36—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

**10-5-2007**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்[illegible]டைகள்—**

[illegible]யிட்ட வினாக்கள் 413-444

**[illegible] ஈர்ப்பு—**

[illegible]ல் 'தினகரன்' நாளிதழ் அலுவலகம் தா[illegible]பட்டது 444-469

திரு. டி. ஜெயக்குமார் 445-447

திரு. டி. சுதர்சனம் 447-450

திரு. ஜி.கே. மணி 451-456

திரு. சி. கோவிந்தசாமி 456-457

திரு. வை. சிவபுண்ணியம் 457-458

திரு. வீர. இளவரசன் 459-461

திரு. கு. செல்வம் 461-463

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 463-469

**3. [illegible]ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி** 470

**4. அறிவிப்புகள்—**

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 471

(ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆஇ) 509

(இ) தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007 (ஆஇ) 525

பக்கங்கள்

**அறிவிப்புகள்**—தொடர்ச்சி


| | | |
|---|---|---|
| (ஈ) | தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) | 534 |
| (உ) | "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சி - 11-5-2007 மற்றும் 12-5-2007 ஆகிய நாட்களில் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுகோள் | 549 |


**அறிக்கைகள் அளித்தல்—**


| | |
|---|---|
| அரசு உறுதிமொழிக் குழு | 471-472 |


**அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**


| | | |
|---|---|---|
| (அ) | தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 472 |
| | *மாண்புமிகு திரு. துரைமுருகன் | 472 |
| | திரு. வே. செந்தில் பாலாஜி | 472 |
| (ஆ) | தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 473 |
| | *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 473 |
| (இ) | தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 473-474 |
| | *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 473-474 |
| (ஈ) | தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 474-475 |
| | *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 474,475 |




பக்கங்கள்

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி


| | | |
|---|---|---|
| (உ) | தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 475-476 |
| | *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 475,476 |
| (ஊ) | தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு, 2007 | 476 |
| | *மாண்புமிகு திரு. துரைமுருகன் | 476 |
| (எ) | திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 477 |
| | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 477 |
| | *திரு. வி.பி. கலைராஜன் | 477 |
| (ஏ) | கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 477-478 |
| | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 478 |
| | *திரு. வி.பி. கலைராஜன் | 478 |
| (ஐ) | திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2007 | 478-479 |
| | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 478-479 |
| | *திரு. வி.பி. கலைராஜன் | 479 |
| (ஒ) | தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 479-480 |
| | மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 480 |
| (ஓ) | தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 480-481 |
| | மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 480:481 |

பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007 — 481-482

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 481,483

(ஆ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 483-485

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 483-485

(இ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 485-487

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 485-487

திரு. அ. தமிழரசு — 486

(ஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 488-490

மாண்புமிகு திரு. கே.என். நேரு — 488,490

திருமதி பெ. கமலாம்பாள் — 488

திரு. விடியல் எஸ். சேகர் — 489

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 491-505

மாண்புமிகு திரு. எ.வ. வேலு — 491,495-496, 498-505

திரு. கரி. இராமசாமி — 491

*தி[illegible] — 491,492, 500-502


227670




பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)** —தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007—தொடர்ச்சி

*திருமதி டி. யசோதா — 492

திரு. கே.வீ. ராமநாதன் — 492-493

திரு. ப. டில்லி பாபு — 493

திரு. தி. இராமசாமி — 493-494

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் — 494-495, 502-503

திரு. செ.ம. வேலுசாமி — 497

திரு. ஓ. பன்னீர்செல்வம் — 497-498,499

(ஊ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 — 505-508

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் — 506,508

திரு. கோவை தங்கம் — 506

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் — 506

செல்வி கே. பாலபாரதி — 506-507

திருமதி பி. பத்மாவதி — 507

(எ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 509-511

*மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் — 509,511

திரு. அருள் அன்பரசு — 509-510

திரு. வீ.ஏ.டி. கலியவரதன் — 510

| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)** —தொடர்ச்சி | |
| (ஏ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 512-516 |
| *மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 512,514-515 516 |
| திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி | 512-513 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 513 |
| திரு. என். நன்மாறன் | 513 |
| *டாக்டர் க. நெடுஞ்செழியன் | 514 |
| (ஐ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 517-525 |
| *மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 517,522-525 |
| திரு. சி. ஞானசேகரன் | 517-518 |
| *திரு. செ.ம. வேலுசாமி | 518 |
| திரு. தி. வேல்முருகன் | 519-521 |
| திரு. சி. கோவிந்தசாமி | 521-522 |
| (ஒ) தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007 | 526-534 |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை | 526,530-534 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 526-527,528 531,532 |
| *திரு. செ.ம. வேலுசாமி | 531,532 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 527 |
| திரு. த.அ. மேகநாதன் | 528 |
| திரு. சி. கோவிந்தசாமி | 528-529 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 529 |
| *திரு. ஆர்.எம். பழனிசாமி | 529-530 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)** —தொடர்ச்சி | |
| (ஓ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007 | 535-548 |
| *மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி | 535, 543-548 |
| திரு. ஆ. அருண்மொழிதேவன் | 535-536 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 536-539 |
| திரு. மு.க. பெரியசாமி | 540 |
| திரு. ஞா. ஜாண் ஜோசப் | 540-541 |
| திருமதி செல்வி ராமஜெயம் | 541 |
| திரு. கு. ஹசன் அலி | 542-543 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 549-550 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 27, சர்வஜித் - திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மே 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

இந்தச் சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**191—**

### கட்டட வசதி

***11107 திரு: எல்.பி. தர்மலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

சத்தியமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் தேர்வு செய்யப்படவில்லை. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, கட்டடம் கட்டுவது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதியில் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நத்தம் புறம்போக்கில் ஒரு ஏக்கரும், அதற்கு அருகில் பட்டாதாரர்களிடமிருந்து ஒரு ஏக்கரும், ஆக மொத்தம் இரண்டு ஏக்கர் நிலம், நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குத் தயாராக உள்ளது. ஆனால், நீதிமன்றம் கட்டுவதற்கு இரண்டரை ஏக்கர் நிலம் தேவையென்று வழக்கறிஞர்கள் சங்கம் கூறுகிறது. நீதிமன்றம் கட்டுவதற்கு எவ்வளவு நிலம் தேவையென்பதைத் தாங்கள் அறிவித்து, நடப்பாண்டில் நீதிமன்றக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் கட்டுவதற்கு எவ்வளவு இடம் தேவை என்பதல்ல. அங்கே கட்டப்படுகின்ற நீதிமன்றத்தைப் பொறுத்திருக்கிறது. ஒரேயொரு நீதிமன்றமா, குற்றவியல் நீதிமன்றமா, உரிமையியல் நீதிமன்றமா, தொழிலாளர்கள் நீதிமன்றமா என்பதையெல்லாம் பொறுத்திருக்கிறது. ஆக, குறைந்தது 3 ஏக்கர் நிலமாவது இருந்தால்தான் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கும், அதற்கு வேண்டிய சுற்றுச்சுவர் எழுப்புவதற்கும், வழக்கறிஞர்கள் தங்கள் பணியை ஆற்றுவதற்கு law chamber கட்டுவதற்கும் வழி பிறக்கும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதியில் அத்தகைய நிலையை உருவாக்கித் தருவார்களேயானால், கட்டடம் கட்டுவதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேன். கட்டடம் கட்டியே தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இடம் இருக்கக்கூடிய இடத்தில் கட்டடம் கட்டித் தருவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். என்னுடைய வேலூர் மாவட்டத்தில், வேலூர் மாவட்ட வளாகத்தில், ஏற்கெனவே 10 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. "B" Block -ஐ மட்டும் கட்டிவிட்டார்கள். "A" Block -ஐக் கட்டவில்லை. அதேபோல, வழக்கறிஞர்கள் பணியாற்றுவதற்கு Law Chamber-ஐப் பற்றிகூட, அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்டார்கள். Law Chamber. High Court -லே மட்டும் இருக்கிறது; மற்ற இடங்களிலே இல்லை. ஆகவே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், வேலூரில்—"B" Block வந்துவிட்டது; "A" Block இல்லாமல், "B" Block-க்குப் போய்விட்டார்கள்—"A" Block-இல் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும், வழக்கறிஞர்களுக்கு Chamber கட்டித்தரவும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருக்கிற காரணத்தினாலேயே அங்கே நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டவேண்டும் என்பதல்ல. நீதிமன்றங்கள் தேவை என்றால், அதற்கேற்ப நிலம் வேண்டும். நீதிமன்றம் கட்டத் தேவையில்லை என்றால், நிலம் இருந்தும் பிரயோசனம் இல்லை. ஆனால், வேலூரைப் பொறுத்தவரையில், இந்த வருடம் ஒரு தொழிலாளர் நீதிமன்றம் வந்திருக்கிறது. இன்னொரு நீதிமன்றம்கூட வரலாம் என்று தெரிவிக்கிறார்கள். ஆகையினாலே, "A" Block கட்டுவதற்கு, நீதிமன்றங்களுக்கு அந்த இடம் தேவை என்று சொன்னால், அடுத்த ஆண்டு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. மூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**192—**

## கலைக் கல்லூரி

***6917—திரு. டி. மூர்த்தி:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்போரூர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்போரூர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஆரம்பிப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, சென்னையை ஒட்டியிருக்கிற ஒரு தொகுதியாகும். மக்கள் அடர்த்தியாக வசிக்கிற ஒரு தொகுதியாகவும் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, தாம்பரம் தொகுதிக்கு அடுத்து, முட்டுக்காடு முதல் ஏறக்குறைய மகாபலிபுரம் வரையிலும், அதேபோல, வண்டலூர் முதல் செங்கல்பட்டு வரையிலும் பரந்திருக்கிற ஒரு தொகுதியாக இருக்கிறது. அந்தத் தொகுதியிலே, மக்கள் தொகை அடிப்படையிலே பார்த்தால், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிலே ஒரே ஒரு அரசுக் கலைக் கல்லூரிதான் இப்பொழுது இயங்கி வருகிறது. மக்கள் தொகை அதிகமாக இருக்கிற அந்தப் பகுதியிலே கலைக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்றுதான் என இருந்தபோதிலும், அரசு உதவிபெறும் கலைக்





கல்லூரிகள் எட்டுக் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், சுய நிதிக் கலைக் கல்லூரிகள் மட்டும் 26 கல்லூரிகள் இருக்கின்றன. ஆகமொத்தம், 35 கலைக் கல்லூரிகள் காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கின்றன. நீங்களே சொன்னதைப்போல, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற தொகுதி; இந்தப் பகுதி, கல்லூரிகள் நிறைந்திருக்கிற பகுதி. ஆகவே, தேவைக்கேற்ப, தனியார்கள் முன்வருவார்களேயானால், அதற்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். (குறுக்கீடு) Sir, supplementary-க்கு supplementary கிடையாது, உட்காருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எந்தத் தொகுதியிலும், எந்தக் கல்லூரியும் இல்லாத... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இராமன், இராமன் Sir, உட்காருங்கள். திரு. ஆறுமுகம், சொல்லுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு அரசுக் கலைக் கல்லூரியிலே, பட்ட மேற்படிப்பு தொடங்குவதாகக் கடந்த ஆண்டே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனே தொடங்குவதற்கு முன்வருவார்களா? அதேபோன்று, கணினி இளங்கலை பட்டப் படிப்புகூட, அந்தக் கல்லூரியில் இல்லை. அதேபோன்று, அங்கே விளையாட்டுத் திடலும் மிகக் குறுகிய அளவிலேதான் இருக்கிறது. அதையெல்லாம் சரி செய்வதற்கு, நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையின்படி செங்கல்பட்டு கல்லூரிக்கு எந்தவித புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, இதுபோன்று புதிய வகுப்பறைகள், புதிய courses, P.G. courses எல்லாம் கேட்கிறார்கள். அதுகுறித்து, கல்லூரி விண்ணப்பித்திருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டே பல்கலைக்கழகத்தினுடைய அனுமதியோடு தொடங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

[2007 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான கல்லூரியும் இல்லாத தொகுதிகளினுடைய எண்ணிக்கையைப்பற்றி உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னிடம்கூட, துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பு கொண்டு, உங்கள் தொகுதியிலே, எந்தவிதமான கல்லூரியாவது இல்லாமல் இருக்கிறதா என்று கேட்டார்கள். நான் மகிழ்ச்சியடைந்தேன். ஏனென்றால், முனைப்பாக அமைச்சர் அவர்கள் இதிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். ஆகவே, எந்தவிதமான கல்லூரியும் இல்லாத தொகுதிகளிலே, ஏதாவது ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசாங்கம், இந்த ஆண்டிலே, கலைஞர் அவர்கள் பொன்விழா காணுகின்ற இந்த ஆண்டிலே, தொடங்குவதற்கு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையிலேயே அறிவித்திருக்கிறேன். கல்லூரிகள் இல்லாத தொகுதியே இருக்கக்கூடாது என்று கலைஞர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, படிப்படியாக இந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் நிச்சயமாகக் கல்லூரிகளே இல்லாத தொகுதிகள் இல்லையென்ற நிலைமை உருவாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**193—**

## பேருந்து நிறுத்தம்

***20522—திரு. ந. சுப்ரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலிருந்து விராலிமலை, கொடும்பாளூர் சத்திரம், கோவில்பட்டி வழியாகத் துவரங்குறிச்சி செல்லும் புறநகர்ப் பேருந்துகளை, கொடும்பாளூர்சத்திரம் அருகிலுள்ள காளப்பனூரில் நின்று செல்ல, அரசு ஆவன செய்யுமா?



2007 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளியிலிருந்து விராலிமலை, கொடும்பாளூர்சத்திரம், கோவில்பட்டி வழியாகத் துவரங்குறிச்சி வரை இயக்கப்படும் குறுநடை புறநகர்ப் பேருந்துகள், கொடும்பாளூர்சத்திரம் அருகிலுள்ள காளப்பனூர் பிரிவு நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. காளப்பனூர் பிரிவு நிறுத்தத்தில் நின்று செல்ல ஓட்டுநர், நடத்துநர்களுக்குச் சுற்றறிக்கையின்மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்வதைப் பறக்கும்படை பரிசோதகர்கள்மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்ட சமயத்தில், அந்த வழித் தடத்தில், பஸ் நின்று செல்வதாக அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் இதுவரையிலேயும் கூறவில்லை. இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வழித் தடத்தில் நின்று செல்வதற்கு, ஆவன செய்துள்ளதாகக் கூறினார்கள். அது நான்கு வழிச் சாலையாக இருப்பதால், அந்த ஊரில் இரண்டு பக்கமும் பஸ் நின்று செல்வதற்குத் தட்டி அடித்து வைத்துள்ளார்கள், பஸ் நின்று செல்ல வேண்டுமென்று. பெயர்ப் பலகை வைத்தும், எந்த ஒரு பஸ்ஸூம் இதுவரையிலும் நின்று செல்லவில்லை. அந்த ஊர்களிலிருந்து, அதாவது காளப்பனூர், இடையப்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்து, நாள்தோறும் திருச்சியை நோக்கி விவசாயக் கூலிகள் சுமார் 200 பேருக்கு மேலாகவும், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** கொத்தனார் மற்றும் சிறு தொழிற்கூடங்களில் வேலை செய்யும் தினக் கூலிகளும், நாள்தோறும் அந்த வழித் தடத்தைப் பயன்படுத்துகிறார்கள். எனவே, அவசியம் காளப்பனூரில் நின்று செல்ல வேண்டுமாய்த் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருச்சியிலிருந்து கீரனூர் வழியாகப் புதுக்கோட்டை செல்லும் அனைத்துப் புறநகர்ப் பேருந்துகளும், முத்துடையான்பட்டியில் அவசியம் நின்று செல்ல வேண்டும். முத்துடையான்பட்டி மற்றும் எனது தொகுதியின் தலைமையிடமாக உள்ள குளத்தூரிலும் பஸ் நின்று செல்ல வேண்டும். இதுகுறித்து, சட்டமன்றத்தில் இரண்டுமுறை நான் வினா தொடுத்துள்ளேன். இதுவரையிலும் குளத்தூரிலும் பஸ் நின்று செல்லவில்லை; அதேபோல, முத்துடையான்பட்டியிலும் பஸ் நின்று செல்லவில்லை. இவ்விரு வழித் தடங்களிலும் அவசியம் அனைத்துப் புறநகர்ப் பேருந்துகளும் நின்று செல்ல வேண்டுமாய்த் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். திருச்சியிலிருந்து விராலிமலைக்கு இப்போதுதான் புதிதாக ஐந்து வழித் தடங்களிலே பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. எவ்வளவுப் பேருந்துகள் விட்டாலும், அங்கே மக்களுடைய அடர்வு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், திருச்சி ஜங்ஷனிலிருந்து நேரடியாக விராலிமலைக்குச் செல்கின்ற அந்தப் பேருந்துகள், டிக்கெட் கொடுத்து, ஏற்றி இறக்க முடியாத அளவிற்குக் கூட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இடையிலே நிற்காமலே போய்க்கொண்டிருக்கின்றன என்று நான் அறிந்தேன். இந்தக் கேள்வி வந்த பிறகு, உடனடியாக அதிகாரிகளோடு தொடர்புகொண்டு என்னவென்று கேட்டு, இப்போது ஆங்காங்கு Checking Inspectors நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் நின்றுதான் செல்லவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே சட்டமன்றத்தில், அவருடைய தொகுதியில் பல்வேறு இடங்களுக்குப் பேருந்துகள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கூடுதலாக, திருச்சியிலிருந்து காளப்பனூருக்குத் தனியாகவே பேருந்துகள்விட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, அந்த வழித் தடத்தில் கூடுதலாக பஸ் இயக்கப்படும் என்று





அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கு நன்றி. மேலும் குளத்தூரிலும், முத்துடையான்பட்டியிலும் அனைத்துப் புறநகர்ப் பேருந்துகளும் நின்று செல்ல வேண்டுமாய்த் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளதைக் கருத்திலேகொண்டு, நிச்சயமாக ஆங்காங்கு அதிகாரிகளை நிறுத்தி ஒவ்வொரு இடத்தில் நின்று செல்கிற அந்தப் பணியை இந்தத் துறை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து தருமபுரி மார்க்கமாகச் செல்கின்ற பேருந்துகள், அனைத்துப் பேருந்துகளுமே ஓமலூர் நகரத்திற்கு வராமல் பை-பாஸ் வழியாகச் சென்றுவிடுகின்றன. சேலம் பேருந்து நிலையத்திலேயே, ஓமலூரில் நிற்காது என்று சொல்லிப் பயணிகளை இறக்கி விட்டுவிடுகிறார்கள். எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அனைத்துப் பேருந்துகளும் ஓமலூர் வந்து, ஓமலூர் பேருந்து நிலையத்தில் நின்று செல்லும் நிலையினை உருவாக்கிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்புதான், சேலத்தில் புதிய வழித் தடங்கள் தொடங்கப்பட்ட விழாவிலேயே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இப்போது Bye-pass Rider என்று தனியாகவே பேருந்து வழித் தடங்கள் நிருவகிக்கப்படுகின்றன. ஓர் இடத்திலிருந்து நேரடியாக மற்றோர் இடம் செல்லும் அந்தப் பேருந்துகள் முழுவதும் அதே பயணிகள் இருப்பார்களேயானால், அவை நேரடியாகச் செல்லக்கூடிய வழக்கத்தைத்தான் இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள். ஓமலூரிலே அதிகமான அளவிற்குப் பேருந்துகள் தேவை என்று சொன்னால், ஓரிரு

பெருந்துகளை அந்த வழியாகக் கொண்டு வரலாம். மேலும் தேவையென்றால், புதிய வழித் தடங்களாக உருவாக்கிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**194—**

## தொழிற்சாலை

***52—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டிக்கு மிக அருகில், 2 கி.மீ. தொலைவில் உள்ள பள்ளப்பட்டி என்னும் கிராமத்தில், பள்ளப்பட்டி ஆதி திராவிடர் கயிறு மற்றும் தென்னை நார் திரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், இருபது ஆண்டு காலமாகச் செயல்பட்டு வருவதால், கொட்டாம்பட்டியில் புதிதாகக் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் கொட்டாம்பட்டி பகுதியில், ஒரு கயிறு திரிக்கும் தொழிற்சாலை அரசு சார்பாக நிறுவ வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். அதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே அதிகமான தென்னை மரங்கள் இருக்கின்றன. மொத்தம், அந்த ஒன்றியத்திலே 27 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. 27 பஞ்சாயத்துகளிலுமே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. தென்னை மட்டைகளும் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகையால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற இளைஞர்களும், படித்த மாணவியர் எல்லாம், தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தால் முடிந்த அளவு அவற்றைத் தட்டி, நார் எடுத்து,



கயிறு திரித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுத் துறை சார்பாக, ஒரு கயிறு திரிக்கும் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் நிறுவினால், அந்தப் பகுதியில் படித்த இளைஞர்களுக்கும், படித்த மாணவிகளுக்கும் வேலைவாய்ப்புக் கிடைப்பதோடு, அந்தப் பகுதி மக்களுக்கு ஓர் உதவியாகவும் இருக்கும். அமைச்சர் அவர்கள் பள்ளப்பட்டியிலே ஒரு ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளப்பட்டி என்பது, அங்கு கடைசிப் பகுதியிலே இருக்கின்றது. கொட்டாம்பட்டியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மையப் பகுதியிலே ஒரு கயிறு திரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் கொட்டாம்பட்டிக்கு மிக அருகில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் பள்ளப்பட்டி உள்ளது. பள்ளப்பட்டி ஆதி திராவிடர் கயிறு மற்றும் தென்னை நார் திரிக்கும் தொழிற்கூடம், 20 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் அருகில், மற்றொரு தொழிற்சாலை அல்லது கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், வியாபார ரீதியில் இலாபகரமாக இயங்க வாய்ப்புகள் மிகக் குறைவு. எனவே, கொட்டாம்பட்டியில் புதிய தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை. இப்பகுதியில் வசிக்கும் கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டுமாயின், அவர்கள் பள்ளப்பட்டி ஆதி திராவிடர் கயிறு திரிக்கும் தொழிற்சாலையில் உறுப்பினராகி, வேலைவாய்ப்பினைப் பெறலாம். மேலும், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தனிப்பட்ட முறையில் கயிறு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென விரும்பினால், அவர்கள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், மதுரை அவர்களை அணுகினால், அவர்களுக்கு மாதிரி திட்ட அறிக்கை, தொழில் அமைக்கத் தேவையான ஆலோசனைகள், கயிறு வாரியத்திடமிருந்து மானியம் பெறுவது குறித்த விவரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து அல்லது வங்கிகளிடமிருந்து நிதி திரட்ட ஆலோசனை ஆகிய அனைத்தும் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி என்பது மிக வறட்சியான பகுதி. ஆற்றுக்கால் தண்ணீர்கூட அந்தப் பகுதியிலே செல்வது கிடையாது. மழையை நம்பி தென்னை மரம் வளர்த்து, அதை வைத்துப் பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் அதை பரிசீலனை செய்து, கொட்டாம்பட்டியில்-- பள்ளப்பட்டி என்பது கடைசி பகுதி; அதற்கு, இந்தப் பக்கத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தூரம் போக முடியாது; ஆகையால், கொட்டாம்பட்டி ஒன்றியத்திலே ஒரு மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, அமைச்சர் அவர்கள் அரசுமூலமாகக் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்று கேட்க விரும்புகின்றேன். தனியார் கேட்டால், லோன் தரப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், loan கொடுப்பதை மறுக்கிறார்கள். ஆகவே, அரசு உத்தரவிட்டு, கேட்கின்ற நபர்களுக்கு, கயிறு திரிக்கும் தொழிற்சாலை வைக்கும் தனியார்களுக்கு, உடனடியாக loan வழங்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி ஆலோசிக்கலாம். இருந்தாலும்கூட, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த வேலையற்ற இளைஞர்கள் கயிறு திரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு மானியத்துடன் ரூ.2 இலட்சம் வரை வங்கிகள்மூலம் கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதில் அதிகபட்சமாக ரூ.7,500 மானியம் கிடைக்கும். கயிறு வாரியத்தினுடைய மானியத் திட்டங்கள் வேறு இருக்கின்றன. கயிறு சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்க முற்படும் தொழில் முனைவோர்களுக்கு மத்திய அரசின் கயிறு வாரியம் அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்க இருக்கிறது. Coir Board-ன் கீழ் மகிளா கயிறு யோஜனா திட்டத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்குப பயிற்சி அளித்து, 95 சதவிகித மானியத் தொகையுடன், மின் மோட்டார் பொருத்திய இராட்டை வழங்கப்படுகிறது. இராட்டையின் மொத்த விலையான ரூ.3,350-ல், மத்திய அரசு மானியம் ரூ.2,512-50; மாநில அரசு மானியம் ரூ.670; மற்றும் பயனாளிகளுடைய பங்கு 5 சதவிகிதம், அதாவது ரூபாய் 167.50-தான். ஆகவே, இந்தத் திட்டத்தில் மகளிரும் சேர்ந்து பயன்பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**95—**

**தனி வட்டம்**

***14784 திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பொளூமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் மிகப் பெரிய மாவட்டமாக இருந்த வேலூர் மாவட்டம், இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருவண்ணாமலை என்கிற ஒரு மாவட்டம் உருவானது. தலைவர் கலைஞர்தான் அதை உருவாக்கித் தந்தார். உருவாக்கித் தந்த அந்த மாவட்டத்திலே இதுவரையில் ஒரு வட்டம்கூட புதிதாக உருவாக்கப்படவில்லை. ஆனால், வேலூர் மாவட்டத்திலே காட்பாடி என்கிற புதிய வட்டம் உருவாக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயே பொளூமல்லூரை ஒரு வட்டமாகப் பிரிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். ஆனால், மறுக்கப்பட்டது. இப்போது சேத்துப்பட்டு, வளர்ந்து கொண்டிருக்கிற ஒரு நகரம்; அதைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு வட்டம் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, மக்கள் மத்தியிலே இருக்கிறது. குறிப்பாக, ஒரு காலத்திலே, பிரிட்டிஷ்காரருடைய ஆட்சிக் காலத்திலே, சுமார் 105 ஆண்டுகளுக்கு முன்பு, சேத்துப்பட்டு ஒரு தாலுகாவாக இருந்துள்ளது. அப்போதெல்லாம் தாலுகாவிற்குப் பெயர் துக்கிடி என்று சொல்வார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** ஒரேயொரு நிமிடம். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இல்லை, கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** சேத்துப்பட்டு துக்கிடி, அதாவது வட்டம் என்பது அப்போதே இருந்துள்ளது. எனவே, அந்த வட்டம் மீண்டும் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலே, ஒரு வட்டம்கூட பிரிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். கடந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, தேர்தல் ஆணையத்தினுடைய எல்லை வரையறைப் பணிகள் நடந்திருந்தாலும், எல்லை வரையறைப் பணிகள் நடக்கின்ற காலத்திலே புதிய வட்டங்கள் தோற்றுவிக்கக் கூடாது என்று அவர்களுடைய அறிக்கை இருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த நடவடிக்கையால் மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், கடந்த ஆண்டு, தண்டராம்பட்டைப் புதிய வட்டமாகத் தோற்றுவிப்பதற்காக, இதே அவையிலே அறிவிப்பைச் செய்தேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தமிழகத்திலேயே முதல் வட்டமாக கடந்த ஆண்டு அறிவித்தது, திருவண்ணாமலை மாவட்டத்தில் நம்முடைய தண்டராம்பட்டுதான் என்பதை இங்கே அவையிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருப்பது, சேத்துப்பட்டு ஒன்றியத்தைத் தனி வட்டமாகப் பிரிக்கவேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றார். அதற்குரிய வருவாய் கிராமங்கள் போதிய அளவிலே இருக்கின்றன. ஜனத்தொகையும் இருக்கின்றது. சுற்றளவு சற்றுக் குறைவாக இருந்தாலும், அதுபற்றி எதிர்காலத்திலேதான் அரசு பரிசீலிக்க முடியுமே தவிர, தற்சமயம் நிச்சயம் இயலாது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.





**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற சேத்துப்பட்டு நகரத்தை, எதிர்காலத்திலே தலைமையிடமாகக் கொண்டு, வட்டம் உருவாக்கப்படும் என்கின்ற ஒரு நல்ல அறிவிப்பைச் செய்திருக்கின்ற அமைச்சருக்கு நன்றியைச் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள், வட்டங்கள் பிரிப்பதைப்பற்றி நல்ல விளக்கங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், ஆரம்ப காலத்திலிருந்து இயங்கி வருகின்ற வட்டாட்சியர் அலுவலகங்கள், சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்ற பகுதிகளும் இருக்கின்றன. அதிலும், குறிப்பாக, சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மேட்டூர், ஒரு கோட்டத் தலைநகரம். அங்கே வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட, பழுதடைந்த கட்டடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும், மேட்டூரில், பல்வேறு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், அனல் மின்நிலையங்கள் போன்ற முக்கிய அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தால், பழுதடைந்த நிலையிலுள்ள மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடத்தை நடப்பாண்டில் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள், பழைய கட்டடத்தைப் புதிய கட்டடமாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்து வருகின்றார்கள். இந்த ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கக் கூடாது என்று முடிவெடுத்து, தமிழ்நாட்டில் இருக்கின்ற வாடகைக் கட்டடங்கள் அனைத்துக்கும், புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஆணையிட்டு, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்திருக்கின்றார்கள். கண்டிப்பாக, பழைய கட்டடங்களைப் புதிய கட்டடங்களாக, வருகின்ற ஆண்டிலே மாற்றுவதற்கு அரசு முடிவு

[2007 மே 10

செய்திருக்கிறது. அதிலே நடவடிக்கை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் சொன்ன அலுவலகத்தை புதிய கட்டடமாக இந்த அரசு நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரங்களைப் பிரிப்பதிலே இருக்கின்ற சிக்கல்களைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகள் வரையறை செய்யப்பட்டதற்குப் பின்னர்தான் அதைப்பற்றிப் பரிசீலிக்க முடியும் என்றும் ஏற்கெனவே கூறியிருக்கின்றார்கள். வரையறைப் பணிகள் எந்த நிலையில் இருக்கின்றன? அவற்றை வரையறை செய்வதிலே சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை நாங்கள் தெரிவித்தபோது, எங்களின் கருத்து கேட்டு அறியப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் மக்கள் பிரதிநிதிகளையோ, மற்றவர்களையோ அழைத்து, எந்தக் கருத்தையும் கேட்கவில்லையே? அதைக் கேட்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா? அதற்குப் பின்னர் மறுவரையறை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டதற்குச் சொல்கிறேன். தேர்தல் ஆணையத்தின் வரையறைப் பணிகளை ஆய்வு செய்ய, இந்த மாதம் 17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் தமிழகத்திற்கு வந்து, சுற்றுப்பயணம் செய்து, மக்களுடைய கருத்துகளை அறிந்து, உடனே அறிவிக்கவிருக்கின்றார்கள். அவர்களிடம் நாங்கள் தொடர்பு கொண்டபோது, எப்படியும் இன்னும் இரண்டு மாதங்களில் அவர்களின் பணிகள் முடிவடையும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஜூன் மாதத்திற்குள் முடித்துவிடுவோம் என்று தெரிவித்திருக்கின்றார்கள். தொகுதிகளைப் பிரிப்பதிலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் குறித்து, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, அவர்கள் வரையறுத்திருக்கின்ற நிலையிலே தொகுதிகள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அதில் ஆட்சேபனை ஏதாவது இருந்தால்,



2007 மே 10]

நிச்சயமாகக் கட்சிகளின் சார்பாகவும், மக்களின் சார்பாகவும் கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது; அதை மாற்றுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 196. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**196—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***10498 திரு. ராம. சுப்புராம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், கல்லூர் ஊராட்சி, கல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், திருமயம் தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தற்போதுள்ள ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கல்லூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. எனது திருமயம் சட்டமன்றத் தொகுதி, அரிமளம் ஒன்றியம், கல்லூர் கிராமமானது, சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட [illegible] ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். கல்லூர் ஊராட்சி, [illegible] ஊராட்சி, [illegible],

புதுநிலைவயல் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். போக்குவரத்து மிகுதியாக உள்ள மையப் பகுதியாகும். அதற்கு அருகிலே கே.புதுப்பட்டி என்ற கிராமத்தில் 10 கி.மீட்டர் தொலைவில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அங்கேயுள்ள மக்கள், காரைக்குடிக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருப்பதாலும் அந்தப் பகுதி, தொழிலாளர்கள் நிறைந்த தொழிற்சாலைகள், பேப்பர் மில், இதுபோன்றவை அமைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்து, என்னுடைய தொகுதியில்—இதுவரையில் கடந்த ஓராண்டுக் காலத்தில் எந்தவிதமான சலுகையும் அறிவிக்கப்படவில்லை; ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத்தர முன்வரவேண்டும். அப்படி முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருமயத்திற்கு ஆய்விற்குச் சென்ற நேரத்திலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராம. சுப்புராம் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே வைத்திருக்கிறார்கள். ஜனத்தொகை அடிப்படையிலேதான், நாம் P.H.C.-Primary Health Centre-ஆரம்பித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது, புதிய 2001 census-படி, புதிதாக நிறைய P.H.C. வேண்டுமென்று, 178 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று, மத்திய அரசாங்கத்திற்கு நாம் அனுமதி கேட்டு எழுதியிருக்கிறோம். நிச்சயமாக அதற்குரிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அனுமதி வருகின்ற நேரத்திலே, அங்குள்ள ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல, அவருடைய பகுதிக்கு முன்னுரிமை வழங்கி, தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிமளம் கூடுதல் வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, இப்போது கட்டட வசதிகளெல்லாம் முடிவுற்று இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகை தந்து, திறப்புவிழா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தற்போது நாம் நடத்திவருகின்ற 'வருமுன் காப்போம்' திட்டம், அனைத்துமே



இலவசமான ஒன்று. ஆனால், இன்றைக்கு காலையில் எனக்குக் கிடைத்த தகவல்படி, 'வருமுன் காப்போம்'...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்புராம், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ராம. சுப்புராம்:** அதில் வருகின்ற நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்கின்றபோது, அங்கே C.T. Scan-க்குப் பணம் கேட்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.T. Scan என்பதை, நம்முடைய Tamil Nadu Medical Service Corporation மூலமாகச் செய்து கொண்டிருக்கிறோம். அதற்குக் கட்டணம் வசூலித்து வருகிறோம். 'வருமுன் காப்போம்' திட்டம் நடைபெறும் இடத்திற்கு அதைக் கொண்டு செல்வதில்லை. 'வருமுன் காப்போம்' திட்டத்திற்கு வருகின்ற நோயாளிகளை refer செய்கின்ற நேரத்தில், அவர்கள் G.H.-க்குப் போகின்ற நேரத்தில், அந்தக் கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக, அந்த நடவடிக்கை இருந்து கொண்டிருக்கிறது. அதனைத் தனியாரைவிட, பாதியளவிற்கு நாம் குறைத்து வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களுக்கு 24 மணி நேரம் பேறுகால வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு சுகாதார ஊழியர் தங்கியிருக்க, குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டியதனுடைய அவசியம் கருதி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடியிருப்பு வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய இடங்களிலே, முந்தைய ஆட்சிச்

காலங்களிலே கட்டி வைத்திருக்கிறார்கள். அவை பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. முதலிலே, அவற்றைப் பராமரித்தாலே போதுமென்று. இருப்பதை முதலிலே maintain செய்யவேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கிராம மக்களுக்குப் பணியாற்ற மருத்துவர்கள், செவிலியர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை, இருப்பதைச் சரிசெய்து முதலிலே கொடுத்துவிட்டு, பிறகு புதிதாக அந்தப் பணிகளை நாங்கள் செய்ய இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**197—**

**கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

***19012—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியை உள்ளடக்கி இருக்கிற நாகப்பட்டினம் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அரசினுடைய முடிவிற்கு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக திட்ட அறிக்கை தயார் செய்து, அதற்கென்று consultant—ஆலோசகர்—நியமனம் செய்தல் மற்றும் அதற்கான தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி, பூம்புகார், மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய நான்கு தொகுதிகளிலும், மயிலாடுதுறையினுடைய துணைப் பதிவாளர் அலுவலகத்தினுடைய கட்டுப்பாட்டிலேதான், கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. சீர்காழி தொகுதியில் மட்டும், ஒரு நகரக் கூட்டுறவு வங்கி, ஒரு தொடக்க வேளாண்மை நிலவள வங்கி, 22 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 3 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சிக்கன சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 120 அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசினுடைய நிதியை அதிகமாகப் பெறவும், கூட்டுறவுத் துறை வேகமாக வளர்ச்சி பெறவும், பேராசிரியர் வைத்தியநாதன் கமிட்டிகூட, மத்திய அரசுக்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த, அறிக்கை தாக்கல் செய்ததை நாம் நன்றாக அறிவோம். எனவே, பொதுமக்களுக்கு அனைத்து வகைகளிலும் உதவக்கூடிய திட்டமாக இருப்பதால், அவசியம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமெனவும், சீர்காழி தொகுதியை உள்ளடக்கிய நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த, அரசு முடிவு செய்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். . .

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** என்னென்ன திட்டங்களை உள்ளடக்கியுள்ளது எனவும், எனவே எப்போது செயல்படுத்தப்போகிறார்கள் என்றும், விரைந்து செயல்படுத்துவார்களா என்றும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்கெனவே சட்டப் பேரவையிலே நாங்கள் அறிவித்தோம். அடுத்த ஆண்டு திண்டுக்கல், கரூர், வேலூர், சிவகங்கை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 5 புதிய மாவட்டங்களையும்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதாக அரசு தெரிவு செய்து அதற்கு வேண்டியவற்றைச் செய்வதில் முனைப்போடு செயல்பட்டதன் காரணமாக, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, அப்படிச் செயல்படுகிற ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டித் தரப்படும். அதோடுகூடிய அலுவலகங்கள் கட்டித் தரப்படும். அப்படி அங்கு கிடங்குகள் இருந்தால், அலுவலகம் மட்டும் தனியாகவும் கட்டித் தரப்படும். அதோடு அதற்கு வேண்டிய மின்னிணைப்பு—ஜெனரேட்டர் வசதியும்—செய்து தரப்படும். மின்னணுத் தராசு வாங்கித் தரப்படும். பணம் அதிகமாக வசூலாகிற காரணத்தினாலும், சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு ஊக்கத்தை அளிப்பதன்மூலமாக, விழிப்புணர்வை அளிப்பதன்மூலமாக, 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதம் என்று சொல்லுவதன்மூலமாக, அதிகமாகப் பணம் வசூல் ஆவதாலும், அதை எண்ணுவதற்காக அங்கே பணம் எண்ணுகிற machine—இயந்திரம்—கொடுக்கப்படும். Cash counters கட்டித் தரப்படும். அந்த மாவட்டங்களிலே, பழைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் பழுதடைந்திருந்தால், அவற்றையும் சீர்செய்து தரப்படும். இன்னும், பாதுகாப்பைக் கருதி, அதற்கெல்லாம்—compound wall—சுற்றுச் சுவர் கட்டித் தரப்படும். ஆக, இத்தகைய காரியங்களை இதுபோன்ற மாவட்டங்களில் மேற்கொண்டு, இந்தத் துறை முனைப்போடு செயல்படுவதற்காக திட்டம் போட்டு, ஒவ்வொரு மாவட்டமாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டு அந்த 5 மாவட்டங்களையும் அரசு முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**198—**

## அடிப்படை வசதி

**531—திருமதி மு. சந்திரா:** (*531)

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதி, சத்திரப்பட்டி, கிழவிகுளம், நல்லமநாயக்கன்பட்டி, சிவலிங்காபுரம், சேத்தூர் மேல்நிலைப்



பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதி, சத்திரப்பட்டி, கிழவிகுளம், நல்லமநாயக்கன்பட்டி, சிவலிங்காபுரம், சேத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரப்பட்டியைப் பொறுத்தவரையிலே அங்கு ஆண்கள், பெண்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கு போதுமான வகுப்பறைகளும் கிடையாது. அதேமாதிரி பெண்களுக்குக் கழிப்பிட வசதிகள் கிடையாது. அதேபோல, கிழவிகுளத்தில் பார்த்தீர்களானால், வகுப்பறைகள் கிடையாது. அங்கே compound—சுற்றுச் சுவர்—இல்லை. அங்கு பெண்களுக்குக் கழிப்பிடம் தேவைப்படுகிறது. முக்கியமாகக் கட்டித்தர வேண்டும். அதேபோல சிவலிங்காபுரம், நல்லமநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகள், ஊருக்கு outer side-ல் உள்ளன. அவற்றிற்கு விரைவிலே compound சுவரும், அதேபோல பெண்களுக்குக் கழிப்பிடமும் கட்டித்தர வேண்டும்; ஆய்வுக் கூடங்களும் கட்டித்தர வேண்டும். அதேபோல, சேத்தூரிலே பெண்களுக்குப் போதுமான கழிப்பிட வசதியும் இல்லை. அதேமாதிரி வகுப்பறைகளும் அதிகமாகக் கட்டித் தரும்படியும், ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தரும்படியும் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லிலே இரண்டு மாங்காய் அடிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு கல்லிலே 5 மாங்காய் அடிக்கக்கூடியதாக இது இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, சத்திரப்பட்டியிலே கடந்த ஆண்டு புதிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி உருவாக்கப்பட்டது. 10 வகுப்பறைகள்

ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவைப்படுகின்றன. அந்த 10 வகுப்பறைகளும் இந்த ஆண்டு, நபார்டு 8-வது திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அந்தக் கட்டடங்கள் அங்கே கட்டிக் கொடுக்கப்படும். கழிவறை வசதியும் அங்கே தேவையாக இருக்கிறது. இப்போது 3 கழிவறைகள் இருக்கின்றன. கூடுதலான கழிவறை வசதிகள் அங்கே உருவாக்கப்படும். கிழவிகுளம் பள்ளியிலும்கூட 7 வகுப்பறைகள் கூடுதலாகத் தேவைப்படுவதாக நான் அறிகின்றேன். அவற்றையும் இந்த ஆண்டு நபார்டு 8-வது திட்டத்தின்கீழ் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நல்லமநாயக்கன்பட்டி, சிவலிங்காபுரம் போன்ற பள்ளிகள் ஊருக்கு வெளியே இருக்கக்கூடிய காரணத்தினாலே compound சுவர் அமைக்கக்கூடிய அந்தப் பணிக்கும் அரசு நிச்சயமாக முக்கியத்துவம் கொடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் இந்தக் கேள்வியின்மூலமாக எழுப்பியிருக்கக்கூடிய அந்த 5 பள்ளிகளுடைய விவரங்களையும், நான் அங்கு இருக்கக்கூடிய முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெற்றிருக்கிறேன். வரக்கூடிய ஆண்டுகளில் நிச்சயமாக அந்தப் பணிகளை அங்கே நிறைவேற்றித் தருவோம் என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வழங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா. நன்றி சொல்லுங்கள் சீக்கிரம்.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் கட்டித் தரும்படி அரசை வலியுறுத்துகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

முற்பகல் 10-05

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற கேளூர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகக் கடந்த ஆண்டு, மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு, உயர்த்தித் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பள்ளியிலே இருக்கின்ற பள்ளிப் பிள்ளைகளுக்கு, வகுப்பறைகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, ஆறு வகுப்பறைகள் அங்கே தேவை. அவற்றை இந்த அரசு கட்டித் தருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடனேயே, நாங்கள் தெரிவித்தபடி, எந்தெந்தப் பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, கூடுதலான வகுப்பறைகள் தேவைப்படுகின்றனவோ, அங்கு நிச்சயமாக, தொடர்ச்சியாக, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே நபார்டு வங்கியினுடைய உதவியோடும், அதைப்போல, 6, 7, 8 ஆகிய வகுப்பறைகளுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழும், நிச்சயமாகக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறோம். தொடர்ந்து அவர்கள் கேட்டிருக்கக்கூடிய அந்தப் பள்ளியும், கருத்தில் கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது, நக்சலைட் உருவாகும் சூழ்நிலையைத் தவிர்க்குமுகத்தான், ரூ.10 கோடியை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது சிறப்பு நிதியாக வழங்கியது. இன்று, ஆளுகின்ற அரசும், அதைத் தொடர்ந்து ரூ.7 கோடியை தருமபுரி மாவட்டத்திற்குமட்டும் தனியாக வழங்குகிறது. இந்தச் சூழ்நிலையிலே தருமபுரி மாவட்டத்தில், குறிப்பிட்ட ஊராட்சிகளில் நக்சலைட் உருவாகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இந்தப் பணமானது செலவழிக்கப்படுகிறது. அந்த வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது, தொடக்கப் பள்ளியாக இருந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** தொடக்கப் பள்ளியாக இருந்த ஒரு பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** History-க்குப் போகாதீர்கள். சம்பந்தப்பட்ட கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** விஷயத்திற்கு வருகிறேன். நடுநிலைப் பள்ளியாக இருந்த அந்த பள்ளியை, மீண்டும் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியது. இதில் என்ன விஷயம் என்றால், இந்த நக்சலைட்

உருவாகும் நிலையைத் தவிர்க்குமுகந்தான் நாயக்கன்கொட்டாய் என்ற பள்ளியை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரித்திரம் சொல்லக் கூடாது.

**திரு. கே.பி. அன்பழகன்:** உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும்போது, அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு இலட்சம் ரூபாய் பணம் செலுத்தாமலேயே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது தரம் உயர்த்தித் தந்தது. இன்று, அதுபோல, கோணங்கிநாயக்கனஹள்ளி பள்ளி, காமலாபுரம் பள்ளி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேட்கிறீர்களா?

**திரு. கே.பி. அன்பழகன்:** ஆகிய இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும், அரசுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை, இரண்டு இலட்சம் ரூபாயை அவர்கள் செலுத்தாமலேயே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி இதுதானே? உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்துகிறபோது, அந்தப் பள்ளிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பொதுமக்கள் முன்வைப்புத் தொகையாகக் கட்ட வேண்டுமென்பது ஒரு விதியாக வகுக்கப்பட்டிருக்கிறது. அவர், ஏற்கெனவே, அந்த தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருதி, அந்த விதி தளர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். எனவே, அதுகுறித்து அரசு ஆய்விலே எடுத்துக்கொள்ளும். ஏற்கெனவே, அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று, அவர் இப்போது ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை ஆகியவற்றை அரசு ஆய்விலே எடுத்துக்கொண்டு, உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டித் தொகுதியில், கோசத்திரம் என்னும்



கிராமத்தில், அரசு நடுநிலைப் பள்ளி தற்போது இயங்கி வருகிறது. அந்தப் பள்ளியையொட்டி, வேறு எங்கும் உயர்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தால், என்னுடைய பண்ருட்டித் தொகுதியில் இருக்கிற கோசத்திரத்திற்கு, அரசுக்குக் கட்ட வேண்டிய பணம் கட்டியாகிவிட்டது; போதுமான மாணவர்களும் இருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கோசத்திரம் அரசு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, அந்தப் பள்ளிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், பணம் கட்டாமலேயே கொடுங்கள் என்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், பணம் கட்டிவிட்டேன் உடனடியாகக் கொடுங்கள் என்று கேட்கிறார். எனவே, இதைப் பொறுத்தமட்டிலே, ஏற்கெனவே, நீண்ட நெடுநாட்களாகவே பணம் கட்டிவிட்டு, மற்ற இதர இருக்கக்கூடிய விதிமுறைகளையும் பூர்த்தி செய்து, பல பள்ளிகள் இப்போது காத்திருக்கின்றன. எனவே, அவற்றுக்கான முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்து, எந்தெந்தப் பள்ளிகள் நீண்ட காலமாகக் கட்டிக் காத்திருக்கிறார்களோ அந்த இடத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலை, பக்கத்திலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமென்ற மற்ற பல கருத்துகளும் அதிலே இருக்கின்றன; எனவே, அதையெல்லாம் ஆராய்ந்து, நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, அரசு கனிவோடு பரிசீலித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரைச் சரியாக அழைத்ததற்கு நன்றி. குடியாத்தம் தொகுதி, வளத்தூர் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு, இரண்டு இலட்சம் ரூபாய் கட்டினால் மாத்திரமே போதாது. அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளியிலிருந்து, மேல்நிலைப் பள்ளியாக இருந்தால், ஏறத்தாழ, அதற்கு எட்டு கிலோ மீட்டர் அல்லது ஒன்பது கிலோ மீட்டர் தூரம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதேபோல, அந்தப் பள்ளியிலிருந்து போதுமான எண்ணிக்கையிலே மாணவர்கள், அடுத்த நிலைக்குச் செல்வதற்கு இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இட வசதி, கட்டட வசதி எல்லாம் போதுமானதாக இருக்கிறதா என்று அரசு ஆராய வேண்டும். பணம் கட்டுவதை மாத்திரம் கருத்திலேகொள்ளாமல், அங்கே இதர வசதிகளும் இருக்கின்றனவா என்பதை அரசு கருத்திலேகொண்டு, அதற்கான உரிய முன்மொழிவுகள் அரசிற்குக் கிடைக்கப் பெறும் என்று சொன்னால், அரசு அதுகுறித்து நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**199—**

## புறவழிச் சாலை

***17—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவிற்குரிய திருத்திய பதிலை வழங்க நான் அனுமதி கோருகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கக்கூடிய தஞ்சைக்குப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம்





அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிதியாண்டிலே நிலம் கையகப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கின்றார்கள். தஞ்சை நகரைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே ஒரு பகுதியில் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு இருக்கின்றது. விடுபட்டிருக்கின்ற பகுதியான நாகை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி வழியாக மைசூர் மாநிலத்திற்குச் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையையும் பெரம்பலூரில் இருந்து தஞ்சாவூர் வரக்கூடிய மாநில நெடுஞ்சாலையையும் இணைக்கக்கூடிய அந்தப் பகுதி, புறவழிச் சாலையாக அமைக்காமல் விடுபட்டிருக்கிறது. அந்த நகருக்குள் போக்குவரத்துகள் சென்று நெரிசலை ஏற்படுத்துகின்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கும் புறவழிச் சாலை அமைப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கி இருக்கின்றார்கள். நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதேபோல அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் பழனி மாணிக்கம் அவர்களும், அந்தத் தொகுதியினுடைய, சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அண்ணன் உபயதுல்லா அவர்களும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கின்றார்கள். மேலும், நிலம் கையகப்படுத்துகின்ற பணி மாநில அரசினுடைய பணி. அதற்காக சாலை அமைக்கின்ற பணியை, மத்திய அரசு ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று அவர்கள் உறுதி அளிக்கின்றார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு புறவழிச் சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரனுக்குப் பதிலாக திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி.

**திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை புறவழிச் சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணி விரைவிலே தொடங்கப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கு, தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாகவும், எங்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதி கடுமையான போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதி என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, திருப்பூருக்கு அருகிலே, அந்நேரமான அவினாசி பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையையும் பல்லடம் வழியாகச் செல்கிற தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கிற வகையில், திருப்பூருக்கு அருகிலே ஒரு புறவழிச் சாலை உருவாக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி ஆண்டில், அதாவது 2006-2007 ஆம் நிதி ஆண்டிலே, நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், திருப்பூர் பகுதியினுடைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகச் சுற்றுச் சாலையும் அதில் இருக்கின்ற ஆறு சாலைகளையும் வலுப்படுத்துவதற்காக ரூ.70 கோடி நிதி ஒதுக்கி, அதற்குரிய பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு திருப்பூர் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிடுவது, தேசிய நெடுஞ்சாலை எண் 67; அதாவது, நாகப்பட்டினம், கூடலூர், மைசூர் சாலையையும், தேசிய நெடுஞ்சாலை எண் 47 - சேலம், கொச்சின் சாலையையும் இணைத்து ஒரு புறவழிச் சாலையைத் தனியாக அமைக்க வேண்டும் என்று கோருகிறார். அதுகுறித்து எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**200—**

## கிளை மருத்துவமனை

***3432—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, பூத்துறை கிராமத்தில் கால்நடை கிளை மருத்தவமனை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், பூத்துறை கிராமத்தில் புதியதாகக் கால்நடை கிளை நிலையம் தொடங்க, தற்போது அரசு நாப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூத்துறை ஊராட்சியைச் சுற்றிலும், அதன் அருகில் உள்ள 15 கிராமங்களைச் சுற்றிலும் 5 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. அருகிலே மருத்துவமனை இருந்தாலும், கால்நடை மருத்துவர்கள் உரிய நேரத்தில் இல்லாத காரணத்தினால், கால்நடைகளுக்குச் சிகிச்சை பெற முடியாமல் போகிறது. ஆகவே, வானூர் தொகுதி, பூத்துறை ஊராட்சியில் புதிய துணைக் கால்நடை மருந்தகம் அமைக்க, அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்களும், 5 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட பூத்துறை கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில், திருச்சிற்றம்பலம் என்ற கிராமத்தில், கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல; பூத்துறை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்திற்கும் குறைவாகதான் உள்ளது. மேலும் இவ்வாண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், 40 புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்க அனுமதி அளித்துள்ளார்கள். ஆதலால், கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பின திரு. ந. கணபதி, (குறுக்கீடு) சரி. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அவினாசி தொகுதியில், சந்தனூர் ஊராட்சியில் ஒரு கால்நடை

மருத்துவமனையும், அவினாசி நகரில், ஆவின் பால் booth-களும் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவினாசி தொகுதி உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து உரிய முடிவினை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மதுரையில் 'தினகரன்' நாளிதழ் அலுவலகம் தாக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரையில், 9-5-2007 அன்று 'தினகரன்' பத்திரிகை அலுவலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கோ. அரி, திரு. சி. சண்முகவேலு, திரு. ஆர். சின்னசாமி, திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. செ.ம. வேலுசாமி, திரு. சொ. கருப்பசாமி, திரு. சி. துரைராஜ், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. ஆர்.டி. கணேசன், திரு. ஆ. அருண்மொழிதேவன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. கரி. இராமசாமி, திரு. சு. சிவராஜ், திரு. கோவை தங்கம், திரு. விடியல் எஸ். சேகர், திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. என்.ஆர். ரங்கராஜன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. இல. வேலுசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக திரு. சி. கோவிந்தசாமி, செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. வே. மாரிமுத்து,





திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், ம.தி.மு.க. சார்பாக திரு. வீர. இளவரசன், திரு. ஆர். ஞானதாஸ், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக திரு. கு. செல்வம் ஆகியோர் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாகப் பேசலாம்; மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழின் கருத்துக் கணிப்பால், மதுரையில் வன்முறை வெறியாட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. இது ஒரு பொதுப் பிரச்சினையால் ஏற்பட்டதும் அல்ல; மக்களின் அன்றாடப் பிரச்சினையால் ஏற்பட்டதும் அல்ல; ஒரு குடும்பத்திற்குள் நடக்கும் பிரச்சினையால் ஏற்பட்ட பிரச்சினையாகும். ** முதலமைச்சர் அதிகாரப் போட்டியால் ஏற்பட்ட தற்போது மோதல் நடைபெற்றுக் குடும்பத்திற்குள்ளேயே கொண்டிருக்கின்ற ஒரு நிலை. 'தினகரன்' பத்திரிகை, தொடர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலையில், சிண்டு முடியும் வேலையைச் செய்து கொண்டிருக்கின்ற ஒரு நிலையில், முதலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. டி. ஜெயக்குமார்:** 'தினகரன்' நாளிதழ் ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டது. எங்களுடைய அறிவு முதிர்ச்சியால் அதனை நாங்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டோம். பிறகு, பாட்டாளி மக்கள் கட்சியைப்பற்றிக் கருத்துக் கணிப்பு வெளியிட்டு, அவர்களிடையே கொந்தளிப்பு ஏற்படுத்தியதில், இன்றளவிலும் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடையே குழப்பத்தை ஏற்படுத்த, ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டு, உயிர்ச்சேதம் ஏற்படும் அளவிற்கு மதுரையில் வன்முறை வெறியாட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. அரசுப் பேருந்துகளை அடித்துச் சேதப்படுத்தி, பொதுமக்களுக்குப் பெரும் இடையூறை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். முதலமைச்சரின் வாரிசு அரசியலில், 'தினகரன்'

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஊழியர்கள் 3 பேர் பரிதாபமாக, கோரச் சம்பவம் ஏற்பட்டு, உயிரிழந்திருக்கின்றார்கள். இதனைப் பார்க்கும்போது, தமிழகத்தில் காவல் துறை முழுமையாகச் செயல் இழந்து விட்டது என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது. மதுரையில், தி.மு.க.வினரால் பெரிய அளவில் வன்முறை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இதில் ஈடுபட்ட தி.மு.க.வினர்மீது, இதுவரை காவல் துறையினரால் எந்தவிதமான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், மக்கள் நலனுக்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் செய்தாலே, மாவட்டக் கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவரையும் அடித்துத் துன்புறுத்திச் சிறையில் அடைக்கின்றீர்கள். ஆனால், மதுரையில் நடைபெற்ற வன்முறை வெறியாட்டங்களுக்குத் தெளிவான தொலைக்காட்சி ஆதாரங்கள் உள்ளன. கட்டடங்களைச் சேதப்படுத்தியது யார், தீ வைத்தது உட்பட வன்முறையில் ஈடுபட்டவர்கள் யார், யார் என்பது தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-20*

இதுகுறித்து, காவல் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், நடைபெற்ற சம்பவங்களைக் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. 'சன் டி.வி.'-யிலேயே குற்றவாளிகளின் பெயர்ப் பட்டியல்கள் வெளியிடப்பட்ட பின்னரும், அவர்களைக் காவல் துறையினர் இந்த நேரம் வரையில், கைது செய்யாமலிருப்பது கண்டிக்கத்தக்கது. காவல் துறை மற்றும் உள் துறை பொறுப்பை ஏற்றிருக்கின்ற ஒரு முதலமைச்சர், சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றத் தவறிவிட்டார் என்றே நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம். காவல் துறையை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. அழகிரியினுடைய பேச்சைத்தான் காவல் துறையினர் கேட்கின்றார்கள். அழகிரிக்குப் பயந்து, காவல் துறையினர் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. காவல் துறையைத் தன்னுடைய கட்டுக்கோப்பில் வைத்துக்கொள்ளவில்லை. உள் துறையும் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. தன்னுடைய குடும்பத்தையும் அவர் கட்டுக்கோப்பில் வைக்கமுடியவில்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன. அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, காவல் துறை மிகுந்த கட்டுக்கோப்புடன் இருந்தது. அம்மாவினுடைய ஆட்சியிலே, இதுபோன்ற சம்பவங்கள் எங்கேயும் நடைபெற்றது இல்லை. முதலமைச்சராகிய உங்கள் காலத்திற்குப் பிறகு, தி.மு.க.-வில் கோஷ்டிகள் ஏற்பட்டு, அவர்களுக்குள்ளேயே



பிரச்சினைகள் ஏற்படும் என்பது பொதுவான கருத்தாக இருந்தது. ஆனால், நீங்கள் இருக்கின்றபோதே, தற்போது பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற முடியாத ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். உங்களுக்குப் பின்னர் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு முதலமைச்சராக நீங்கள் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை, கோரிக்கையை நாங்கள் இங்கே வைக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி செய்கின்ற தகுதியை நீங்கள் முற்றிலுமாக இழந்துவிட்டீர்கள். ஆளுங்கட்சியான தி.மு.க.வினருக்கே தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லையென்றால் எதிர்க்கட்சிகளுக்கும், சாமானிய மக்களுக்கும் எப்படி இந்த ** அரசால் பாதுகாப்பு அளிக்க முடியும்? ஆகவே, மத்திய அரசு இந்த ** அரசினை உடனடியாக 356-ஐப் பயன்படுத்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** உடனடியாக பொதுமக்கள் சட்டம்-ஒழுங்கைப் பேணிக் காக்காத இந்த அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் நாங்கள் இங்கே வைக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியேறுகிறீர்களா? (கூச்சல்-குழப்பம்) முதலில் அமைதியாக உட்காருங்கள்.

(இராஜினாமா செய், இராஜினாமா செய், முதலமைச்சரே இராஜினாமா செய் என்று கூச்சலிட்டவாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதுரையிலே, 'தினகரன்' பத்திரிகை அலுவலகத்திலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணியாற்றிய பத்திரிகையாளர்கள், கோபி, வினோத், முருகராமலிங்கம் ஆகிய மூன்று பேர்கள் பரிதாபமான முறையிலே, சிலரால் தாக்கப்பட்டு உயிரிழந்து இருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு, காங்கிரஸ் பேரியக்கம் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்ற இந்த நேரத்தில், பத்திரிகை சுதந்திரம் என்ற பெயரிலே, பல்வேறு நடப்புக்கள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகையாளர் சுதந்திரம் என்ற பெயரில் கருத்துக் கணிப்பு என்று சொல்லி, அந்த கருத்துக் கணிப்பை தேவையற்ற நேரத்திலே, எதற்காக இந்த நேரத்திலே கருத்துக் கணிப்பு வெளியிட வேண்டுமென்று முறையில்லாமல், ஒரு பொய்யான கருத்துக் கணிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-25*

உதாரணத்திற்கு, மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற நம்முடைய அமைச்சர்கள் 13 பேர்கள் இப்போது இருக்கிறார்கள். அந்த 13 பேர்களிலே, ஒருவருக்கு மட்டும் 78 சதவிகிதம் என்றும், இந்த நாட்டிலே மிகச் சிறந்த பொருளாதார மேதை என்று சொல்லப்படுகின்ற திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கு, உலக நாடுகளிலே எல்லாம் அவர்களுடைய பொருளாதாரத் திறமை குறித்துப் போற்றப்படுகின்ற ஒரு நிலையிலே இருக்கின்றவருக்கு, அத்தனை நாடுகளையும் சுற்றிப் பார்த்து அறிந்தவருக்கு, நீண்ட நெடுங்காலமாக நாடாளுமன்றத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய அப்படிப்பட்டவருக்கு, 27 சதவிகிதம்தான் மக்களிடத்திலே ஆதரவு இருக்கிறது என்றும், இப்போது மருத்துவத் துறையிலே அமைச்சராக இருக்கின்ற அன்புமணி அவர்களுக்கு ஒரு சதவிகிதம்தான் ஆதரவு இருக்கிறது என்பதைப் போன்றும் கருத்து சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டரை ஆண்டு, மூன்றாண்டுக் காலத்திலே, மருத்துவத் துறையிலே அன்புமணி அவர்கள் ஆற்றியிருக்கின்ற சாதனைகளைப்பற்றி பல்வேறு நாடுகளிலே இருப்பவர்கள் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அருமை நண்பர் டி.ஆர். பாலு அவர்கள், இப்போது கப்பல் மற்றும் சாலை போக்குவரத்துத் துறை அமைச்சராகச் சிறப்பான முறையில் பணியாற்றி, எங்குப் பார்த்தாலும் தங்க நாற்கர சாலைகள் அமைப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு நல்ல சாலைகளை உருவாக்கிக் கொடுத்து, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். அதேபோன்று, மணிசங்கர ஐயர் அவர்கள், இந்த நாட்டிலே Foreign Service பற்றிப் படித்துவிட்டு, ராஜீவ் காந்தியின் ஆலோசகராகப் பணியாற்றி, பல்வேறு பொறுப்புகளில் இருந்து அமைச்சர் பொறுப்பிலே இருப்பவர்கள். அதேபோன்று, எங்களுடைய மக்கள்



தளபதி வாசன் அவர்கள், இப்போது அமைச்சர் பதவியிலே இருந்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், இப்போது மத்திய அமைச்சரவையிலே சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இரயில்வே துறை இணை அமைச்சராக இருக்கின்ற வேலு அவர்கள், பல்வேறு சிறப்புகளைப் பெற்று இரயில்வே துறையிலே நல்ல இடத்தைப் பிடித்து, தமிழக மக்களுக்குச் சிறப்பான சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒன்றும் இல்லை என்று சொல்லி, ஒருவருக்கு மட்டுமே 61 சதவிகிதம், 71 சதவிகிதம் என்றெல்லாம் கருத்துக் கணிப்பை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள்.

இதனாலே எல்லாக் கட்சி மக்களும், தமிழகத்தில் இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்க நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்கள், நம்முடைய கூட்டணிக் கட்சியிலே இருக்கின்ற அத்தனைபேரும் மனம் புண்பட்டிருக்கிறார்கள். புண்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில்— பத்திரிகையிலே கருத்துக் கணிப்பு சொல்வது, அவர்களுடைய கணிப்பட்ட விஷயம்; ஆனால், ஒருவரை உயர்த்திச் சொல்ல வேண்டும் என்ற காரணத்தினாலே மற்றவர்களைத் தாழ்த்திச் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இன்றைக்கு நாட்டிலே இல்லை. அவர்களுடைய பத்திரிகை, அந்தப் பத்திரிகைக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள். அவர்கள் நூற்றுக்கு நூறு சதவிகிதம்கூட தாம் உயர்ந்தவர்கள் என்று போட்டுக்கொள்வதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அதே நேரத்திலே, மற்றவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொன்னால், அதிலும் ஒரு கூட்டணியிலே இருப்பவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொன்னால், எவ்வளவு மனம் புண்படும் என்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று, தலைவர் அவர்களுக்கு, நம்முடைய முதல்வர் அவர்களுக்கு 83 வயதாகிறது. ஆனால், 25 வயது இளைஞரைப் போன்று காலையிலே 9-20 மணிக்கெல்லாம் இங்கே நம்முடைய சபாநாயகர் அலுவலகத்திலே அமர்ந்து இன்றைக்கு என்ன பணி என்றும், எப்படிச் செய்ய வேண்டும் என்றும் ஆலோசித்து, 9-30 மணியிலே இருந்து சில நேரங்களில் 2-00 மணி வரைகூட இங்கே அமர்ந்துகொண்டு, சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவருக்குப் பின்னாலே ஒரு வாரிசு யார் என்று கேட்க வேண்டிய அவசியம் என்ன? இன்றைக்கு இந்த நாட்டிலே அதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது? சிறந்த அரசியல்வாதி யார்; அவருக்குப் பின்னாலே அரசியல்வாதி யார் என்று கேட்க வேண்டிய அவசியம் இந்தப் பத்திரிகையாளருக்கு என்ன வந்துவிட்டது? அவருக்கு ஏதாவது உ[illegible]

நலம் சரியில்லையா? நன்றாக, சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிற முதலமைச்சருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை, ஒரு கருத்துக் கணிப்பு தேவைதானா என்பதை இந்த நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதற்காக, மதுரையிலே நடைபெற்ற சம்பவத்திற்கு நாங்கள் வக்காலத்து வாங்குவதாக யாரும் எண்ணிவிடக் கூடாது. மதுரையிலே நடைபெற்ற சம்பவம், 'தினகரன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம், அதேபோன்று 'சன் டி.வி.' தாக்கப்பட்ட சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதிலே எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலே, எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அமைதிப் பூங்காவான தமிழகத்தில், ஜனநாயகத்திலே வன்முறைக்கு ஒருபோதும் இடமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்ற இந்த நல்ல நேரத்தில், பத்திரிகைகள்—ஓர் அரசு நடந்துகொண்டிருக்கிறது; நடந்துகொண்டிருக்கின்ற அரசுக்குப் பத்திரிகைகள்—சீரோடும், சிறப்போடும் நல்வழி காட்டுகின்ற வகையிலே, ஜனநாயகத்தின் ஒரு தூணாக இருக்கின்ற பத்திரிகைகளாகச் செயல்பட வேண்டுமேயொழிய, பத்திரிகைகளே இப்படிப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கி, ஓர் அமைதியின்மையைத் தமிழகத்திலே உண்டாக்குவதற்குக் காரணமாக இருப்பதை ஒருபோதும் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளாது. அதனாலே, நேற்று நடைபெற்ற சம்பவத்திற்கு, காங்கிரஸ் கட்சி தன்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், அங்கே இறந்த அந்தப் பத்திரிகை அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுடைய குடும்பத்தாருக்கு முதலமைச்சர் அவர்கள், இரண்டு இலட்சம் ரூபாய் நிதி கொடுப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களின் நலன் காக்கவேண்டிய இந்த அரசு, பத்திரிகையாளர்கள் நலனிலே எப்போதும் அக்கறை கொண்டிருக்கின்ற இந்த அரசு, அவர்களுக்கு இன்னும் நிதியினை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை இங்கே வைக்கின்றேன். இதற்குக் காரணமானவர்கள், யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும், அது பணியாற்றத் தவறிய காவல் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நீங்கள் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அமர்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' செய்தித்தாளில் கருத்துக் கணிப்பு என்ற பெயரால் ஒரு செய்தி வெளியிட்டதன் எதிரொலியாக, மதுரையிலே ஏற்பட்ட அசம்பாவிதத்தில் மூன்று பத்திரிகையாளர்கள் இறந்திருக்கிறார்கள். அந்த அலுவலகத்திலே பணியாற்றிய கணினிப் பொறியாளர்கள் இருவர், கோபி, வினோத் மற்றும் காவலாளியாகிய முத்துராமலிங்கம் என்ற அந்த மூன்று பேரும் இறந்திருப்பது, நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே, இறந்த அந்த மூன்று பேருக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேவேளையில், இப்போது பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயராலே, கருத்துக் கணிப்பு வந்திருக்கிறது. பத்திரிகைச் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும், வரவேற்கிறோம். அதேவேளையிலே, 'Ethics' என்று சொல்வார்களே, பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். வானளாவிய சுதந்திரம் இருக்கிறது என்ற பெயராலே, ஒரு செய்தித்தாள் தேவையில்லாத கருத்துக் கணிப்பை வெளியிட்டிருக்கிறது. இப்போது தேர்தல் காலம் அல்ல. தேர்தல் காலத்திலே கருத்துக் கணிப்பு என்பது வழக்கமாக வந்துகொண்டிருக்கிற ஒன்று. ஆனால், தேர்தல் இல்லாத சூழ்நிலையில், தமிழகத்தில் அமைதியான ஒரு நல்ல ஆட்சி நடந்துகொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், முதலமைச்சர் அவர்களுக்குப் பொன் விழா எடுக்கிற இந்த வேளையில், ஓர் அசம்பாவிதம், மிகப் பெரிய ஒரு பிரச்சினை ஏற்பட்டிருப்பது, நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. வேதனை அளிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்றுகூட எங்களிடத்திலே—நாங்கள் இன்று பத்திரிகையிலே செய்தி வந்ததாகச் சொல்கிறோம்—'இப்படிப்பட்ட ஓர் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கிறது; மூன்று பேர் இறந்திருக்கிறார்கள்; ஆகவே, எனக்குப் பொன்விழா வேண்டாம்' என்று எங்களிடத்திலே வற்புறுத்திச் சொன்னார்கள். தோழமைக் கட்சியிலே இருக்கிற நாங்களெல்லாம், "நீங்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ள வேண்டும்; இது வேண்டாம் என்று மறுப்புத் தெரிவிக்கக் கூடாது; இது ஒரு பிரச்சினை; இந்தப் பிரச்சினை தனி; இந்த விழா திட்டமிடப்பட்டிருக்கிறது; இந்திய நாட்டினுடைய பிரதமர் வருகிறார்கள்; நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சியினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி வருகிறார்கள்; நாடாளுமன்றத்தினுடைய சபாநாயகர் வருகிறார்கள்; ஆகவே, நீங்கள்

இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தியிருந்தோம். வற்புறுத்தியும்கூட, அவர் ஒத்துக் கொள்ளவில்லை. மௌனமாக இருந்தார்கள். நாங்கள் கட்டாயம் விழா நடந்தே தீரும் என்றும், பொன் விழா நடத்த வேண்டும், நடந்தே தீர வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்திவிட்டு வெளியிலே வந்திருக்கிறோம். இந்த நிலையிலே, முதலமைச்சர் அவர்கள், பொன் விழாகூட வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, இந்தத் துயரச் சம்பவம் அவரது மனதை உறுத்தியிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; எங்களை வைத்துக்கொண்டே காவல் துறை அதிகாரிகள், தலைமைச் செயலாளர் உட்பட அனைவருக்கும் உத்தரவிட்டார்கள். இந்தச் சம்பவத்திலே யார் ஈடுபட்டிருந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதையும், கண்டித்ததையும் நாங்களெல்லாம் கண்கூடாகப் பார்த்தோம் என்ற காரணத்தால், முதலமைச்சர் அவர்களின் நிருவாகத் திறமைக்கு, உரிய நடவடிக்கைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே வெளிப்படையாகவே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சம்பவம் மிகச் சோகமான சம்பவம். அதிலே நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் என்பதை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், பத்திரிகை தர்மம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம்.

இப்பொழுது, தமிழ்நாட்டிலே கருத்துக் கணிப்பு, இந்திய நாட்டிலேகூட கருத்துக் கணிப்பு. சமீபத்தில், உத்தரப்பிரதேசத்தினுடைய சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடந்தேறியிருக்கிறது. அந்த உத்தரப்பிரதேச சட்டப் பேரவைத் தேர்தல் குறித்து நான்கு ஊடகங்கள் கருத்துக் கணிப்பு வெளியிட்டிருக்கின்றன. அந்த நான்கு ஊடகங்களிலும் உண்மையான கருத்துக் கணிப்பு என்று சொன்னால், ஒரே மாதிரி வந்திருக்க வேண்டும். அந்தக் கருத்துக் கணிப்பினுடைய முடிவுகள் நான்கும் வெவ்வேறாக இருந்திருக்கின்றன. ஆகவே, இந்திய நாட்டினுடைய கருத்துக் கணிப்புகள் உண்மைக்கு மாறாக இருந்துகொண்டிருக்கின்றன. அவதூறான தகவல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு சான்று.

முற்பகல் 10-35

இப்பொழுது, France நாட்டிலே, France நாட்டினுடைய அதிபர் தேர்தல் நடந்த ஆறாம் தேதி, இந்த மாதம் ஆறாம் தேதி, ஞாயிற்றுக்கிழமை நடந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடந்தது.



வரக்கூடிய ஞாயிற்றுக்கிழமைதான் தேர்தல் முடிவே அறிவிக்கப்படவிருக்கிறது. அந்தத் தேர்தல், அந்த நாட்டினுடைய முறைப்படி, இரண்டு கட்டத் தேர்தல். முதல் கட்டத் தேர்தலிலே 12 பேர் போட்டியிட்டார்கள். அதிலே வெற்றி பெற்றவர்கள் இரண்டு பேர். ஒருவர் ஆளுங்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில், Nicolas Sarkozy என்பவர் போட்டியிட்டார். எதிர்க்கட்சியாக இருக்கிற சோஷலிஸ்ட் கட்சியின் சார்பிலே, ஒரு பெண்மணி Royal என்ற பெண்மணி போட்டியிட்டார். அந்தத் தேர்தலிலே, உலக நாடு முழுவதும் உள்ள அந்நாட்டவர்கள் வாக்களிக்க வேண்டும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எந்த நாடுகளில் வாழ்ந்தாலும்கூட, அவர்கள் வாக்களிக்க வேண்டும். அவர்கள் 6 ஆம் தேதியன்று நம்முடைய சென்னைத் தூதரகத்திலே வாக்களித்தார்கள்; புதுச்சேரியிலே வாக்களித்தார்கள் பிரான்ஸ் மக்கள். அன்று நள்ளிரவு, நம்முடைய நேரப்படி 12 மணி நள்ளிரவு, அங்கே 5 மணிக்கு வாக்குப் பதிவு முடிவடைகிறது. வாக்குப் பதிவு 5 மணிக்கு முடிவடைந்தவுடனே, ஐந்து மணி ஒரு நிமிடத்திற்கு அங்கே ஒரு கருத்துக் கணிப்பு வெளியாகிறது. அந்தக் கருத்துக் கணிப்பின்படி ஆளுங்கட்சியான Conservative கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய Nicolas Sarkozy என்பவர், 53 விழுக்காடு பெற்று இருக்கிறார்; அதைப்போல, எதிர்த்துப் போட்டியிட்ட Royal என்ற பெண்மணி 47 விழுக்காடு பெற்றிருக்கிறார். அவர் 53 விழுக்காடு வாக்குகள் பெற்றிருக்கிறார். இவர் 47 விழுக்காடு வாக்குகள் பெற்றிருக்கிறார். வித்தியாசம் 6 விழுக்காடு என்று கருத்துக் கணிப்பு வந்து ஒரு நிமிடம்தான்; வந்தவுடனே, அந்தப் பெண்மணி Royal என்பவர், தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு, "நான் தோல்வி அடைந்துவிட்டேன்" என்று, வெற்றிபெற்றவராகக் கருதிய அந்த Nicolas- என்பவருக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார்.

வெற்றி பெற்றதாகக் கருதி—இன்னும் தேர்தல் முடிவே வரவில்லை; வெற்றி பெற்றதாகக் கருதி, பதவியேற்புக்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்று காலையிலே என்னுடைய நண்பர் ஒருவர் தொலைபேசியிலே சொல்கிறார். ஆகவே, அந்த அளவிற்கு அந்த நாடுகளிலே கருத்துக் கணிப்பு; உண்மையான கருத்துக் கணிப்பு வந்துகொண்டிருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே, விருப்பு வெறுப்புகளை மனதிலே வைத்துக்கொண்டு, உள்நோக்கம் கற்பிப்பதற்காகத்தான், தேர்தல்களிலேயும் கருத்துக் கணிப்பு வந்துகொண்டிருக்கிறது. ஆக, இதையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இப்போது நம்முடைய தேர்தல் ஆணையம் கருத்துக் கணிப்பு என்பது

தேவையற்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, "கருத்துக் கணிப்பு ஏற்புடையது அல்ல; நான்கூட அதை ஏற்றுக்கொள்வது கிடையாது" என்று இரண்டு நாட்களுக்கு முன்பு, ஓர் அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே, தேர்தல் ஆணையம் கருத்துக் கணிப்பு கூடாது என்று சொல்லக்கூடிய அந்த முடிவுக்கு நம்மைப் போன்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஆதரவு கொடுக்க வேண்டும். பிரான்ஸ் நாட்டிலே வந்த கருத்துக் கணிப்பைப் போல, உண்மையான கருத்துக் கணிப்பு வந்தால், ஏற்றுக்கொள்ளலாம். இப்படி உண்மைக்கு மாறான கருத்துக் கணிப்புகள் வந்திருப்பதை, நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது; இந்திய நாட்டிலே கருத்துக் கணிப்பு கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இங்கேகூட, எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்துக் கணிப்பிலே இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒருவருக்கு அதிகமான விழுக்காடு; இருக்கட்டும் அதை ஏற்றுக்கொள்ளலாம். அதைமட்டும் சொல்லிவிட்டு, மற்றவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏன் சொல்ல வேண்டும்? காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த தலைவர் மதிப்பிற்குரிய திரு. ப. சிதம்பரம் அவர்கள்; அவரைப்பற்றிக் குறைவான மதிப்பீடு. அதைப்போல மதிப்பிற்குரிய நம்முடைய டி.ஆர். பாலு அவர்கள் இதுவரையிலே இல்லாத அளவிற்கு, சாலைப் போக்குவரத்திலே மிக அதிகமான சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். சேது சமுத்திரத் திட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் ஆலோசனைப்படி, மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவரைப் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். அதேபோல, திரு. மணிசங்கர ஐயர், திரு. ஜி.கே. வாசன் போன்றவர்களும், நம்முடைய திரு. ராஜா, திரு. பழனிமாணிக்கம், போன்றவர்களும், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்றவர்களும், எல்லா அமைச்சர்களும் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த 13 அமைச்சர்கள் கிடைத்த காலம்தான், மத்திய அரசின் வரலாற்றில் தமிழ்நாட்டிற்கு இதுவரையில் இல்லாத பொற்காலம் என்று சொல்லமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) 1,400 கோடி ரூபாய் கூடுதலாக, ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நிதியைப் பெற்று இருக்கிறோம். எந்த அளவிற்கு நாம் பெற்றிருக்கிறோம்? மத்திய அரசில், தமிழ்நாடு சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அமைச்சர்களைப் பெற்று, நாம் சரித்திரச் சாதனை படைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய அமைச்சர்களைக் குறை சொல்லலாமா? அதிலேகூட, எங்களுடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு. அன்புமணி அவர்கள் சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர். நேற்று நாடாளுமன்ற ராஜ்யசபையிலே, ஒன்றே முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறார், பதிலளித்து. அப்பொழுது பிரதமர் மன்மோகன் சிங் உட்பட, எல்லாத் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். திருமதி சோனியா காந்தி பாராட்டியிருக்கிறார்கள். பல்வேறு தலைவர்கள் எல்லாம் 'ஒன்றே முக்கால் மணி நேரம் பதிலளித்து இருக்கிறீர்கள்' என்று அவரைப் பாராட்டியிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, World Health Assembly என்று சொல்லக்கூடிய உலக நாடுகளுடைய கூட்டமைப்பு, 7 நாட்களாக ஒரு மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டிற்கு அவர்தான் தலைவர். தலைமையேற்று அவர் சிறப்பாகப் பணியாற்றினார் என்று, அந்த மாநாட்டினுடைய இறுதியிலே அந்த நாட்டின் வழக்கப்படி, உலக நாடுகளில் இருந்து வந்தவர்கள் எல்லாம் மூன்று நிமிடம் எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த மரபு அங்கே! பாராட்டியதற்காக நான் சொல்லவில்லை. இப்படிப்பட்டவர்களை நாமே குறைத்து மதிப்பிடுவது, நம்மை நாமே குறைத்துக்கொள்வதுபோல என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறொன்றும் அல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக இந்தக் கருத்துக் கணிப்பு கூடாது.

முற்பகல் 10-40

அதிலும் இன்னும் சொல்லப்போனால், சில ஊடகங்கள், தொலைக்காட்சியாக இருந்தாலும், தினப் பத்திரிகை முதல் வார ஏடுகளாக இருந்தாலும்கூட, சிலவற்றை நாம் உன்னிப்பாகப் பார்ப்போம் என்று சொன்னால், தமிழ்நாட்டில் வன்முறையைத் தூண்டுகிற வகையில், ஆபாசத்தைத் திணிக்கிற வகையில், இன்னும் தீவிரவாதத்தை வளர்க்கிற வகையிலே செய்திகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. பெண்களை எவ்வளவு இழிவுபடுத்தக்கூடிய நிலையில் வந்து கொண்டிருக்கின்றன? தமிழைக் கொலை செய்கிறார்கள். 'சப்ளை' என்று எழுதுகிறார்கள். பல்வேறு வார்த்தைகளைப் போட்டு நம்முடைய தாய்மொழியை வளர்த்துக் கொண்டிருக்கிற இந்த வேளையிலே, இந்த ஊடகங்கள் அதனைக் கொலை செய்யக்கூடிய நிலையிலும், இருந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தப் பத்திரிகை தர்மம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய அதேவேளையில், நம்முடைய அரசு, இங்கே, இதிலே

கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு மூத்த பத்திரிகையாளர்; பத்திரிகையை மதிக்கக்கூடியவர்கள். ஆகவே, பத்திரிகையாளர்கள், பத்திரிகையில் தங்கள் விருப்பப்படி எழுதக்கூடாது. அவர்களுக்குச் சுதந்திரம் இருக்கலாமே தவிர, தங்களுக்குள்ளேயே ஒரு கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு எழுத வேண்டும். மற்றவர்களைப் புண்படுத்துகிற வகையில், உண்மைக்கு மாறான வகையில், இந்த நாட்டுக்கு எதிரான செய்திகளை வெளியிடக் கூடாது என்ற அந்தக் கட்டுப்பாடு அவர்களுக்குள்ளே இருக்க வேண்டும். ஆகவே, அது இல்லை என்று சொன்னால், நாம் கண்காணிக்க வேண்டும்; கட்டுப்படுத்த வேண்டும்; கண்டிக்கவும் வேண்டும் என்ற செய்தியை இந்த நேரத்திலே சொல்லி, ஒட்டுமொத்தமாக இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் கூடாது; அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து. . . (குறுக்கீடுகள்) அதைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் வருவது நமக்கு ஆபத்தானது; இது பல்வேறு பின் விளைவுகளை உண்டாக்கும்; இது கூடாது என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இந்தத் தொடர் நடவடிக்கை நீடிக்க வேண்டும். ஏற்பட்ட பிரச்சினையைக் கண்டிக்கிறேன். இறந்த மூவருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, மீண்டும் ஒருமுறை ஆழ்ந்த அஞ்சலியையும் இரங்கலையும் தெரிவித்து அமர்கின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் அவர்களுடைய பொன் விழா நடைபெறுகிற இந்த நேரத்தில், தேவையில்லாத ஒரு சூழ்நிலையில், தேவையில்லாத ஒரு கருத்துக் கணிப்பை, 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டதையொட்டி, சில குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதோடு, அதனுடைய தொடர்ச்சியாக, மதுரை மாநகரில், 'தினகரன்' பத்திரிகை அலுவலகம் கடுமையாகத் தாக்கப்பட்டு, கொளுத்தப்பட்டதும், மதுரை நகரத்தினுடைய பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தக்கூடிய வகையிலே, கலவரங்கள் நடைபெற்றதும், நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலில், மூன்று



பேர்—கோபி, வினோத், முத்துராமலிங்கம் என்கிற பத்திரிகை அலுவலகத்திலே பணியாற்றியவர்கள் மூன்று பேர்— கொல்லப்பட்டிருக்கக்கூடிய செய்தியும், மதுரை நகர மக்கள் மத்தியிலே கடுமையான பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நடைபெற்றிருக்கிற இந்த வன்முறைச் சம்பவத்திற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களே கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராஜன் அவர்களும், இந்த வன்முறைச் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்து, அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இந்தச் சம்பவம், தமிழ்நாடு மற்றும் இந்தியப் பாரம்பரியத்திற்கு ஏற்றதல்ல. பத்திரிகைச் சுதந்திரம் என்பது, நம்முடைய ஜனநாயக நாட்டில் மிக மிக முக்கியமானது. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்குகிற பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது. பத்திரிகையாளர்கள் பெரிதும் மனம் புண்பட்டிருக்கிற இந்த நிலையில், இந்தப் பாதிப்பிற்குக் காரணமானவர்கள், வன்முறையில் ஈடுபட்டவர்கள், கலவரத்திலே ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் எந்தத் தயக்கமுமின்றி அவர்கள்மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறது. மேலும், அந்த வகையில், இன்றைக்கு இதனை ஜனநாயகத்திற்கு விடப்பட்டிருக்கிற ஒரு சவாலாகக் கருதி, இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாத வண்ணம் காவல் துறை விழிப்புணர்வோடு இருந்து, இதுபோன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையோடு செயலாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே தெரிவித்து, இதில் உயிரிழந்த அந்தப் பத்திரிகை அலுவலகத்திலே பணியாற்றிய மூன்று பேருக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கின்றேன்.

(முற்பகல் 10-45)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, 'தினகரன்' அலுவலகத்திலே நடந்த தாக்குதல் சம்பவத்தில் இறந்த 3 பேர்களுடைய குடும்பத்திற்கு ஆறுதலையும்,

இறந்தவர்களுக்கு அஞ்சலியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். நடந்துபோன இந்தச் சம்பவம், விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது. கருத்துக் கணிப்பு என்ற பெயராலே, தமிழகத்திலே இப்பொழுது தேர்தலோ, வேறு எந்தக் காரியமோ எதுவும் நடைபெறாத சூழ்நிலையில், கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டிருப்பது, தேவையில்லாத ஒரு சூழ்நிலை என்றாலும், பத்திரிகைச் சுதந்திரம் என்ற முறையிலே, அது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து, ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கிற அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. அந்த அடிப்படையிலே, இந்தச் சம்பவம் என்பது அனைவருக்குமே ஓர் அதிர்ச்சி அளிக்கக்கூடிய சம்பவமாக நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக, இங்கே மற்றவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொன் விழா மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று அனைவருமே விரும்பி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிற வேளையிலே, இப்படி ஒரு சம்பவம், மிகப் பெரிய வருத்தத்தை, வேதனையை அளிக்கிறது.

இதை எப்படி வெளியிடுவது என்றே சொல்ல முடியாத நிலையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம்முடைய வருத்தத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தில் பத்திரிகை என்பது நான்காவது தூண் என்ற முறையில் அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு தனி அதிகாரமும், அந்தஸ்தும் இருக்கிறது; சுதந்திரமும் இருக்கிறது என்பதைப் பொதுவான நிலையிலே அங்கீகரிக்கக்கூடிய நிலைமை இருந்தாலும், அது எப்படிச் செயல்பட வேண்டும் என்ற கருத்துகளை மற்றவர்கள் விளக்கியிருக்கிறார்கள். இருந்தாலும், அதற்குத் தீர்வாக, இப்படி உயிரிழப்பு என்ற நிலைவரையில் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தெளிவாகவே தன்னுடைய அறிக்கையின்மூலமாக, இந்தச் சம்பவத்திற்குக் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, யாராக இருந்தாலும் உரியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கையை விரைவாக எடுத்து, அதில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்குரிய முயற்சிகளையும் எடுத்து, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருக்கிறது. அதை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடு) திரு. செல்வம், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மதுரையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில், உயிரிழந்த மூன்று பேருடைய குடும்பங்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று காலை 9-30 மணியளவில், மதுரை மாநகராட்சியினுடைய மேயர் தலைமையில் ஒரு கும்பல், மதுரை-திருச்சி நெடுஞ்சாலையில் இருக்கின்ற 'தினகரன்', 'சன் டி.வி.' அலுவலகம் முன்புவந்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது. அதற்குப் பிறகு காவல் துறைக்குத் தகவல் போய், 9-50 மணியளவில் அங்கே D.S.P. ராஜாராம் என்பவர் தலைமையில், போலீசார் அங்கே வந்திருக்கிறார்கள். ஆனால், போலீஸ் அதிகாரிகளும், காவல் துறையினரும் அங்கே வந்ததற்குப் பிறகுதான், 'சுமோ' கார்களில், பல வாகனங்களில், அங்கே ரௌடிக் கும்பல் வந்து இறங்கி, ஆர்ப்பாட்டம் நடத்தி, அந்தத் 'தினகரன்' பத்திரிகை அலுவலகத்தில் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தி, கண்ணாடிகளை எல்லாம் அங்கே உடைத்திருக்கிறது. அப்பொழுதும் போலீசார் அதனைத் தடுக்கவில்லை. அதற்குப் பிறகு, பெட்ரோல் வெடிகுண்டுகளை அங்கே வீசி, அந்தக் கட்டடத்திற்குத் தீ வைத்த போதும் போலீசார் அவற்றை எல்லாம் தடுப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இந்தச் சம்பவத்தில், 'தினகரன்' பத்திரிகை ஊழியர்கள்--கம்ப்யூட்டர் ஊழியர்கள்--திரு. கோபி, திரு. வினோத் ஆகிய இருவரும், அதேபோல, காவலாளி திரு. முத்துராமலிங்கம் என்பவரும், சம்பவத்தின் காரணமாக அங்கே தீக்கிரையாகி இருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

அதுமட்டுமல்ல; மதுரையிலும், மதுரையைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் வன்முறை வெறியாட்டம் நேற்றைக்கு நடைபெற்றிருக்கிறது. இந்தச் சம்பவம் குறித்து, காவல் துறை சரியாக நடவடிக்கை எடுக்கவில்லையென்று பல தரப்பு மக்களும், பல அமைப்புகளின் நிருவாகிகளும், பல அரசியல் கட்சிகளின் தலைவர்களெல்லாம் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அரசுப் பேருந்துகள் அங்கே அடித்துச் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள், இந்தக் காட்டுமிராண்டித்தனமான சம்பவத்திற்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 'Hindu' பத்திரிகைகூட, "The police watched in silence" என்று செய்தியை வெளியிட்டிருக்கிற ஓர் அவல நிலை, நேற்றைக்கு மதுரையிலே நடைபெற்றிருக்கிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்கப்படுகின்ற பத்திரிகைக்கே, இந்த ஒரு நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த காலத்தில், வன்முறையாளர்களும், ரௌடிகளும், அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபோது, தயவுதாட்சண்யமில்லாமல், அவர்கள்மீது கடந்த 5 ஆண்டுக் காலத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கடுமையான நடவடிக்கை (குறுக்கீடுகள்) எடுத்ததன் விளைவாகத்தான், ரௌடிகளும், வன்முறையாளர்களும் இந்த நாட்டில் வெளியில் வருவதற்கே அஞ்சக்கூடிய ஒரு சூழ்நிலை, மாண்புமிகு புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் காலத்தில் இருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைக்குக் கண் முன்னே. . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், பேசாதீர்கள்.

**திரு. வீர. இளவரசன்:** ஆனால் இன்றைக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அவ்வளவுதான், உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், இன்றைக்குக் கண் முன்னே நடைபெறும் வன்முறை வெறியாட்டத்தைக் கண்டும், தடுக்க முடியாத ஒரு நிலைமைக்குத் தமிழகக் காவல் துறை செயலிழந்துவிட்ட ஒரு நிலைக்குப்



போயிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதை எடுத்துச்சொல்லி, தமிழகத்தில் காவல் துறையைக் கையிலே வைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்குப் பொறுப்பேற்று இராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம். (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, உட்கார்ந்துகொண்டே பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) பார்த்துக்கொண்டே இருக்கிறேன்; இருக்கையிலே உட்கார்ந்துகொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இருக்கைமாறி உட்கார்ந்துகொண்டு, என்ன சேட்டை பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மதுரையில் நடந்த சம்பவம், அந்தச் சம்பவத்தினால், பத்திரிகைத் துறையைச் சார்ந்த கோபி, வினோத், முத்துராமலிங்கம் என்ற மூன்று பேர் மரணமடைந்திருக்கிறார்கள். அவர்களுள் கோபி என்பவர், நேற்று முன்தினம் பிறந்த நாள் கொண்டாடிவிட்டு, நேற்று இறந்தது மிகவும் வருத்தம் அளிக்கிறது. அன்னாருக்கும், அன்னார் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நேற்று நடந்த சம்பவத்திலே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசும்போது, தலைமைச் செயலாளர் அவர்கள் செல்லிடப் பேசியிலே முதலமைச்சரிடம் பேசுகிறார். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'அனைத்துப் பத்திரிகை அலுவலகங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்; யார் தவறு செய்திருந்தாலும் அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார்கள்; இப்படிப்பட்ட முதலமைச்சர்கள் தமிழகத்திலே இருப்பார்களா என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. நாங்களெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசியல் பணியிலே, அவர்களுக்கு இன்பம், மகிழ்ச்சி என்பதைவிட, துயரமும், துன்பமும்தான் அவரைச் சூழ்ந்துகொண்ட காலங்கள் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பொன் விழா

எடுக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே, இப்படிப்பட்ட ஒரு சம்பவம், வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

முற்பகல் 10-55

தேவையில்லாமல் கருத்துக் கணிப்புகள்—மக்கள் மனதில் யார் இருக்கிறார்களோ, அவர்கள்தான் முடிவு செய்வார்கள். முடிவு செய்யப்பட்ட சம்பவம், இதையெல்லாம் பத்திரிகையில் வெளியிடுவதை நம்முடைய தமிழக அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

'ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்று சொல்வார்கள். நேற்று தொலைக்காட்சியிலே நாமெல்லாம் பார்க்கும்போது, இந்தக் கருத்துக் கணிப்பு எதிரொலியால் அங்கே மறியல் போராட்டங்களைப் பார்த்தோம். அதிலெல்லாம், அரசியல்வாதிகளைப் பார்க்க முடிந்தது. அந்தச் சம்பவங்களுக்குப் பிறகு, மர்மமான ஒரு கும்பல், விரோதப் போக்குள்ள கும்பல், அந்தப் பத்திரிகை அலுவலகத்தைத் தாக்குவதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

ஏற்கெனவே, பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைவிலும், முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மறைவிலும் எப்படி வன்முறைக் கும்பல்கள், அரசியல் கட்சிப் போர்வையிலே உள்ளே புகுந்தன என்பதை நாம் அறிந்திருக்கிறோம்; பார்த்திருக்கிறோம்; இவையெல்லாம் நமக்குச் சான்றுகளாக, சாட்சிகளாக இருக்கின்றன. இந்த நிகழ்வுகளைப் புறம் தள்ளிவிடாமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசியல் கட்சிப் போர்வையிலே யார் உள்ளே புகுந்தார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பொன் விழா எடுக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிகு நிகழ்ச்சி நடைபெறும் நேரத்திலே, இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு, வருத்தத்தை அளிக்கிறது. 'யார், எப்படிப்பட்டவராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம்' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே தெரிவித்திருக்கிறார். இரண்டு தினங்களுக்கு முன்புகூட, 'இப்படிப்பட்ட கருத்துக் கணிப்பில் எனக்கு உடன்பாடு இல்லை; கட்சிக்குள்ளும், கூட்டணிக் கட்சிகளுக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கே இப்படிப்பட்ட கருத்துக் கணிப்பு வெளியிடப்படுகிறது' என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆக, உங்களுடைய நடவடிக்கையை நாங்கள் பாராட்டுகிறோம்; நன்றி தெரிவிக்கிறோம்.



இறந்தவர்களின் அந்த மூன்று குடும்பங்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்து, பதிவு செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இன்றைய தினம் நம்முடைய கட்சித் தலைவர்கள் வழங்கியுள்ள கருத்துகள் மிகுந்த மன வேதனையைத் தாக்கூடியவையாகும். குறிப்பாக, நேற்றைய தினம் மதுரையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தின் காரணமாக, 3 உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறோம். கட்சிகளின் தலைவர்கள் இங்கே சொன்னதைப்போல், நானும் அவர்களோடு இணைந்து என்னுடைய வேதனையையும், வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் அந்த வாலிபர்களுடைய குடும்பங்களுக்கு இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிரச்சினையைத் திசை திருப்புவதற்கு என்றே, நாட்டிலே உள்ள அரசியல் கட்சிகள் விரும்புமேயானால், அது அந்த அரசியல் கட்சிகள் தாங்கள் இயங்குவதற்கு இலாபகரமாக, வசதியாக ஒன்று கிடைத்தது என்பதைத் தவிர, வேறு அல்ல. நான், இதைப்பற்றி யாரும் பேசக் கூடாது என்றோ, ஏன் பேசினார்கள் என்றோ கேட்கப் போவதும் இல்லை; நினைப்பதும் இல்லை. ஏனென்றால், இத்தகைய ஒரு சம்பவம் நடைபெற்ற பிறகு, இந்த அவையிலே உள்ள எதிர்கட்சியானாலும் சரி அல்லது தோழமைக் கட்சிகளானாலும் சரி அல்லது மனிதாபிமானமுள்ள எந்தக் கட்சியானாலும் சரி, இதைப்பற்றிப் பேசாமலே வாயை மூடிக்கொண்டு போவது என்பது இயலாத காரியம்; கூடவும் கூடாது; அது ஜனநாயகமும் ஆகாது.

அதைப்போல, இதற்கெல்லாம் பொறுப்பேற்று முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்று கூறுவது, வழக்கமாக இதுபோன்ற நேரங்களில் பயன்படுத்துகின்ற வாசகம்தான். அதனாலும் நான் வருத்தமடையவில்லை. எத்தனையோ முறை எதிர்க்கட்சிகள், இந்த மாமன்றத்தில் வெவ்வேறு ஆளுங்கட்சிகள் இருந்தபோது, இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தி இருக்கின்றன. அதனாலும் எனக்கு அதிலே வருத்தமில்லை. நீங்களாகப் பார்த்து எனக்கு இப்படி ஓர் ஓய்வு கொடுக்க வேண்டுமென்று கருதினால், அதைவிட உற்சாகம், அதைவிட மகிழ்ச்சி, உவகை எனக்கு வேறு இருக்க முடியாது. இருப்பினும், நடைபெற்ற நிகழ்வுகளைப்பற்றி, சில கருத்துகளை இங்கே விளக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

'தினகரன்'-ஏ.சி. நீல்சன் வழங்கும் மெகா சர்வே' என்ற செய்தி, 'தினகரன்' பத்திரிகையிலே விளம்பரமாக வெளிவந்தது. அதைப் பார்த்த நான், 'தற்போது இதற்கு என்ன அவசியம் வந்தது?' என்றும், 'அது தேவையற்ற பிரச்சினைகளைக் கிளப்பும்' என்றும், 'எனவே, அதனை வெளியிட வேண்டாம்' என்றும், 'தினகரன்' அலுவலகத்திற்குச் சொல்லியனுப்பினேன்; தொலைபேசியிலும் சொன்னேன். நான் அதைச் சொல்லும்பொழுது, என் அருகே நம்முடைய அமைச்சர்கள் திரு. வீராசாமி இருந்தார்; திரு. துரைமுருகன் இருந்தார்; மத்திய அமைச்சர் திரு. ராஜா அவர்களுங்கூட இருந்தார்கள். ஆனால், எனது கருத்து, 'தினகரன்' நிர்வாகத்திலே ஏற்கப்படாமல், அந்தக் கருத்துக் கணிப்பு, 7 ஆம் தேதி 'தினகரன்' நாளிதழில் வெளியிடப்பட்டது.

அதில், 'தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களில் சிறப்பாகச் செயல்படுபவர்கள் யார்?' என்ற கேள்விக்கான விடை, கருத்துக் கணிப்பாக வெளியிடப்பட்டிருந்தது. தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களில், தி.மு.கழகத்தினர், காங்கிரஸ் கட்சியினர், பா.ம.க.-வைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கருத்துக் கணிப்பின்படி, திரு. தயாநிதி மாறன் 64 சதவிகிதம் என்றும், திரு. ப. சிதம்பரம் 27 சதவிகிதம் என்றும், திரு. டி.ஆர். பாலு 7 சதவிகிதம் என்றும், திரு. அன்புமணி ராமதாஸ் ஒரே ஒரு சதவிகிதம் என்றும், மற்றவர்கள் எல்லாம் ஒரு சதவிகிதம் என்றும் வெளியிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்த நான் துணுக்குற்று, இவ்வளவு சொல்லியும் கேட்காமல், இப்படி வெளியிட்டுவிட்டார்களே என்பதற்காக, பின்வரும் அறிக்கையை எல்லாப் பத்திரிகைகளுக்கும் தந்தேன்; அந்த அறிக்கையை நினைவூட்டுகிறேன்:

"இரண்டு நாட்களாக 'தினகரன்' பத்திரிகையில், மத்தியிலே உள்ள தமிழக அமைச்சர்களைப் பற்றிய கருத்துக் கணிப்பு வெளிவந்து கொண்டிருக்கிறது. பொதுவாக, நான் அந்தக் கருத்துக் கணிப்புகளில் நம்பிக்கை வைப்பதில்லை. இப்போது, ஏதோ அவசியத்திற்காக நான் சொல்கிற கருத்து அல்ல இது. இதற்கு முன்பே பலமுறை பத்திரிகைப் பேட்டிகளில், அறிக்கைகளில் இந்தக் கருத்தை நான் சொல்லி, கருத்துக் கணிப்புகளில் நம்பிக்கை வைக்கக்கூடாது என்று கூறியிருக்கிறேன். இன்றைக்கு வந்துள்ள கருத்துக் கணிப்பு, தி.மு.கழகத்திற்குள்ளேயே, தோழமைக் கட்சிகளுக்கு இடையிலேயே தேவையற்ற மனக் கசப்பை ஏற்படுத்த ஒரு கருவியாக அமைந்துள்ளது என்பதை வருத்தத்தோடு



தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கழகத்தினர் யாரும், இதுபோன்ற கருத்துக் கணிப்புகளை வைத்துக்கொண்டு, கட்சிகளுக்கிடையே உள்ள நட்புறவைப் பாதிக்கும் வகையில், விமர்சனங்களைச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதோடு, அந்தக் கணிப்பு சரியான வரிசையிலே அமைந்ததில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன். ஏனென்றால், திரு. சிதம்பரம் அவர்கள் பொருளாதார மேதைகளிலே ஒருவர். அவர் கருத்துகள், அவர் எடுக்கின்ற சில நடவடிக்கைகள், இடதுசாரிக் கட்சிகளுக்கோ அல்லது வேறு கட்சிகளுக்கோ, அந்த எண்ணமுடைய கட்சிகளுக்கோ மாறுபட்ட கருத்தை ஏற்படுத்தினாலுங்கூட, அவர் பொருளாதார மேதை என்பதை, யாரும், என்றைக்கும் மறுத்தது கிடையாது.

அதைப்போலவே, தம்பி அன்புமணி அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பதவிப் பொறுப்பையேற்று, அப்படிப் பதவிப் பொறுப்பையேற்று, எவ்வளவு விரைவாக, வேகமாக இந்த நாட்டிற்குத் தேவையான பல காரியங்களை, அந்தத் துறையின்மூலமாகச் செய்யமுடியுமோ அதைச் செய்து, பிரதமருடைய அன்பையும், அவருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார்.

முற்பகல் 11-05

இப்படியெல்லாம் வேறு கட்சிகளிலே உள்ளவர்கள், தோழமைக் கட்சிகளிலே உள்ளவர்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது, அவர்களை அல்லது அவர்களுடைய கட்சியினரைப் புண்படுத்துகின்ற வகையிலே, இந்தக் கருத்துக் கணிப்பு வந்ததை, நான் விரும்பாத காரணத்தால்தான், இந்த அறிக்கையை வெளியிட்டேன். சொல்லிப் பார்த்தும் நடக்காமல், அதற்குப் பிறகு அறிக்கையை நான் வெளியிட்ட பிறகும், 'சரி, தலைவர் கோபமாக இருக்கிறார்; இனிமேல் வெளியிட வேண்டாம்' என்றுகூடக் கருதாமல், மீண்டும், என்னுடைய அந்த அறிக்கைக்குப் பிறகும், அதே 'தினகரன்' நாளிதழில், 9 ஆம் தேதி அன்று, மீண்டும் ஒரு கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டது. அதில், 'கலைஞரின் அரசியல் வாரிசாக யார் வர வேண்டும்?' என்று கேள்வி கேட்கப்பட்டு, திரு. மு.க. ஸ்டாலினுக்கு 70 சதவிகிதம் என்றும், மற்றவர்கள் 20 சதவிகிதம் என்றும், 'கருத்து இல்லை' என்ற தலைப்பில், 6 சதவிகிதம் என்றும், 'மு.க. அழகிரி 2 சதவிகிதம்', 'கனிமொழி 2 சதவிகிதம்' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த 'மற்றவர்கள் 20 சதவிகிதம்' என்று இருப்பதிலே, தயாநிதி மாறன் இல்லை. அந்தப் பெயரையே காணோம். தயாநிதி மாறன்,

முதல் நாள் வந்த கருத்துக் கணிப்பிலே முதல் வரிசையிலே அவர் தான் முதல் நபர் என்று வந்த அந்தப் பெயர், இதிலே வரவில்லை. வைத்தது மாத்திரமல்ல; 'மற்றவர்களுடைய' பட்டியலிலே அடங்குவதைப்போல, 20 சதவிகிதம் என்று போட்டுவிட்டு, ஸ்டாலினுக்கு 70 சதவிகிதம் என்று வெளியிட்டார்கள். சரி, அதோடு விட்டார்களா என்றால், இல்லை. மு.க. அழகிரிக்கு தமிழ்நாடு முழுக்க 2 சதவிகிதம், சென்னையிலே 'சைபர்' சதவிகிதம் என்றும், கனிமொழிக்கு 2 சதவிகிதம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதிலே கனிமொழி, அரசியல் அரங்கத்திலே எங்கேயும் நின்றுகொண்டு, தனக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்று கனிமொழியும் கேட்கவில்லை; நானும் கேட்கவில்லை. கனிமொழியை ஒரு கவிஞர் என்கின்ற முறையில், குறிப்பாகக் கழகக் கூட்டங்களிலேகூட அல்ல; நம்முடைய கம்யூனிஸ்ட் தொண்டர்கள் நடத்துகின்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச்சென்று, அங்கேயெல்லாம் கலந்துகொண்டிருக்கிற நிலை இருந்ததேதவிர, கழகச் சொற்பொழிவாளராகவோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிருவாகப் பொறுப்பிலே உள்ளவராகவோ, கனிமொழி இதுவரையிலே அழைக்கப்படவில்லை. ஆனால், அவர்களுக்கு 2 சதவிகிதம் என்றும், மு.க. அழகிரிக்கு 2 சதவிகிதம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதிலே வேடிக்கை என்னவென்றால், மு.க. அழகிரி பல நேரங்களில், பல பத்திரிகைகளில் கொடுத்த பேட்டியில், 'கட்சிப் பதவிகளில் தனக்கு ஆசை இல்லையென்றும், அப்படிப்பட்ட ஆசை தனக்குக் கிடையாது' என்றும் பல முறை அதிலே சொல்லியிருக்கிறார்.

கனிமொழி இப்போதுதான், தி.மு.க., கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளின் களப் பிரிவுகள் நடத்தும் நிகழ்ச்சிகளில், ஒரு கவிஞர் என்ற முறையிலே கலந்துகொண்டிருக்கிறாரே தவிர, அவரும் பல பேட்டிகளில், தனக்கு அரசியலில் நுழைய விருப்பம் இல்லை என்பதை வெளிப்படையாகவும், சூசகமாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால், தேவையில்லாமல் 'தினகரன்' பத்திரிகையில், மு.க. அழகிரிக்கு ஆதரவு இரண்டே சதவிகிதம்தான் என்றும், அதிலும், சென்னையில் Zero சதவிகிதம் என்றும் கருத்து வெளியிடப்பட்டிருந்தது.

எந்த இயக்கத்திலும் முன்னோடிகளாக இருப்பவர்கள் அல்லது தொண்டர்களாக இருப்பவர்கள், அந்த ஒரே தலைவரை மாத்திரம் பின்பற்றுவார்கள் என்று யாரும் கருத முடியாது, எல்லா இயக்கத்திலும், மனதிலே கை வைத்துப்பார்த்தால், ஒவ்வொரு கட்சியிலும், ஒவ்வொரு group இருக்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது. ஒவ்வொரு கட்சியிலும், ஒரு தலைவரை ஏற்றுக்கொண்டு, அந்தக் கட்சியினுடைய



கொள்கை அடிப்படையிலே நடைபோடுகின்றவர்கள் ஒவ்வொரு கட்சியிலும் உண்டு. அதேபோல, அழகிரியைப் பின்பற்றுகிறவர்கள், மதுரையிலே இருக்கின்றவர்கள் ஆத்திரம்கொண்டு, இதன் காரணமாக அங்கே இந்தப் பத்திரிகையைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள் என்ற செய்தி வந்தது. செய்தி வந்தவுடன், நான் அப்பொழுது அவையிலே கேள்வி நேரத்திலே இங்கே ஈடுபட்டிருந்தேன். அப்பொழுது செய்தி வந்தவுடன், உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்குமாறு போலீசாருக்கு இங்கிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையின்படி போலீசாரும் உடனேயே செயல்பட்டார்கள்.

இதற்கு முன்பே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, ஆங்காங்கு உள்ள தொண்டர்கள் 'தினகரன்' பத்திரிகையைப் பல இடங்களிலே கிழித்தெறிந்தும், கொளுத்தியும்கூட தங்களுடைய எதிர்ப்பை அவர்களும் வெளியிட்டார்கள் என்ற செய்தி வந்துகொண்டிருந்தது. அங்கேயெல்லாம்கூட காவல் துறையினர் சென்று, கண்ணியம் கெடாமல், கடமை தவறாமல் தங்களுடைய பணியை ஆற்றியிருக்கின்றார்கள் என்ற செய்திகளும் எனக்குக் கிடைத்தன. ஆனால், இவ்வளவுக்குப் பிறகு, 7-5-2007 அன்று வெளிவந்த கருத்துக் கணிப்பின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, சேலம், தருமபுரி, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில், சில இடங்களில் 'தினகரன்' இதழைக் கொளுத்தியும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தும், 'தினகரன்' இதழைக் கொளுத்தியும், எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

9-5-2007 அன்று, இந்த நாளிதழில் வெளிவந்த கருத்துக் கணிப்பையடுத்து, மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில், சில இடங்களில் 'தினகரன்'-ஐ எரித்தல், சாலை மறியல் செய்தல், உருவ பொம்மை எரித்தல் போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு, வெளிவந்த கருத்துக் கணிப்புக்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார்கள். மேலும், மதுரை நகரில் சில இடங்களில் எதிர்ப்பாளர்கள், பேருந்து போன்றவைமீது கல்வீசி, அதன் கண்ணாடிகளையும் உடைத்திருக்கின்றார்கள்.

முற்பகல் 11-10

இந்த நிலையில், 9-5-2007 அன்று, காலை 9½ மணிக்கு, மதுரையில் சிலர் கருத்துக் கணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 'தினகரன்' நாளிதழ் அலுவலகத்தின் முன்பாகச் சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் செய்து, 'தினகரன்' இதழைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு, கலைந்து

சென்றார்கள். இதுசம்பந்தமாக, தலைமைக் காவலர் ரகுநாத் கலைமணி என்பவரின் புகாரின்பேரில், ஒத்தக்கடை காவல் நிலையக் குற்ற எண் 224/2007, பிரிவு 147, 148, 285/இ.த.ச. படி, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் கோபிநாதன், குமார், சேகர், பாண்டி, அருணாசலம் ஆகிய ஐந்து எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள். பின்னர், காலை 10-00 மணி; நான் சொன்னது 9½ மணி. அதற்குப் பிறகு காலை 10-00 மணிக்கு சரவணன் என்பவர் தலைமையில் சிலர் 'தினகரன்' அலுவலக வளாகத்திற்குள்ளேயே அத்துமீறி நுழைந்து, கற்களை வீசிக் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தினர். இதுசம்பந்தமாக, தலைமைக் காவலர் 1380-மார்டின் வில்லியம் என்பவரின் புகாரின்பேரில், ஒத்தக்கடை காவல் நிலையக் குற்ற எண் 225/2007, பிரிவு 147, 118, 332/இ.த.ச. படி, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கில், அழகுராஜா, பிரேம்குமார் என்ற இருவர் இதுவரை கைதாகியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, 'தினகரன்' அலுவலகத்திற்கு, ஊமச்சிகுளம், உட்கோட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் 4 உதவி ஆய்வாளர்கள் உட்பட, 17 காவலர்களை அனுப்பி, பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. சுமார் 11½ மணிக்குச் சிலர் டாட்டா சுமோ காரிலே வந்து, காவல் துறை பாதுகாப்பை மீறி, 'தினகரன்' அலுவலகத்திற்குள்ளே நுழைந்து, பெட்ரோல் அடைக்கப்பட்ட பாட்டில்களை வீசி, கண்ணாடி மற்றும் அலுவலகப் பொருட்களைத் தீ வைத்துச் சேதப்படுத்தித் தப்பிச் சென்றுவிட்டார்கள். உடனடியாகக் காவல் மற்றும் தீயணைப்புத் துறையினர் தீயினை அணைத்தார்கள். தீ மற்றும் புகையிலே சிக்கி, 'தினகரன்' அலுவலக ஊழியர்கள் கோபிநாத், வினோத் மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோர் மூச்சுத் திணறி இறந்துள்ளார்கள். இதுசம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் ஆலடியான் கொடுத்த புகாரின்பேரில், ஒத்தக்கடை காவல் நிலையக் குற்ற எண் 226/2007, பிரிவு 147, 148, 120(பி), 449, 302, 307, 436, 332/இ.த.ச. படியும், பிரிவு 4 மற்றும் 5 of Explosive Substance Act and section 4 of Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act. 1992-ன்படியும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர், இதுசம்பந்தமாக 'தினகரன்' நாளிதழின் செய்தி ஆசிரியர் முத்துப்பாண்டியன் கொடுத்த புகாரும், இதோடு சேர்த்து விசாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வழக்கில் டைகர் பாண்டி, பாட்சா, சரவணன், மாரி மற்றும் பிரபு ஆகிய ஐவர், இதுவரை தனிப்





படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிகள் பயன்படுத்திய டாட்டா சுமோ TN-58-Y-6066 பதிவு எண் கொண்ட வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மற்ற எதிரிகளைக் கைது செய்ய ஆறு தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரில், பேருந்துகள்மீது கல் வீசி, கண்ணாடிகளைச் சேதப்படுத்தியது சம்பந்தமாக, கரிமேடு காவல் நிலையக் குற்ற எண் 964/2007, பிரிவு 147, 148, 427/இ.த.ச. 3(1) of TNPPDL Act. ஜெய்ஹிந்துபுரம் காவல் நிலையக் குற்ற எண் 637/2007 பிரிவு 332, 3(1) of TNPPDL Act, சுப்பிரமணியபுரம் காவல்நிலையக் குற்ற எண் 611/2007, பிரிவு 341, 336, 427/இ.த.ச. மற்றும் R/W 3(1) of TNPPDL Act-படி, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 7 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், மதுரை நகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இதுவரை 82 பேர் காவல் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இச்சம்பவங்களைத் தொடர்ந்து, மாநிலத்திலேயுள்ள அனைத்து 'தினகரன்' பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் 'சன்' தொலைக்காட்சி அலுவலகங்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கி, இதுசம்பந்தமாக எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு, அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று காவல் துறை சார்பில் அறிக்கை எனக்குத் தரப்பட்டுள்ளது.

முற்பகல் 11-15

இதைச் சொல்லும்போது—இந்த நிகழ்வுகளிலே என்னுடைய குடும்பத்தையும் சம்பந்தப்படுத்தியிருக்கிற நிலையில்—இந்த வழக்கைத் தமிழக போலீசார் விசாரிப்பதற்குப் பதிலாக, மத்திய அரசு புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ.-யைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, மதுரையில் 'தினகரன்' அலுவலகம் தாக்கப்பட்டது குறித்தும், மூன்று பேர் இறந்தது குறித்தும் சி.பி.ஐ.-யைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கின்றேன். தமிழக அரசின் சார்பில் சி.பி.ஐ. விசாரணைகோரி, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மத்திய அரசுக்கும், தலைமைச் செயலாளர்மூலமாகக் கடிதம் எழுதப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இன்றைக்கு இல்லை. (குறுக்கீடுகள்) இப்போது பேரவைமுன் உள்ள அலுவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்று கொடுத்திருக்கிறார்கள். தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்தவர்கள், திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், டி. ஜெயக்குமார். பேரவை விதி 70(1)-ன்கீழ், இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதியளிக்க வேண்டும். எனவே, பேரவை அனுமதியளிக்கிறதா என்பதை அறிய இத்தீர்மானத்திற்கு இசைவளிக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் இருக்கையிலிருந்து எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

உட்காருங்கள். 35-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் இசைவளித்து, ஆதரவாக எழுந்து நிற்பதால், இத்தீர்மானத்தை எடுத்துக்கொள்ள பேரவை அனுமதி அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 27-4-2007 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க, இத்தீர்மானம், 14-5-2007 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





## 4. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகியவற்றின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய, தலா ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

மேற்காணும் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக, பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள், தங்களின் வேட்பு மனுக்களை இன்று 10-5-2007 மாலை 4-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புமனுப் படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள், 11-5-2007 அன்று மாலை 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள், 11-5-2007 அன்று மாலை 4-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள், பின்னர் அறிவிக்கப்படும்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

[2007 மே 10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது மற்றும் ஆறாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பில் அவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-20

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உங்களுடைய எதிர்ப்பை நான் பதிவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 மே 10]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஊ) தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## (எ) திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஏ) கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 10

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஐ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2007 மே 10] [டாக்டர் க. பொன்முடி]

"2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநெல்வேலிக்கும் உங்களுக்கும் இதில் என்ன இருக்கிறது?

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-25

## (ஏ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஓ) தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2007), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

---

@ 9-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2007 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) இந்தச் சட்டமுன்வடிவு விவாதமின்றி நிறைவேற்றப்பெற வேண்டுமென்று B.A.C.-ல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) B.A.C.-ல் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2007 மே 10]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 3-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/ 2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அன்றைக்கு B.A.C.-ல் அப்படித்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-30

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமுன்வடிவுகளையும் விவாதம் இன்றி நிறைவேற்றுவதாக நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யவில்லை என்று எண்ணுகிறேன். (குறுக்கீடு) அந்த ஒன்று மட்டும்தான். மற்ற சட்டமுன்வடிவுகளிலே விருப்பப்பட்ட உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவரை, தாங்கள் பேச அனுமதிக்கலாம் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## (இ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் யாராவது பேசுகிறீர்களா? திரு. ஞானசேகரன் (குறுக்கீடு) திரு. தமிழரசு, சொல்லுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பின்பு, உடற்பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனை நெறிமுறைப்படுத்தும்பொருட்டு, நன்கு அறிந்த உடற்கல்வி வல்லுநர்கள் இருவர் மற்றும் உயர் கல்வித் தகுதியுடன் பணி மூப்புடைய பல்கலைக்கழகப் பேராசிரியர் மூவர் உள்ளடக்கிய குழு அமைப்பது வரவேற்கத்தக்கது. 54(1) ஆம் உட்பிரிவில் கூறப்பட்டுள்ள ஓர் ஆண்டுக் கால அளவை, இரண்டு ஆண்டுக் கால அளவாக நீட்டிப்பதால், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு நன்கு அறிந்து, சிறப்பாகச் செயல்பட ஏதுவாக இருக்கும் என்பதால், இதை வரவேற்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலும், வேறு யாராவது பேசுகிறீர்களா? இல்லையே! மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

---

[@] 3-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2007 மே 10

## (ஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2007). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் யாராவது பேசுகிறீர்களா? திருமதி கமலாம்பாள், சொல்லுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு சட்டமுன்வடிவின்மீது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கருத்து சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு மாணவர்களை ஏற்றிச்செல்லும் ஊர்திகளின் இருக்கைகளுக்குக் காலாண்டுக் கட்டணம் ரூபாய் 150/-லிருந்து ரூபாய் 50/- மற்றும் ரூபாய் 100/- ஆகக் குறைத்திருப்பது வரவேற்கக்கூடியது. இதனால், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் குடும்பத்துக் குழந்தைகளின் கல்விக்குப் பேருதவியாக இருக்கும். ஆனால், ஒன்றை நான் இங்கே வற்புறுத்திக் கூறுகிறேன்.

சலுகைபெற்ற கல்வி நிறுவனங்கள், குழந்தைகளின் பேருந்துக் கட்டணத்தைக் குறைத்து வசூலிக்க வேண்டும். குறைக்கப்படாமல் பழைய கட்டணத்தையோ, கூடுதலாகவோ வசூலிக்கப்படுமானால், அந்தக் கல்வி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்தக் கட்டணச் சலுகை முழுக்க மாணவர்களுக்குப் பயன்பட வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

---

@ 8-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2007 மே 10]

(முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்திலே, பள்ளி மாணவர்களுக்கு ரூ.50/- ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.100/- ஆகவும் குறைத்ததற்கு நன்றி தெரிவித்து, இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, இதுபோன்ற கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குக் குறைத்திருக்கிறதா, அதைக் குறைத்த முறையிலே வசூலிக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு கமிட்டி ஒன்றை அமைத்து, ஆங்காங்கே மாவட்ட அளவிலே ஒரு கமிட்டி அமைத்து, அதைப் பார்வையிடுவதற்கு, அதுபோன்ற கட்டணங்களைக் குறைத்து வாங்குகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு, அந்தக் கூட்டம் மாதம் ஒருமுறை, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடுவதற்கு ஏற்ற வகையிலே இந்தச் சட்டத்திலே விதிமுறைகளைச் சேர்க்க வேண்டுமென்று பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பிரிவு-2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு-2, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரில் ஒருவர், தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

திருத்தம் முன்மொழியப் பெறவில்லை.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10 /2007), மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/ 2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது திருத்தம். . . (குறுக்கீடு) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் உடனடியாக நடத்துவதை நான் வரவேற்கிறேன். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிருவாகிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர்கள், சரியாக இருக்கிறார்களா என்பதைப் பார்த்து, சரியானவர்களை வாக்களிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இப்போது, நமது அரசு விவசாயிகளுக்கு ஏறத்தாழ ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை இரத்து செய்திருக்கிறது. அந்த இரத்து செய்த பணத்தை உடனடியாக அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும். அப்போதுதான் எல்லா விவசாயிகளுக்கும் கடன் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் திருத்தமே கொடுத்திருக்கிறேன். என்னைத்தான் முதலில் கூப்பிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். பேசிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

@ 1-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

நீங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) எடுக்கப்படும். உட்காருங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நிலையில் எனது கருத்துகளை, இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். எனது தொகுதியில் உள்ள கொல்லச்சேரி ஆதி திராவிடர் கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அங்கே முடக்கப்பட்டு இருக்கின்றது. Special Officer மட்டும் இருக்கின்றார்; ஆனால், சங்கம் இன்றைக்கு இயங்கவில்லை. அதன்காரணமாக அங்கே இருக்கிற தொழிலாளர்கள் அத்தனை பேரும், பணி இல்லாத காரணத்தினாலே அங்கே திருட்டுத்தனமாகக் கல் உடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அரசுக்கு வருகின்ற வருவாயும் இழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கல் உடைக்கின்ற ஆதி திராவிட தொழிலாளர்களுடைய அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை, அரசாங்கம் புதுப்பித்துத் தருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இங்கே பதியவைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம். . . (குறுக்கீடு) அடுத்து, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுக்கும்போதுதான் உங்களுடைய திருத்தம் எடுக்கப்படும், உட்காருங்கள். (குறுக்கீடு) பிரிவிலேதானே கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) திரு. கே.வீ. ராமநாதன், சொல்லுங்கள்.

முற்பகல் 11-40

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலங்களுக்கு நீட்டிப்பது குறித்து இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படாத காரணத்தால், இதைக் கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தனி அலுவலர்களே நீண்ட காலம் இருக்கக் கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரவேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்போவதாகச் சொல்லப்படுகின்றது. தேர்தலை நடத்துவதற்கு முன்னால், கூட்டுறவுச் சங்கங்களில் உண்மையான உறுப்பினர்களைச் சேர்த்து, தேர்தலை நடத்துவதுதான் நல்லது. நீதிமன்றத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் நீதிமன்றத்தின் மூலமே





வழிமுறைகளை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரத்தில், உள்ளாட்சித் தேர்தலை நடத்த, மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளதைப்போல, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையம் என்ற ஒன்றை உருவாக்கவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின்சார்பாகக் கருத்து சொல்லி அமர்கின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை வரவேற்கும் அதேநேரத்தில், தமிழ்நாடு முழுவதும் சிறக்குறைய மலைவாழ் மக்களுடைய பல்பெரு நோக்குடைய 17 கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்த நிலையிலே உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக அரசும், அவற்றைச் செயல்படுத்துகின்ற விதத்திலே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதைத் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தவேண்டுமென்று கோருகின்றோம். அதேநேரத்தில், அறிவித்தபடி, ஏற்கெனவே சட்டமுன்வடிவில் குறிப்பிட்டுள்ளபடி, தேர்தலை உடனடியாகக் குறிப்பிட்ட காலத்தில் நடத்தவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது. (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பிரிவுவாரியாகத்தானே கொடுத்திருக்கின்றீர்கள்? உட்காருங்கள். சேகர்பாபு, நீங்கள் கொடுத்த திருத்தம் 2-வது பிரிவில் இருக்கின்றது, உட்காருங்கள். திரு. தி. இராமசாமி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்தின்படி தனி அலுவலர்களின் பதவிக் காலம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி ஜெயராமன், you are disturbing. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்கின்றேன். அப்பொழுதிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றேன், நீங்கள் கத்திக் கொண்டேயிருக்கின்றீர்கள்!

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்தின்படி தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலங்களுக்கு நீட்டிப்பதற்காக இந்தச்

சட்ட முன்வடிவு வந்திருக்கின்றது. ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தின்மூலம், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் பின்னுக்குக் கொண்டு சென்றுவிடுமோ என்ற ஓர் அச்சம் ஏற்படுகின்றது. எனவே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை அறிவித்தபடி முறையாக நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சொல்லுங்கள். பேசப்போவதாகச் சொன்னீர்களே, பேசுங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, நீங்கள் கொடுத்த திருத்தம் 2-வது பிரிவில் இருக்கின்றது. திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சொல்லுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை மேலும் ஆறு மாத காலங்களுக்கு ஒத்திவைப்பது சம்பந்தமானதாகும். கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்பதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு மூச்சாக, அக்கறையாக உள்ளது. ஆனால், இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே வாக்களிப்பவர்கள், உண்மையான கூட்டுறவாளர்களாக இருக்கவேண்டும். எனக்கு முன்பாக, கட்சிகளின் அங்கத்தினர்கள் பேசியதைப்போல, 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கடந்த 10 ஆண்டுக் காலமாக, இதுவரை புதிதாக யாரும் கூட்டுறவுச் சங்கத்திலே உண்மையான கூட்டுறவாளர்கள், வாக்காளர்களாகச் சேர்க்கப்படவில்லை. எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு இருக்குமாயினும், அதற்குத் தக்கவாறு சட்டத் திருத்தம் செய்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கம், விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் உண்மையான கூட்டுறவாளர்கள் பங்கேற்று, தேர்தலிலே வாக்களிப்பதற்கான வாக்குரிமை அளித்து, இந்தத் தேர்தலையும் நடத்தவேண்டுமென்று கூறிக்கொள்கின்றேன்.

இன்னொரு விவரம் கடந்த 2, 3 நாட்களாக மாநிலம் முழுவதும் disqualification செய்யப்பட்டவர்கள், permanent disqualification செய்யப்பட்டவர்கள், இப்போது மீண்டும் தகுதி உடையவர்களாக மாற்றப்பட்டு வருகின்றார்கள். இதுகுறித்தும், இந்த அரசு கவனம் செலுத்தி, முன்பு கூட்டுறவு இயக்கங்களிலே தவறு செய்தவர்கள், அதன்மூலம் நிரந்தரமாகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்கள், இப்பொழுது தகுதி உடையவர்களாக மாற்றப்பட்டு வருகின்றார்கள்.





அவர்கள் எப்பொழுதும்போல், தொடர்ந்து தகுதி இழந்தவர்களாகக் கருதப்பட்டு, தேர்தலை நடத்தவேண்டுமென்ற திருத்தத்தையும் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பொறுத்தளவில், ஏற்கெனவே மானியக் கோரிக்கையிலே, ஜூன் மாதம் 8 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்றும், அதற்குத் தேவையான பணிகளில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் அறிவிப்புச் செய்திருந்தேன். ஏற்கெனவே உள்ள தனி அலுவலர்களின் பதவிக் காலம், இந்த 25 ஆம் தேதி வரைதான் இருக்கிறது. எனவே தேர்தலை 5 கட்டங்களாக நடத்துவதற்கு schedule எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. எனவே, 25 ஆம் தேதி முடிந்துவிட்டால், உடனே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிர்வாகிகள் வா முடியாது. அதனால்தான், இப்போது தனி அதிகாரிகளுடைய பதவிக் காலங்களை நாங்கள் நீட்டிக்கக் கேட்டிருக்கின்றோம். இன்னொன்று, ஏற்கெனவே 12-6-2001 அன்று, இதே மாமன்றத்திலே, ஓர் அவசரச் சட்டம் இயற்றப்பட்டு, அது உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, உயர் நீதிமன்றத்திலே, தனி அதிகாரிகள் பதவிக் காலங்களிலே உறுப்பினர்களைச் சேர்த்து, தேர்தல் நடத்தக்கூடாது என்று, உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. எனவேதான், நாங்கள் சொன்னோம். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை ஏற்று கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு முனைப்போடு செயல்படுகின்ற காரணத்தினால்தான், புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியாது. எனவே, உயர் நீதிமன்ற ஆணையை ஏற்று, புதியதாக இப்போது தேர்தல் நடத்தவிருக்கிறோம்.

மானியக் கோரிக்கையிலே சொன்னதைப்போன்று, இது உடனே செய்து முடிக்கப்படும். இங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கூட, இது அச்சத்தை எழுப்புமோ என்று கேட்டார்கள். அச்சம் எழவேண்டிய அவசியமில்லை. நேற்றையதினம், அதற்காக, அந்தத் தேர்தலை நடத்துவதற்காகக் கூடுதல் பதிவாளரைத் தனியாக நியமித்து, ஆணை பிறப்பித்துவிட்டோம். தேர்தல் வேலைகளெல்லாம் இன்றைக்குத் தொடங்கப்பட்டுவிட்டன. தேர்தல் கட்டாயம் நடைபெறும்.

இங்கே தொல்லைச் சேரியிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தில், தனி அதிகாரி இருக்கிறார்; உறுப்பினர்களெல்லாம் இல்லையென்று சொன்னார்கள். அதிகாரிகளிடத்தில் உடனே அதைச் சொல்லி, அதற்குத் தேர்தல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வேனென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**பிரிவு 2**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2; திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரில் ஒருவர், தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் முன்மொழிகின்ற அறிவிப்பைக் கொடுத்திருந்தால், முதலிலே அந்தத் திருத்தத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். (குறுக்கீடு) முன்மொழிவதாக மாத்திரம் சொல்லுங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு எங்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டாம். திரு. சேகர்பாபு எங்களுக்குப் பாடம் சொல்லித் தர வேண்டாம். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) முன்மொழிகின்றேன் என்று மாத்திரம் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 2, for the expression 'six years', substitute the expression 'seven years'."

என்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகின்றேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தயாராகி, அதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று இங்கு சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. 1996-2001 கடந்தகால ஆட்சிக் காலத்தில், அப்போது கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்கள் நடத்தப்பட்டன. நடத்தப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் சரியான முறையில் நடத்தப்படவில்லை என்பதை நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், அந்த நேரத்தில் தகுதியுள்ள கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை நீக்கிவிட்டு, முறைகேடாக, தமக்கு வேண்டியவர்களை மட்டும் உறுப்பினர்களாக வைத்துக்கொண்டுதான், அந்தக் காலக்கட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டு, அவற்றினுடைய பொறுப்பாளர்கள்தான், ஐந்தாண்டுக் காலம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகித்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் நலிவடைந்து, அழியக்கூடிய அபாயக்கட்டத்தில் இருப்பதற்கு, அந்த முறைகேடாகத் தேர்தல் நடத்தப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகிகள்தான் காரணம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உதாரணமாக, நானே பெரியகுளம் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினுடைய உறுப்பினராக இருக்கிறேன். 1996-2001-ல் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தேர்தல் நடத்தும்போது, என்னுடைய பெயரையே அவர்கள் அடித்துவிட்டு, நீக்கிவிட்டு அந்த நேரத்திலே தேர்தல் நடத்தினார்கள். அதை நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். பத்தாண்டுகளுக்கும் மேலாக யாரையும் உறுப்பினர்களாகச் சேர்க்கவில்லை. நீங்கள் மீண்டும் தகுதியுள்ள உறுப்பினர்களை, புதிய உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டு, தேர்தல் நடத்துவதுதான் ஜனநாயக முறையை நீங்கள் ஒத்துக்கொண்டதாக அர்த்தம் ஆகுமே தவிர, பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டு

மீண்டும் தேர்தல் நடத்தினால், 1996 காலத்தில் எந்த அளவுக்குக் கூட்டுறவு நிறுவனங்கள் இருந்தனவோ அந்த நிலைதான் உருவாகும் என்பதை நான் இந்தச் சட்டமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் புதியதாக உறுப்பினர்களைச் சேர்த்து, தேர்தலை நடத்தலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள்தான் ஐந்தாண்டுக் காலம் ஆட்சியிலே இருந்தார்கள். அவர்களை, புதியதாக உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தலை நடத்தவேண்டாமென்றா நாங்கள் கேட்டோம்? நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நானே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். தேர்தல் நடத்துகிறேன் என்று ஆட்சிக்கு வந்தீர்களே, ஐந்தாண்டுக் காலமாக ஏன் தேர்தல் நடத்தவில்லை என்று பலமுறை நானே இங்கே பேசியிருக்கிறேன். அப்போது கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த நம்முடைய மாண்புமிகு தனபால் அவர்கள், மோகன் அவர்கள், நம்முடைய இப்போது உறுப்பினராக இருக்கின்ற ஜெயராமன் அவர்களெல்லாம், உடனே தேர்தல் நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லித்தான், பிரிவு 89-ஏ என்கிற ஒரு பிரிவைச் சேர்த்து, புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று இம்மாமன்றத்திலே அவர்கள் நிறைவேற்றினார்கள். அதை எதிர்த்து சிலர் வழக்குக்குப் போனார்கள். உயர் நீதிமன்றத்திலே, புதிய உறுப்பினர்களைத் தனி அலுவலர் காலங்களிலே சேர்க்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியது. நாங்கள் சேர்ப்பது அல்ல. தனி அலுவலர் காலங்களிலே புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக் கூடாது என்று உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கிறது. எனவே, அந்தத் தீர்ப்பை வைத்துத்தான் இப்போது தேர்தல் நடத்த முடியும்; புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியாது; ஒன்று. தேர்தல் நடத்துவது என்பது, இங்கே இருக்கின்ற அமைச்சர்களோ, இங்கே இருக்கின்ற செயலாளர்களோ நடத்துவது அல்ல. கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளை அதற்கென்று நியமனம் செய்து, கூட்டுறவினுடைய சட்டத் திட்டங்களை எல்லாம் அவர்களிடம் கொடுத்து, உரிய மனுக்களைப் பெற்று, அங்கே இருந்து notification போட்டு, தேதியெல்லாம் போட்டு, தேர்தலிலே வாக்காளர்கள் யாரெல்லாம் ஓட்டுப் போட வேண்டும் என்பதையெல்லாம் ஒட்டி,



அதற்குப் பின்னால்தான் ஒவ்வொரு முறையும் தேர்தல் நடைபெறுகிறது. இது கூட்டுறவுச் சட்டம்; நிரம்ப நாட்களாக இருக்கிறது. புதியதாக நாம் ஒன்றும் இயற்றவில்லை. கூட்டுறவுச் சட்டம் வெகுகாலமாக இருக்கிறது. அதை வைத்துத்தான் தேர்தலை நடத்துகிறோம். அப்படித்தான் ஏற்கெனவே தேர்தலை நடத்தினோம். எங்கேயாவது தவறு நடக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், அதை விசாரணை செய்யலாமே ஒழிய, அதற்காக ஒட்டுமொத்தமாக, உங்களைப்போன்று 5 ஆண்டுக் காலம் வரை தேர்தலை நடத்தாமல் இருக்கமுடியாது. உயர் நீதிமன்றத்தின் ஆணைபிரகாரம் இப்போது தேர்தலைக் கட்டாயம் இந்த அரசு நடத்தும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், 5 ஆண்டுக் காலம் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே, ஏன் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை நடத்தவில்லை என்று இங்கே கேட்டார்கள். அந்த 5 ஆண்டுக் காலமும் வழக்கு, உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. எங்கள் ஆட்சியின் கடைசி காலக்கட்டத்தில், 2005 கடைசியில், டிசம்பர் மாதத்தில், அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? பழைய உறுப்பினர்களை வைத்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நீங்கள் கோர்ட்டுக்குச் சென்றீர்கள். அந்த 5 ஆண்டுக் காலமும் அது நிலுவையில் இருந்ததற்கு நீங்கள்தான் காரணம். பழைய உறுப்பினர்களை வைத்துத்தான் தேர்தல் நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. ஆனால், தகுதியுள்ள புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு தேர்தலை நடத்தக் கூடாது என்று உயர் நீதிமன்றம் சொல்லவில்லை. அதை நீங்கள் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் பொது மகா சபையிலே வைத்து, தகுதியுள்ள கூட்டுறவுச் சங்கங்களுடைய உறுப்பினர்களை, புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு தேர்தல் நடத்தலாம் என்று நாம் வழிவகை ஏற்படுத்தினால், அதற்குத் தடையாக யாரும் இருக்கமாட்டார்கள். எந்த நீதிமன்றமும் தடையாக இருக்காது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்கிறார்கள். புதிய சங்கத்தைக் கூட்ட வேண்டும் என்று சொன்னாலும்கூட சரி, அதிலே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், தனி அலுவலர்களுடைய காலங்களிலே — இப்பொழுது தனி அலுவலர்களுடைய காலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது — தனி அலுவலர்களுடைய காலங்களிலே, புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக் கூடாது என்பதுதான் ஆணை. தீர்ப்பில் அதுதான் வந்திருக்கிறது. தனி அலுவலர்களுடைய காலங்களிலே, புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக் கூடாது என்று ஒன்று; ஏற்கெனவே பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டு தேர்தல் நடத்துகிறோம் என்று சொன்னால், பழைய உறுப்பினர்களையும்கூட, அது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, மாவட்டத்திலே இருக்கிற மைய வங்கியாக இருந்தாலும் சரி, அல்லது வட்ட அளவிலே இருக்கின்ற நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும் சரி, எங்கேயாக இருந்தாலும் சரி, தகுதியுள்ளவர்களை மட்டும்தான் உறுப்பினர்களாகச் சேர்க்க முடியும். அந்தந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், அதற்கு என்று தகுதி இருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே ஒருவர் உறுப்பினராக ஆக வேண்டும் என்று சொன்னால், நிலம் வைத்து இருப்பவர்களும், விவசாயக் கடன் பெறுபவர்களும்தான் அங்கே அதில் உறுப்பினர்களாக ஆக முடிகிறது. ஆக, ஒவ்வொன்றிற்கும் ஒரு தகுதி இருக்கிறது. தகுதி இல்லாமல் எந்தக் காலத்திலும், யாரும், எப்பொழுதும் சேர்க்கப்படுவதில்லை. ஆக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக இருந்தாலும், கூட்டுறவு இயக்கங்களிலே தகுதியானவர்கள்தான் ஏற்கெனவே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். பழைய உறுப்பினர்கள் என்று சொன்னால், அவர்களுக்குத் தகுதி இல்லை என்று பொருள் அல்ல. எனவே, பழைய உறுப்பினர்களை வைத்துத்தான் இப்பொழுது தேர்தல் நடத்த இருக்கிறோம். ஆக, புதியதாக நிருவாகம் வந்தவுடனேயே, அப்போதுதான் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அவர்களை வைத்துச் சங்கங்களை நடத்த முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, என்ன சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வாய்ப்பளித்ததற்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே சேர்த்து, தேர்தல் நடத்த வேண்டும் என்று முனைகின்றபோது, நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டது அனைவரும் அறிந்ததே. இந்த 10 ஆண்டுகளில், அன்றைக்கு 10 வயது, 15 வயது நிரம்பி இருந்தவர்கள் இன்றைக்கு 20 வயது, 25 வயது, 30 வயது நிரம்பியவர்களாக இருக்கிறார்கள். இவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்து, தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்ற அதேநேரத்தில், இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெறுகின்றபொழுது, இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெறுவது என்பது, அனைவராலும் ஏற்றுக்கொண்டு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அதேநேரத்தில், ஓய்வுபெற்ற ஒரு நீதிபதியின் தலைமையில் கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் ஒன்றை ஏற்படுத்தி, மாநிலத் தேர்தல் ஆணையம் ஒன்றை ஏற்படுத்தி, இந்தத் தேர்தல்கள், ஜனநாயக முறையிலே நடைபெற வேண்டும் என்று என்னுடைய கருத்தை இந்த நேரத்தில் பதிவு செய்கின்றேன்.

முற்பகல் 11-55

கடந்த காலங்களில் மாநகராட்சித் தேர்தல் நடைபெற்றபோது, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளரையே நீதிமன்றம் கண்டனத்திற்குள்ளாக்கிய ஒரு செயல் நடைபெற்றிருக்கின்ற காரணத்தினால், தற்போது நீங்கள் அமைக்க இருக்கின்ற, ஒத்துக்கொண்டுவிட்டால் ஏற்படுத்தப்பட இருக்கிற தேர்தல் ஆணையத்தை, ஓய்வுபெற்ற ஒரு நீதிபதி தலைமையின்கீழ் அமையும் ஆணையமாக உருவாக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைப் பதிவு செய்கின்ற நேரத்தில், தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்ட அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றி விட்டோம் என்று நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். தேர்தல் அறிக்கையிலேயும், தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலேயும், விரைவில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறும் என்று கூறியிருந்தீர்கள். அந்தத் தகவலானது இன்றைக்குப் பொய்ப்பித்துவிட்டது என்பது நீங்களே இப்போது ஏற்றுக்கொண்டு, மேலும் கால நீட்டிப்புக்கு அவகாசம் கேட்டு, இங்கே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதிலிருந்தே தெரிகிறது. அடுத்தாற்போல், 24, 25 ஆம் தேதி வரையில் இந்தக் கூட்டுறவுச் சங்கத் தனி அலுவலர்களுக்குண்டான கால அளவு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே [illegible] இந்தச் சட்டத்

227670

திருத்தம் அமலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று நீங்கள் கூறியிருப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, தற்போதைய மசோதாவை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, அனைத்து விதிமுறைகளையும் முறையாக ஏற்படுத்தி, முறையான மசோதாவை நீங்கள் மீண்டும் இந்த அவையிலே தாக்கல் செய்ய வேண்டுமென்ற என் கருத்தைப் பதிவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேகூட எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். நீங்கள் case போட்டீர்கள்; நீங்கள் case போட்டீர்கள் என்று. நாங்கள் யாரும் case போடவில்லை. இங்கே இருக்கிற அமைச்சர்களோ, நாங்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ நாங்கள் யாரும் case போடவில்லை. யாராவது உறுப்பினர் case போட்டிருப்பார். நாங்கள் போடவில்லை. ஒன்று. அரசாங்கத்திலே எப்போதும், கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் அதற்கென்று எப்போதுமே ஒரு கூடுதல் பதிவாளரையே நியமிப்பார்கள். தேர்தலைப் பொறுத்தளவிற்கு அப்படி அமைக்கப்பட்டுவிட்டது. அவர்கள்மூலம் கூட்டுறவுச் சட்ட திட்டங்களுக்குட்பட்டு முறையாக இந்தத் தேர்தல் நடைபெறும். இதில் ஏதாவது சிக்கல் இருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால், தலைவருடைய அரசாங்கம் எப்போதும் முனைப்புடன் செயல்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு, உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி வழியில்லை என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இங்கே தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், 1996-லே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைக்கப்பட்டதற்குப் பிறகு, நம்முடைய முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர், எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், அண்ணன் நம்முடைய ஓ. பன்னீர்செல்வம் போன்றவர்கள் தகுதியிழப்பு செய்யப்பட்டு ஓட்டளிக்க முடியாமல் போனவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்கள், அப்படிப்பட்டவர்களையாவது மீண்டும் அங்கத்தினர்களாகச் சேர்த்து, உண்மையான கூட்டுறவாளர்கள் பங்கேற்கத்தக்க வகையிலே, 1996-க்குப் பிறகு, திராவிட முன்னேற்றக்



கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, தகுதி இழப்பு செய்யப்பட்ட உண்மையான அந்தந்தச் சங்கங்களுடைய கூட்டுறவாளர்களுக்கு மீண்டும் தகுதி அளித்து, வாக்குரிமை அளித்து, அவர்களும் வாக்களிக்கத்தக்க வகையிலே, இந்த அரசு தேர்தலை நடத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி இழப்புகளை, யாரும் நேரடியாக, அரசாங்கம் ஆணை பிறப்பித்து தகுதி இழப்பு செய்வதில்லை. ஏற்கெனவே, முந்தைய அரசு, சிலர்மீது திட்டமிட்டு பொய் வழக்குப் போட்டு, அவர்களையெல்லாம் தகுதி இழக்க வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீக்க வேண்டுமென்று அரசாங்கம் எந்தவித ஆணையையும் இடவில்லை இதுவரை. ஆனால், மேல்முறையீடு என்று ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. அவரவர்கள் நேரடியாகச் சொல்கிறார்கள். மேல்முறையீடுக்கு J.R. இருக்கிறார். அதற்கு என்று Additional Registrar ஒருவர் இருக்கிறார். கூடுதல் பதிவாளர் ஒருவர் இருக்கிறார். அவரிடத்திலே முறையிடுவார்கள். அப்படி முறையிட்டு, அதிலே, ஏற்கெனவே சென்ற அரசாங்கம் பொய் வழக்குப் போட்டு அல்லது அவர்கள்மீது தவறான குற்றம்சாட்டி அவர்களைத் தகுதி நீக்கம் செய்திருந்தால், அவர்களை விடுவிப்பதற்கு அந்தச் சட்டத்திலே இடமிருக்கிறது; கூட்டுறவுச் சட்டத்திலே இடமிருக்கிறது. அப்படித்தான் நடைபெற்றுக்கொண்டு இருக்கலாமேயொழிய, அரசாங்கம் எந்தவித ஆணையையும் இதுவரை பிறப்பிக்கவில்லை. அப்படி யாரையும் நாங்கள் விடுவிக்கவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*நண்பகல் 12-00*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இப்போது வரிசையாக ஒவ்வொரு சட்டமுன்வடிவையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு இருக்கின்றீர்கள். இவ்வாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற நேரத்தில், ஒரு விதியை நாம் பின்பற்ற வேண்டும் என்று எண்ணுகிறேன். ஒரு சட்டமுன்வடிவுக்கு ஒரு கட்சியில் இருந்து ஒருவரை மட்டுமே, நீங்கள் பேச அனுமதிக்க வேண்டும். அதுதான் மரபு. ஒவ்வொரு சட்டமுன்வடிவுக்கும் இரண்டு பேர், மூன்று பேர் பேசத் தொடங்கினால், இந்த 11 சட்டமுன்வடிவுகளையும் ஆய்வு செய்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இயலாது. எனவே, ஒரு சட்டமுன்வடிவுக்கு, ஒரு கட்சிக்கு ஒருவர் விரும்பினால் மட்டுமே, என்று நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மரபைக் குறிப்பிட்டு கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட மரபு, சட்டமன்றத்திலே இதுவரையிலும் இல்லை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நாங்கள் 5 ஆண்டுக் காலம் எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து இருக்கிறோம். ஏற்கெனவே பேரவைத் தலைவர் இருந்திருக்கிறார். எப்போதுமே கட்சிக்கு ஒருவரைத்தான் பேச விடுவார்கள். ஏனென்றால், ஆய்வு செய்வதிலே, அப்போதுதான் Bill Pass ஆகும். அப்படித்தான் பேச விடுவார்கள். என்னவோ, இப்போது புதிதாகச் சொல்கிறார். ஒரு கட்சியில் 60 பேர் இருந்தால், 60 பேர்களும் எழுந்து கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும்

பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2007), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2007)● ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கின்றேன். மேலும், அதிலே கேரளாவைப் போல, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினை குறைந்தபட்சக் கூலி ரூ.100 நிர்ணயிக்கின்ற திருத்தத்தையும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஏற்று திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள் திருத்தச் சட்டத்தை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதேவேளையில், உண்மையான உடலுழைப்புத் தொழிலாளர்களை அரசு முறைப்படுத்தி, கண்டறிந்து அவர்களுக்கான சலுகைகளை வழங்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் திருத்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். ஆனாலும், ஏற்கெனவே உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் அதில் பதியக்கூடிய உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கும், பலன்களைப்

● 9-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





பெறுவதற்குமான உள்கட்டமைப்பு நிருவாக ஏற்பாடுகள், போதிய அளவில் இல்லை. ஆகவே, அதை கவனத்தில் கொண்டு நல வாரியம் செயல்படுவதற்குரிய நிருவாக ஏற்பாடுகளை, உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று கவனப்படுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பத்மாவதி, பேசுங்கள்.

பிற்பகல் 12-05

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேசமயத்தில் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்காகப் போடப்பட்டிருக்கின்ற இந்த நல வாரியம், சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கென்று தனி அதிகாரிகள், நிருவாகங்களைச் செயல்படுத்துவதற்கு நியமித்து, அதனை முறைப்படுத்த வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு, அதேபோன்று உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அன்றன்றைக்கு இருக்கின்ற விலைவாசிகளுக்கு ஏற்ப, நிர்ணயிக்க வேண்டும்; உயர்த்த வேண்டுமென்று கேட்டு இச்சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2006) பேரவையில் ஆய்வு செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2007), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு என்ன? சொல்லுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் திருத்தச் சட்டமுன்வடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்ற அதேநேரத்தில், திருக்கோயில்களுக்க

@ 20-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அறங்காவலர்கள் குழு ஓராண்டிற்கு ஒருமுறை மாற்றியமைக்கப் படுகின்றது. இம்முறையை, 5 வருடங்களுக்கு ஒருமுறை என அறங்காவலர்களுடைய பதவிக் காலத்தை மாற்றியமைத்து அறிவிக்கப்பட வேண்டும். அதேபோல, அறங்காவலர்கள் நியமிக்கப்படும்போது, குறிப்பிட்ட காலவரையறைக்குள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று உடனடியாக சட்டம் இயற்றப்பட வேண்டும். திருக்கோயில்களில் பணியில் இருக்கும் பூசாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள அறநிலையத் துறையினுடைய திருக்கோயில்களில் காலியாக உள்ள பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். அதேபோல, அறங்காவலர்கள் குழுக்கள் பல கோயில்களுக்கு நியமிக்கப்படாமல் உள்ளன; அவற்றை உடனடியாக நியமித்து அறிவிக்க வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக நான் வலியுறுத்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு போடுவது வரவேற்கக் கூடியது. அதில் திருக்கோயில்களின் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களை நியமிக்க வேண்டும். அதில் சமூக விரோதிகள் நுழைந்து விடக்கூடாது. அதேவேளையில், தமிழ்நாட்டில் தமிழர்கள் வழிபடும் கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெற வேண்டுமெனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், மருத்துவர் அய்யா அவர்களின் சார்பாகவும் கேட்டு, இதனை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை



பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-10

## (ஏ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2007). மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2007)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. சொல்லுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவில், 5 ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக "ஒவ்வோர் உள்ளூர் நூலக அதிகார அமைப்பின் (Local Library Authority) உறுப்பினர்களும் அவர்களுக்கிடையே இருந்து ஒரு தலைவனையும், ஒரு துணைத் தலைவனையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்" என்றும், "முதன்மைச் சட்டத்திலோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலோ என்ன அடங்கியிருந்தபோதிலும், 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாளன்று நடைபெற்ற சென்னை மாநகர உள்ளூர் நூலக அதிகார அமைப்பின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைவர் தேர்தல், இந்தச் சட்டத் திருத்தத்தின்படி செல்லத்தக்க வகையில் நடத்தப்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் கூறப்பட்டுள்ளது. ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்த பிறகுதான், அந்தச் சட்டத் திருத்தத்திற்கான நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்தச் சட்டத் திருத்தம்,

@ 9-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



ஏற்கெனவே நடைபெற்ற சென்னை மாநகர நூலகத் துணைத் தலைவர் தேர்தலை உறுதிப்படுத்துவதற்காகவே கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. ஜனநாயக நாட்டில், ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பெற வேண்டும். இந்த நூலகங்களுக்கு யார் தேர்தலை நடத்துவது? அரசா; அரசால் நியமனம் செயயப்படுகின்ற அரசு அலுவலர்களா; அல்லது, Election Commission போன்ற சுய அதிகாரம் பெற்ற அமைப்பா என்பதைப் பற்றிய விவரங்கள் இல்லை. இந்தச் சட்டத் திருத்தம் எப்படி இருக்கிறது என்றால், ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுவிட்ட தண்டனைக்காக, ஒரு குற்றத்தை உருவாக்கி, அதற்காக ஒரு சட்டத்தை உருவாக்குவதுபோல், இந்தச் சட்டத் திருத்தம் உள்ளது. எனவே, வாக்களிக்கும் வாக்காளர்கள் யார்; எந்த முறையில் தேர்தல் நடத்தப்படுகிறது; தேர்தலை யார் நடத்துவது என்பதையும் வெளிப்படையாக அறிவித்து, தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்பட வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வலியுறுத்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். சொல்லுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Local Library Authority, 1948 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கின்றேன். உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, சென்னை மாநகர உள்ளூர் நூலக அதிகார அமைப்புக்காக நடத்தப்பட்ட துணைத் தலைவர் தேர்தலுக்கு உரிய வகையில்தான் இந்தத் சட்டத் திருத்தம் வருகிறது என்று சொன்னார்கள். Majority பலம் உள்ள அரசு, in anticipation—எதிர்பார்ப்புப்படி—செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. அதிலே எதுவும் உள்நோக்கம் கிடையாது. அந்த வகையிலே, இந்தச் சட்டத் திருத்தத்தை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக முழுமையாக வரவேற்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில், துணைத் தலைவர் தேர்தல் என்பது நூலக உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; ஜனநாயக முறை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையும் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன், சொல்லுங்கள்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தின், தமிழ்நாடு சட்டம் 24/1948, 5 ஆம் பிரிவின்படி அமைத்து உருவாக்கப்பட்ட உள்ளூர் நூலக அதிகார அமைப்புக்கு, துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு மேற்சொன்ன சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். எந்த ஒரு அமைப்புக்கும், நிருவாகக் காரணம் கருதி தலைவர் இருக்கின்ற நிலையிலே, substitute-ஆக ஒரு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமான ஒன்றுதான். அதனால், இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதற்கு உள்நோக்கம் ஏதும் இருக்கிறதா என்று கேட்டார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொன்னார்கள். இதிலே உள்நோக்கம் கற்பிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லவே இல்லை. தவிர, ஓர் அமைப்புக்குத் தலைவர் இருக்கிறபோது, அந்த அமைப்புக்குத் துணைத் தலைவரை ஏற்படுத்தக்கூடிய ஒரு மரபு நீண்ட காலமாக இருக்கிறது. பல்வேறு உள்ளாட்சி அமைப்புக்களிலே இருக்கிறது. பல்வேறு அமைப்புக்களிலே தலைவர் இருக்கிறபோது, துணைத் தலைவர் இருக்கக்கூடிய அந்த அமைப்பு நீண்ட நெடுங்காலமாகப் பின்பற்றப்படக்கூடிய ஒரு மரபு. தலைவர், ஒரு காலத்திலே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், அவர் அந்தப் பணியினை ஆற்ற முடியாத நிலை ஏற்படும் என்று சொன்னால், அந்தப் பணியினைத் துணைத் தலைவர் கவனிப்பதற்கு ஏதுவாகத்தான் இந்தத் திருத்தச் சட்டத்தை அரசு இங்கே கொண்டுவர விரும்புகிறது.

*பிற்பகல் 12-15*

இன்னும்கூட, அவர் யார் இதை, எந்த உறுப்பினர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இந்தச் சென்னை



மாநகர நூலக ஆணைக் குழுவைப் பொறுத்தமட்டிலே, மாநகராட்சியாலே தேர்வு செய்யப்படக்கூடியவர்கள் 3 பேர்; அதைப்போல சென்னை நகரிலே இருக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட நூலகங்களிலே இருக்கக்கூடிய அங்கத்தினர்கள், அவர்கள் 3 பேர்; உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் என்று அவர்கள் இரண்டு பேர்; அவர்கள் தவிர, நம்முடைய கல்லூரி முதல்வர் ஒருவர்; அதற்கு மேலாக அரசு அனுமதித்திருக்கக்கூடிய, அரசால் நியமிக்கக்கூடிய உறுப்பினர்கள் இரண்டு பேர்; ஆக, இத்தனை பேரைக் கொண்ட ஓர் உள்ளூர் நூலக ஆணைக் குழு உருவாக்கப்பட்டு, இந்த நூலக ஆணைக் குழு உறுப்பினர்கள் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய, இந்தத் தேர்தல் கூட்டம்கூட, கடந்த ஜனவரி 24 ஆம் தேதி அவர்கள் அந்தக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே துணைத் தலைவரைத் தேர்ந்து எடுக்கவேண்டுமென்று அதிலே ஒருவர் முன்மொழிந்து, அது முறையான வழியிலே வழிமொழிந்து, அந்தத் தீர்மானம் அரசுக்கு ஏற்படுத்தப்பட்டு, அவர்களாகவே கூடி, அந்த முடிவை எடுத்து, அரசுக்கு அந்தக் கருத்துருவினை அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலேதான், அரசு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்றிருப்பவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்து, இந்த அளவிலே என்னுடைய கருத்து விளக்கம் அளிக்கிறது என்ற நம்பிக்கையில் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2007 மே 10]

## (ஐ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2007), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஏற்கெனவே இந்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வந்திருந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல்வேறு பொருட்களுக்கு வரி விலக்கெல்லாம் அளித்து, இங்கே அறிவித்தார்கள். அப்போது ஒரு கோரிக்கையை நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைத்து, ஊதுபத்திக்கு வரி விலக்கு முழுமையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஊதுபத்திக்கு முழுமையாக அந்த வணிக வரியிலிருந்து விலக்களித்து இங்கே அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டமுன்வடிவில் அது சேர்க்கப்படவில்லை. ஊதுபத்தி விடப்பட்டிருக்கிறது.

அதேபோல, வெல்லத்திற்கு நான்கு சதவீதம் இப்போது வரியை வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அதிலே சில குளறுபடிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதையும் தாங்கள் சரி செய்து, வெல்லத்திற்கு எந்தவிதமான விற்பனை வரியும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், ஊதுபத்திக்கு ஏற்கெனவே வரி விலக்கு அறிவிக்கப்பட்டதை, அதைச் சட்டத்தில் நீங்கள் கொண்டுவர

@ 9-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வேண்டுமென்றும் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாகக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையில் பேக்கரிப் பொருள்களுக்கான பன், பிஸ்கட் போன்றவற்றிற்கு இணக்க வரிக்காக வரி விதிப்பதும், அதேபோன்று Registered branded item-களுக்கு வரி விதிக்கக்கூடிய விதத்திலும், இந்தத் திருத்தச் சட்டம் வழிவகுக்கிறது. அதிலும், சாதாரணமாக குடிசைத் தொழிலாகச் செய்பவர்கள், branded item ஆக இருக்கும்; ஆனால், register செய்யாமல் இருப்பார்கள். அவர்களை அது பாதிப்பது மட்டுமல்லாமல், ஏழைகள் பயன்படுத்தக்கூடிய, சிறு வியாபாரிகள் பயன்படுத்தக்கூடியவை என்பதால், இது அவர்களையும் பாதிக்காதா என்பதையும் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, பால், தயிர், மோர் போன்றவற்றிற்கு 100 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு வருமானத்தினுடைய வரி விதிப்பு என்பது ஒரு கோடி என்று குறைப்பதன் வாயிலாக, இருக்கின்ற விவசாயிகள் அதேபோன்று, விவசாயக் கூலிகள் அதைப் பயன்படுத்தும்போது, சாதாரண ஏழை மக்களைப் பாதிக்கும் என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், பருப்பு, சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், 300 கோடி ரூபாயிலிருந்து ஆண்டு வருமானம் 500 கோடி என்று இன்று இத்திருத்தச் சட்டத்தில் வருகின்றது. 300 கோடி ரூபாய்க்கு அதிகமாக எண்ணெய், பருப்புகள் அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் வரி கட்டுபவர்கள் அதிகமாக இல்லை. அப்படி இருக்கும்போது 500 கோடி கொண்டுவருவதன் அர்த்தம் என்ன? இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக எண்ணெய்க்கும், பருப்புக்கும் வரியைக் குறைத்தீர்கள். ஆனால், இன்றையதினம் மலைபோல் இரண்டும் ஏறி, நியாயவிலைக் கடையிலே கொடுக்கவேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கின்ற நேரத்தில், இந்த 500 கோடியினுடைய உள்நோக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.





**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத் திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், வணிகர் சங்கத்தைச் சார்ந்த நிருவாகிகள், வணிகர்கள், சிறு, பெரிய வியாபாரிகள் என்று அனைத்து மக்களும் பல்வேறுவிதமான கோரிக்கைகளை நம்முடைய அரசுக்கு முன்வைத்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய அரசு இப்போது சில குறிப்பிட்ட சில வணிகங்கள் உள் மாநிலத்தில் கொள்முதல் செய்திருக்கின்ற—அதேபோல் உதிரி பாகங்கள், அதேமாதிரி துணைப் பொருள்கள், அதேபோல் வணிகர்கள் இணக்கமுறை வரிகளை— அதைச் செலுத்துகின்ற வரி இல்லை. பேக்கரிப் பொருள்களுக்கு வணிகர்களுக்கு சகாய வரிவிதிப்பினை நீட்டித்தல், இணைப்புப் பட்டியலிலுள்ள சில இனங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'வாட்' என்கிற வரியை இந்த அரசு அமல்படுத்துகிறபோது, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்கள் அதை அமல்படுத்தும்போதுகூட, தமிழ்நாடு அரசு, மிகக் கவனமாக யோசித்து யோசித்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஆக, அப்படி முன்வருகின்றபோது, இந்த மதிப்புக் கூட்டு வரியின் மூலமாக, பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் நுகர்வோர்களாக இருக்கின்ற மக்கள். நுகர்வோர்களாக இருக்கின்ற அந்த மக்கள், பல்வேறு விதமான பொருள்களை வாங்குகிறபோது, அதிக விலையேற்றத்தினால் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகப் பரவலாகக் குற்றச்சாட்டு இருந்துவருகிறது. குறிப்பாக, உயிர்காக்கும் மருந்துகளின் விலைகள், மதிப்புக் கூட்டு வரி, தமிழ்நாட்டில் அமல்படுத்துவதற்கு முன்பு, விலைப் பட்டியலில் என்ன இருந்தனவோ, அதற்கு நேர்மாறாக இன்றைக்கு அதிகரித்ததற்கான புள்ளிவிவரங்கள் என் கையிலே இருக்கின்றன. இந்த விவாதம் வந்தபோதுகூட, நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலே எங்கும் மருந்து, மாத்திரைகளுடைய விலை ஏறவில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஏறாததற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், 'மெடிக்கல் ஷாப்' என்று சொல்லக்கூடிய மருந்துக் கடைகளிலே, அவற்றினுடைய விலையை, இந்த 'வாட்' முறையை வைத்துக்கொண்டு, அவர்கள் அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்றார்கள். அப்படி விற்பனை செய்துகொண்டிருப்பவர்கள்மீது நம்முடைய வணிக வரித் துறை தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக வழி காணவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இப்போது பேக்கரி உரிமையாளர்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரையும், செயலர், கமிஷனர் போன்றவர்களையும் சந்தித்து, அதிலே சில வரி விலக்குகள் வேண்டும்; இரண்டு விதமான வரிகள் தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும். உணவுப் பண்டங்கள், தின்பண்டங்கள், பேக்கரியிலே தயாரிக்கிற வற்றிற்குக்கூட வரி அதிகமாக இருக்கிறது; இரண்டு விதமான வரிகளை நாங்கள் கட்டுகிறோம் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இவற்றிற்கு விதிவிலக்கு என்பது இந்தச் சட்டத் திருத்தத்திலே தரப்படாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இப்போது தமிழக அரசு கொண்டுவந்திருக்கின்ற இந்த வரிச் சலுகைகள், அதாவது நான்கிலிருந்து மூன்று சதவீதமாகக் குறைந்து இருக்கிறது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தமிழகம் முழுக்க, இந்த 'வாட்' அமலாக்குவதற்கு முன்பாக, வணிகப் பெருமக்கள் பெருமளவிலே, தங்களது எதிர்ப்புகளைப் பதிவுசெய்து இருக்கிறார்கள். இன்னமும் சில பேர் தங்களை அழைத்துப் பேசி, ஒரு சரியான தீர்வு எட்டப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர். நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களின் குறைகளை நீக்க, சம்பந்தப்பட்ட வணிகர்களையும், சங்கங்களையும், அதனுடைய பிரதிநிதிகளையும், ஏனைய வணிகம் சார்ந்த, சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பேக்கரி வைத்திருப்போர், இன்னும் இருக்கின்ற மற்றவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுக்கு இந்த 'வாட்' மூலம் பாதிப்பு இல்லாமல் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், இதனுடைய பாதிப்பை மத்திய அரசு ஒரு தொகையாகக் கொடுத்து ஈடுசெய்துகொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறது. நாங்கள் இதனைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள், ஏற்கெனவே. ஆகவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, நுகர்வோர்களாக இருக்கின்ற பொதுமக்கள், அடித்தளத்தில், கீழேயிருக்கின்ற மக்களிலிருந்து, மேல்வர்க்க மக்கள் யாராக இருந்தாலும் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கு, இந்த வரிவிதிப்பு என்பது, போய்ச் சேர்கின்ற காரணத்தினாலே, நம்முடைய அரசு எதிர்வரும் காலங்களில் இதைக் கவனமாக சிந்தித்து, இதுபோன்ற பாதிப்புகளுக்குள்ளாகாத அளவிற்கு, வரிவிதிப்பு முறையை மாற்றுவதற்கு முன்வர வேண்டும் என்கிற என்னுடைய கருத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பதிவுசெய்து கொள்கிறேன். குறிப்பாக, இந்த உயிர்காக்கும் மருந்துகளின் விலையேற்றம் என்பது,



இதை அமல்படுத்தியதற்குப் பிறகு ஏற்றப்பட்டிருக்கிறது என்ற செய்தி பரவலாக வந்துகொண்டிருக்கிறது; அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ளவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தைப் பதிவுசெய்து அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வணிக வரி சட்டத் திருத்தம் சம்பந்தமாக, ஒருசில விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன். இந்த வரி விலக்கு வழங்கப்படுகிற பொருள்களும், அதேபோல வரிச் சலுகை வழங்கப்படுகிற சிறிய பொருள்களும், அந்தப் பட்டியலில் முறையாக இடம்பெறாத காரணத்தினாலே, அதிகாரிகள் கீழ்மட்டத்திலே இன்றைக்குச் சில பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். உதாரணமாக கடலை மிட்டாய்க்கு வரிக் குறைப்பை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், அதே இதர மிட்டாய்களுக்கு அந்தப் பெயர் பட்டியலில் இடம்பெறாத காரணத்தினால், அதற்கு வரி வசூலிக்கக்கூடிய நிலைமை வருகிறது. அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பது ஒன்று.

பிற்பகல் 12-25

அதேபோல, பிளாஸ்டிக் பொருட்களுக்கு, பொதுவாக நீங்கள் 4 சதவிகிதமாக வரி குறைத்திருக்கிறீர்கள். நல்ல செய்தி அது. ஆனால், அந்தப் பிளாஸ்டிக்கில் தயார் பண்ணக்கூடிய பொருட்களுடைய பட்டியல் அதில் முழுமையாக இடம்பெறாத காரணத்தினால், இப்பொழுது பிளாஸ்டிக்கிலேயே உற்பத்தி செய்யக்கூடிய hanger—சட்டைகள் எல்லாம் மாற்றக்கூடிய hanger இருக்கிறதே, அதற்கு—அந்த 4 சதவிகிதம் பொருந்தாது; 12 சதவிகிதம்தான் என்று கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் சில இடங்களிலே பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள். ஆகவே, இது மாதிரியான வரிக் குறைப்பு அல்லது வரிச் சலுகை இடம்பெறுகிற பொருட்களைப் பற்றிய ஒரு முழுப் பட்டியலை கீழுள்ள அதிகாரிகளுக்கு முறைப்படி தெரிவித்தால்தான், அரசு வழங்குகிற இந்தச் சலுகை முறையாகப் போய்ச் சேரும். ஆகவே, இதனை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மற்றொன்று; நான் ஏற்கெனவே அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறேன். இந்தப் பொருள்களில் இடம்பெறவில்லையென்றாலும், வணிக வரி, விற்பனை வரியில் சம்பந்தப்பட்ட

பிரச்சினை என்ற முறையில், இப்போது திருப்பூரில் உற்பத்தியாகக்கூடிய உள்நாட்டு பனியன்; அதன் உற்பத்திக்கு, இப்போது 'C Form' இல்லை என்றால், 10 சதவிகிதம் வரி வசூலித்து, 9 சதவிகிதத்தை நீங்கள் திருப்பி வழங்குகிற திட்டத்தை அமலாக்குகிறீர்கள்; நன்றி. ஆனால், குஜராத் மாநிலம், டெல்லி போன்ற மாநிலங்களில் 100 ரூபாய்க்குக் கீழே அந்த பனியனுடைய விலை, அடக்க விலை இருந்தால், அதற்கு வரி விலக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தில் அந்த வாய்ப்பு இல்லை என்றாலும், ஒரு புதிய சட்டத் திருத்தத்தின்மூலமாக, 100 ரூபாய்க்குக் கீழுள்ள பனியன்களுக்கு, உள்ளாடைகளுக்கு வரி விலக்கு அளிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்ற விளக்கத்தையும் அவர்களிடத்திலே கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஊதுபத்தி, வெல்லம் இவற்றைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஊதுபத்திக்கு மானியக் கோரிக்கையிலே வரி விலக்கு அளித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது அந்தப் பட்டியலிலே இடம்பெறும். இப்போது கொண்டுவரப்பட்டிருப்பது திருத்தம் என்கிற வகையினாலே, அது இதிலே இடம் பெறவில்லை. ஊதுபத்தி வரி விலக்குப் பட்டியலிலே இடம் பெறும்.

வெல்லத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். வெல்லத்திற்குக் கொள்முதல் வரி, விற்பனை வரி ஆகிய இரண்டிற்கும் ஏற்கெனவே வரி விலக்குக் கொடுக்கப்பட்டு, அதனுடைய amendment copy-கள் எல்லாம் அந்த வணிகர்களுக்கும், சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டன.

பேக்கரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பேக்கரிப் பொருட்களுக்கு, branded பொருட்களுக்கு என்று, 4 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதே பேக்கரிப் பொருட்கள் உணவகங்களிலே வழங்கப்பட்டால், அவற்றிற்கு 2 சதவிகித வரி விதிப்பு வேண்டும் என்று வணிகர்கள் கேட்டார்கள். அதை ஏற்றுக் கொண்டுதான் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே, மிகுந்த விலை உள்ள பெரிய கடைகளிலே விற்கப்படுகிற முத்திரையிடப்பெற்ற branded பொருட்களுக்கு மட்டும்தான் 4 சதவிகித வரி அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த 500 கோடி ரூபாய்க்கு உயர்த்தியதைப்பற்றி--300 கோடி ரூபாயாக இருந்ததை, பருப்பு வகை, போன்றவற்றிற்கு 500 கோடி ரூபாய்க்கு உயர்த்தியதைப்பற்றி—இங்கே கேட்டார்கள். அதனை 1,000 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும்; அது பல ஆண்டுகளுக்கு முன்னாலே, 300 கோடி ரூபாய்க்கு என நிர்ணயிக்கப்பட்டது; இன்றைக்கு விலைவாசி ஏற்றத்திலே, அதனை 1,000 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று வணிகர் சங்கங்கள் வேண்டுகோள் வைத்தன. நம்முடைய State Empowered Committee, மாநில அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, நம்முடைய நிதியமைச்சர் தலைமையிலே உள்ள குழு, அதைப் பரிசீலித்து, 1,000 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டாம்; 500 கோடி ரூபாயாக உயர்த்தித் தரலாம் என்று முடிவு எடுத்து, அது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மருந்துப் பொருட்களைப்பற்றி, இங்கே குறிப்பிட்டார்கள். அதை நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கையின்போதே அந்தப் பட்டியலை வைத்து இன்றைக்கு என்னென்ன விலைவாசிகள் இருக்கின்றன என்பதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஒன்றிரண்டு மருந்துப் பொருட்கள்தான் விலை உயர்ந்திருக்கின்றனவே தவிர, பிற, எல்லா மருந்துகளும் ஏற்கெனவே உள்ள விலைகளில் இருந்து குறைந்திருக்கிறது. அதே விலையில் இருக்கின்றன. ஒன்றிரண்டு பொருட்கள்தான் விலை உயர்ந்து இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டி, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரம் உள்ள, அந்த அதிகாரிகளை வைத்து, அவற்றைக் குறித்தும் பேசச் செய்திருக்கிறோம் என்பதையும் குறிப்பிடுகிறேன்.

பிளாஸ்டிக் பொருட்களைப் பொறுத்தவரையிலே, எல்லாப் பிளாஸ்டிக் பொருட்களும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. எனவே, அதிலே hanger என்று தனியாகப் பிரித்துச் சொல்லப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும், 12.5 சதவிகிதப் பட்டியல், 4 சதவிகிதப் பட்டியல் என்ற அந்தப் பட்டியல்கள் நீண்டு கொண்டே சென்றுகொண்டிருக்கின்றன. அவை பட்டியல் இடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை விரைவிலே நிறைவாக அளிக்கப்படும்.

பிற்பகல் 12-30

அதேபோல, பனியனுக்கும் இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். ஏற்கெனவே, அவர்களுடைய வேண்டுகோள்கள் எல்லாம் நிறைவேற்றித் தரப்பட்டிருக்கின்றன. சற்றுப் பொறுத்திருந்து, வருகிற ஆண்டு, 2008 ஆம் ஆண்டிலே அதை எடுத்துக்கொள்ளலாம். அதன்மூலம் பெரிய வரி வருவாய் என்பது இருந்தாலும், இல்லாவிட்டாலுங்கூட,

அதைப்பற்றிச் சற்று ஆராய வேண்டியிருக்கிறது. அதனால்தான், 2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும்போது, நாங்களும் 'திருப்பூர், திருப்பூர்,' என்று சொல்லக்கூடிய நாட்களும் அமைந்திட மாண்புமிகு அண்ணன் கோவிந்தசாமி அவர்களுடைய கோரிக்கை அந்த நோக்கிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமெனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2007) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

# 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

## (ஒ) தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2007). மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிவு 3, உட்பிரிவு 4-ல் கூறப்பட்டிருக்கின்ற வாரியத்தில், உறுப்பினர்களாக இருப்பவர்கள், ஜனநாயக அடிப்படையில் தங்களுக்குள் ஒருவரை, அதாவது நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது செயலாளர் ஆகிய பதவிகளுக்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தி, உறுப்பினர்களாக இருக்கின்ற யாரேனும் ஒருவரை, இந்த வாரியத்தில் ஏதாவது தலைவர், துணைத் தலைவர், செயலாளர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டால், மேலும் இந்த நல வாரியமானது சுதந்திரமாகச் செயல்படக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவும். அதேசமயத்தில், இந்த நல வாரியத்திற்குண்டான நிதியைச் செயல்படுத்துவதற்கு, செயலாளருக்கே இப்பொறுப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற அதேநேரத்தில், திருத்தச் சட்டப் பிரிவு 14-ல் கூறியிருக்கின்ற நல வாரியத்தில் இருக்கின்ற தலைவர் அல்லது துணைத் தலைவர், செயலாளர் ஆகியோர்கள் எடுக்கின்ற நல்லெண்ணத்தில் செய்யப்படுகின்ற எந்தச் செயலாக இருந்தாலும், அதற்கு அந்த வாரியத்தின் சார்பில் குழுவில் உள்ள உறுப்பினர் எவருக்கும் அல்லது வாரியத்தின் பிற அதிகாரிகள் எவருக்கும் எதிராக

[@] 8-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படக் கூடாது என்று பிரிவு 14-ல் நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். இதை அரசு கைவிட வேண்டும் என்ற என் கோரிக்கையை வலியுறுத்துகின்ற அதே நேரத்தில், இப்படிச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், செய்யப்படுகின்ற பணிகளில் தவறுகள் நிறைந்திருக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, இந்தப் பிரிவு 14-ஐக் கைவிட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைத்து நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மேகநாதன். (குறுக்கீடு)

மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்ததற்கே காரணம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள், தமிழ்நாட்டிலே உள்ள ஊனமுற்றவர்களையெல்லாம் அழைத்து, ஒரு மாநாடாக வள்ளுவர் கோட்டத்திலே கூட்டி, அதிலே முதலமைச்சரையும் கலந்துகொள்ளச் செய்து, அவர்களுக்கு இருக்கின்ற பல்வேறு வேண்டுகோள்களையும், அவர்களுடைய தேவைகளையும் அங்கே வலியுறுத்திப் பேசிய காரணத்தால், முதற்கட்டத்திலே இதற்காக ஒரு வாரியம் அமைக்க வேண்டும்; அந்த வாரியத்தின்மூலமாக அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் பிறகு செய்யலாம் என்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சொல்வதைப்போல, இதிலே ஏதாவது தவறுகள் நடக்குமானால், அதையெல்லாம் பார்த்து, குறைகள் இருந்தால் அவற்றைப் பிறகு நீக்கிக்கொள்வதற்குக்கூட எந்த நேரத்திலேயும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, முதலிலே ஒரு நல வாரியம் அமைப்போம். அந்த ஊனமுற்றவர்களுக்கு ஒரு மறுவாழ்வு கொடுப்போம். அனாதைகளாக இருக்கின்றவர்களை நாம் ஆதரிப்போம். அவர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சமுதாயத்திலே ஏழு சதவிகிதம் ஊனமுற்றவர்களாக இருக்கின்றவர்களுக்கு ஒரு மறுவாழ்வு கொடுப்பதற்கு உருவாக்கப்படுகின்ற இந்த வாரியத்தை அமைப்பதிலே அனைவரும் ஒற்றுமையாக இருந்து, அருள்கூர்ந்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த ஊனமுற்றோர் நல வாரியம் அமைப்பதிலும் ஊனமுற்றோர்களுக்கு உதவிபுரிவதிலும் தனி என்று வார்டுகளுக்கு ஒரு உதவியாளரை இருக்கின்ற இயக்கம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நான். (மேலவையை நாங்கள் ஒலி) இச்சட்ட முன்வடிவில் பகுதி உட்பிரிவில் எந்தச் செயலுக்கும் நிதியை ஒதுக்க கூடாது என்று இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், இந்த அவையினுடைய கவனத்திற்கும் நான் கொண்டுவருவதற்காகக் குறிப்பிட்டேன். மற்றபடி இந்த நல வாரியம் அமைக்கப்படக்கூடாது என்பது எங்களுடைய கருத்தல்ல என்பதை நான் இந்த நேரத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சொல்லுங்கள். திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் ஊனமுற்றவர்களின் நலன் கருதி, வாரியம் ஒன்று நிறுவுவது குறித்த சட்டமுன்வடிவில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி மேற்படி சட்ட முன்வடிவினை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊனமுற்றவர்களின் ஊனத்தின் சதவிகிதத்தை நிர்ணயிக்கும்போது, ஊனம் குறைவாக இருப்பவர்களுக்கு அதிகமாகவும், ஊனம் அதிகமாக இருப்பவர்களுக்குக் குறைவாகவும் கணக்கிட்டுவிடுகின்றனர். எனவே, ஊனம் இருக்கும் அளவிற்கு ஊனத்தை நிர்ணயித்துக் கொடுக்க அதிகாரிகளை முறைப்படுத்த வேண்டுமென்ற கருத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும், மேற்படி வாரியத்தினால் அமைக்கப்படும் குழுக்கள், மாவட்டந்தோறும், ஒன்றியந்தோறும் அமைக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தி, அரசு சார்பாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையிலே எந்தவிதமான வசதியும் அற்றவர்களாக, உழைத்து வாழ முடியாத நிலையில், உடல் ஊனமுற்றோர், மனநலம்



குன்றியோர், இவர்களுடைய வாழ்வுக்கும் இந்த அரசு நல்ல ஒரு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு, அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, ஒரு மாநாடாகக் கூட்டி, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களையும் அதில் பங்கேற்க வைத்து, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைக் கருணையோடு பரிசீலித்து இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும், அவர்களையும் காப்பாற்றும், பாதுகாக்கும் என்று அறிவித்தபடி, இப்போது நிதிநிலை அறிக்கையிலே அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக ஒரு நல்ல நல வாரியமும் சட்டபூர்வமாக அமைத்து, அவர்களுக்கெல்லாம் ஒரு நல்வாழ்வு அளித்திருக்கக்கூடிய தமிழக அரசிற்கும், குறிப்பாக, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்களுக்கான நல வாரியம் அமைப்பதற்காக இந்த அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கான நல வாரியங்கள், இந்த அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றிலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த உடல் நலிந்தவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த நல வாரியம் கொண்டுவருவதன்மூலமாக அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றச் செய்வதற்குரிய முயற்சி எடுத்த தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உடல் ஊனமுற்றோருக்கான நல வாரியம் தமிழகத்திலே ஏற்படுத்துவது என்கிற இந்தச் சட்டமுன்வடிவை, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதே நேரத்திலே, ஊனமுற்றோருக்கான ஒரு தங்கும் விடுதியும், பராமரிப்பு விடுதியும் சென்னையிலும், அதைப்போல மாவட்டத் தலைநகரங்களிலும் இயங்குகிற வகையில், அந்தப் பணிகளை வாரியத்தின் செயல்

[திரு. ஆர்.எம். பழனிசாமி] [2007 மே 10

பணிகளிலே சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். மத்திய அரசினுடைய சமூக நீதி மற்றும் அதிகாரமாக்கல் துறையின்மூலம் இப்போது இந்தியாவிலே, அதிக அளவிலே இந்த உடல் ஊனமுற்றோருக்கான உபகரணங்களை வழங்குகிற செயல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல், தமிழகத்திலே முதலிலே கொண்டுவந்ததற்கு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் அவர்களின் அரசு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, ஊனமுற்றோருக்காகக் கடந்த வருடம் ரூ.30 கோடி, இந்த வருடம் ஏறத்தாழ ரூ.77 கோடி நிதி ஒதுக்கி, மிகவும் சிறப்பாகச் செயல்படுவதற்கு இந்த வாரியத்தை அமைத்துள்ளது. இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பல நல்ல கருத்துகளைக் கூறினார்கள். கண்டிப்பாக, நிச்சயமாக இந்த வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்படும். நாங்கள், நிதித் துறைச் செயலர், மேலும் அங்குள்ள உறுப்பினர்களைக்கொண்டு, இந்த நிதியைச் சிறப்பாகச் செலவிடுவதற்கு, இந்த அரசு கண்ணுங்கருத்துமாக, எந்தத் தவறும் ஏற்படாமல் செயல்படும் எனத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை ஏற்குமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2007 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 3, திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரில் ஒருவர், தங்கள் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சங்கத்திற்கு அளிக்கப்பட இருக்கின்ற வாரியத்திற்காக, நான் கொடுத்த கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

For clause 3, sub-clause (4), the following shall be substituted:

"The posts of Chairman, Vice-Chairman and Secretary of the Board shall be filled by secret ballot among the Members of the Board and the Secretary to Government, Social Welfare and Nutritious Meal Programme Department shall be the Member-Secretary of the Board representing the Government".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 4 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 4 முதல் 13 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 14, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"Clause 14 shall be omitted"

என்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்?

**திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.கே. சேகர்பாபு முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 14, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 14, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 15 முதல் 17 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 15 முதல் 17 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2007) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஓ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2007). மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2007)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. அருண்மொழிதேவன், சொல்லுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான மீனவர்கள் நல வாரியம் என்பது, மீனவர்களுடைய முன்னேற்றத்திற்காக அமைக்கப்படும் வாரியமாக இருக்க வேண்டும். மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் நாட்டுப் படகு, விசைப படகு மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், குறிப்பாக மகளிர், கடலோர மாவட்ட மீனவர்கள், மீனவர்களைச் சார்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மீனவச் சமூகத்தைச் சேர்ந்த ஆர்வலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு அந்த நல வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

---

@ 8-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இன்றைக்கு அமைக்கப்பட்டுள்ள அந்த வாரியத்தில், இடைப்பட்ட நிலை இல்லை என்று மீனவப் பெருமக்கள் பேசி வருகின்ற நிலையிருக்கின்றது. மீனவர் நல வாரியமாக அது இருக்க வேண்டுமேயொழிய, சிலரைத் திருப்திப்படுத்துவதற்கான வாரியமாக இருக்கக்கூடாது என்று மீனவர்கள் இன்றைக்குப் பேசி வருகின்ற நிலையிருக்கின்றது. அந்தவகையில், அமைக்கப்படுகின்ற மீனவர் நல வாரியம், மீனவர்களுடைய முன்னேற்றத்திற்காக மட்டும் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுடைய நலன் குறித்தும், அவர்களுடைய வாழ்க்கையினுடைய பாதுகாப்பு குறித்தும், அவர்களுடைய குடும்பங்களுடைய எதிர்காலத்தைக் கருதியும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய தொலைநோக்குப் பார்வையோடு, இத்தகைய அற்புதமான ஒரு சட்டமுன்வடிவினை இந்தக் கூட்டத்தொடரிலேயே நிறைவேற்றி, அவர்களுக்கு நல்வாழ்க்கை தரக்கூடிய முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இந்தச் சட்டத்தினை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழக அரசினை, என் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அதிலே முக்கியமான இரண்டு, மூன்று பிரச்சினைகள் குறித்து சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய செயல்பாடுகளிலே சில சிரமங்கள் இருக்கலாமோ? சிரமங்கள் இருக்கின்ற இடங்கள் என்று நான் அச்சப்படுகின்ற இடங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதாவது,--the allied activities - இணைந்த தொழில்கள் என்பதனுடைய விளக்கம், எல்லாத் தரப்பு தொழிலாளர்களையும் உள்ளடக்குவதாக இருக்கிறது. இது குறிப்பாக, மீனவர்களை மட்டுமே கருத்தில்கொண்டு, அவர்களை மட்டுமே முனைப்படுத்தி, அவர்களுக்காக மட்டுமே செயல்படுகின்ற அமைப்பாக இந்த அமைப்பு இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், மீன்பிடிக்கின்ற தொழிலிலே, அதிலும் குறிப்பாகக் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்றவர்களுக்கு இருக்கின்ற பேராபத்துக்களைப் பார்க்கின்றபோது, அவர்களுக்கென்று சில தனிப்பட்ட சிக்கல்களும், சில தனிப்பட்ட ஆபத்துகளும் இருக்கின்றன. அத்தகைய



ஆபத்துகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, அத்தகைய சிக்கல்களிலே அரசு உதவி செய்வதற்கு உருவாக்கப்படுகின்ற இந்த அமைப்பு, அவர்களை மட்டுமே முன்னிறுத்துகின்ற அமைப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். எனவே, the allied activities என்பது, it seems to be too wide and include even people who are not connected with the fishing activity. அவர்களையும் சேர்த்து உள்ளடக்குவதாக, இது இருப்பதாகக் கருதுகிறேன். ஆகவே, அந்த allied activity-யிலே, நேரடியாக மீன்பிடிக்கும் தொழில் செய்வது, அந்த மீனைக் கடற்கரைக்குக் கொண்டுவந்து சேர்ப்பது, மீனவர்கள் மீனை விற்பது, இந்த மூன்று வகை மீனவர்களை மட்டுமே, இந்த அமைப்பிற்குள்ளே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. பி. தங்கமணி, தனது இருக்கையில் அமர்ந்துகொண்டு செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, என்ன? பேப்பர் வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறீர்கள்!

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the dependant என்பதிலே, நான்கு categories இருக்கின்றன. (1) Wife or husband, as the case may be; (2) Children; (3) Widow and Children of the pre-deceased son; (4) Parents என்று இருக்கின்றன. இதிலே, minor brothers and unmarried sisters; அவர்கள் சேர்க்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், சில மீனவர்கள் தங்களுடைய சகோதரர்களை, மணமாகாத சகோதரிகளைப் பாதுகாக்க வேண்டிய நிர்பந்தத்திலே இருக்கிறார்கள். அந்த minor brothers; அதாவது, வயதுக்கு வராத சகோதரர்கள், திருமணமாகாத சகோதரிகளையும், அந்த வாரிசுதாரர்கள் என்கிற அடிப்படையிலே அவர்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதற்குப் பிறகு, எந்தவிதமான காலக்கட்டத்திலே இந்த உதவி வழங்கப்பட வேண்டும் என்பதிலே, Accident Relief-ல் (a) death due to accident, (b) loss of both hands, (c) loss of both legs, (d) loss of one hand and one leg, (e) total irrecoverable loss of sight in both eyes, (f) loss of one hand or one leg என்று இருக்கிறது. இதிலே, missing fishermen என அவர்களுக்கு எவ்வளவு என்று இருக்கிறது. Missing fishermen என்று சொன்னால் 7 ஆண்டுகள் கழித்துதான் அவர்களுக்கு அந்த ஒரு இலட்சம் ரூபாய் கிடைக்கும். அவர்கள் காணாமல் போய், 7 ஆண்டுகள் கழிந்த

பிறகுதான், அரசு அந்த ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கும். இந்தப் பிரச்சினையைத்தான் நான் சட்டமன்றத்திலே கிளப்பி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்திலே காணாமல்போயிருக்கிற அந்த மீனவர்களைப் பார்த்து, அவர்களைத் தேடி கண்டுபிடிக்கின்றவரை அந்த மீனவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்பதற்காக மாதம் 1,500 ரூபாய் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திலே அது சேர்க்கப்பட வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினரோ அல்லது மாவட்ட நிருவாகமோ, தமிழக அரசிடம் வந்து கோரிக்கை வைத்து, காணாமல் போன மீனவர்களுக்கு ஏதாவது ஒரு நஷ்ட ஈட்டுத் தொகை அல்லது ஈட்டுத் தொகை கிடைக்க வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் கேட்கவேண்டுமென்பதை விட்டுவிட்டு, சட்டரீதியாக, எப்பொழுதெல்லாம் மீனவர்கள் காணாமல் போனார்கள் என்கிற புகார் வந்து பதிவு செய்யப்படுகிறதோ, அப்பொழுது முதல் அந்த மீனவர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றவரை அவர்கள் குடும்பத்திற்கு மாதம் 1,500 ரூபாய் கொடுப்பது என்பதை இதிலே சேர்க்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல, மீன் கர்ப்ப காலம் என்று சொல்லி, 45 நாட்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படுகிறது. அந்த 45 நாட்களும் மீனவர்கள் தொழில் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த 45 நாட்களிலே, மீன்பிடித் தொழில் முழுமையாகத் தடை செய்யப்பட்ட காலங்களிலே, அந்த மீனவர்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவும், இந்தத் திட்டத்திலே அதையும் சேர்க்க வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

ஏற்கெனவே சொன்னதுபோல, சில இடங்களிலே விசைப் படகு மீனவர்களுக்கும் நாட்டுப் படகு மீனவர்களுக்கும் மோதல் இருக்கிறது. அந்த மோதல், சில சமயங்களிலே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வரைக்கும் போய்விடுகிறது. ஆகவே, அந்த நாட்டுப் படகு மீனவர்களுக்கும், விசைப் படகு மீனவர்களுக்கும் எங்கெல்லாம் மோதல் இருக்கிறதோ, அங்கெல்லாம் அந்த மோதலைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒரு கமிட்டி என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கெல்லாவற்றிற்கும் மேலாக, இன்று இந்தியாவிலேயே நீளமான கடற்கரை உள்ள மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. இங்கே அதிகமான மீனவர்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்குப் போதிய மீன்பிடித்



துறைமுகங்கள் இல்லை என்பது மிகப் பெரிய குறை. மீன்பிடித் துறைமுகங்கள் இல்லாத காரணத்தினால்தான், நம்முடைய மீனவர்கள் கேரளாவுக்குப் போகிறார்கள்; ஆந்திராவுக்குப் போகிறார்கள்; இன்னும் தீவுகளுக்கெல்லாம் போய் அவர்கள் மிக மிகச் சிரமப்படுகிறார்கள். அந்த மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம்.

அதிலும் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே முட்டத்திலும், ராஜாக்கமங்கலத்திலும் இரண்டு மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்கவேண்டுமென்று அரசே முடிவு செய்து, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளெல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தப்புள்ளிகளை வெகு விரைவாகத் திறந்து, அந்த மீன்பிடித் துறைமுகங்களை உடனடியாக அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நம்முடைய மீனவர்கள் இப்பொழுது அங்கு செல்வதை, கேரள அரசு தடை செய்துவிட்டது. ஆந்திர அரசும் தடை செய்துவிட்டது. அவர்களுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்கு வேறு வழியில்லாமல்தான், இப்பொழுது 12 மீனவர்கள் காணாமல் போனார்கள். இதுகுறித்து ஏற்கெனவே நாம் பேசியிருக்கிறோம். காணாமல் போன இந்த 12 மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அவர்கள் விரைவாக கண்டுபிடிக்கப்பட வேண்டும். அவர்களைக் கொண்டுவந்து அவர்களது குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தக் கண்டுபிடிக்கின்ற முயற்சி, எந்த அளவிலே இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்வதற்கு இந்த அவை ஆசைப்படுகிறது. காணாமல் போன அந்த மீனவக் குடும்பங்களினுடைய மக்கள், கவலையோடு காத்திருக்கிறார்கள். அந்தத் தேடுதலை விரைவாக முடித்துத்தர வேண்டுமென்று கேட்டு, இதோடு நான் நிறைவு செய்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி**: மாண்புமிகு . . . (குறுக்கீடு)

**திருமதி செல்வி ராமஜெயம்**: ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பேச ஆரம்பித்துவிட்டார், உட்காருங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004, ஆழிப் பேரலைக்குப் பிறகு, நமது தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஒரு புது வாழ்வு, புதிய உலகம் என்று நம்முடைய அரசு அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தவகையிலே, கடந்த 2007-2008 ஆண்டிற்கான நமது வரவு-செலவுத் திட்டத்தில், மீனவர் நல வாரியம் அமைக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டது. அந்த வகையிலே, வேளாண் தொழிலாளர்கள் மற்றும் உழவர்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டம்; அந்தத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட அனைத்து நல உதவிகளும் மீனவர்களுக்குக் கிடைக்கும் என்று உறுதி கூறப்பட்டது. ஆகவே, இப்பொழுது தனியாக அந்த நலத் திட்டம், இன்று மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும், பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீன்பிடித் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, மனமாரப் பாராட்டி வரவேற்கிறோம். அதேவேளையில் ஆறு, குளம், குட்டை மற்றும் வாய்க்கால்களில் மீன்பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு, நலத் திட்டங்கள் எப்படி வழங்கப்படும் என்று இதில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆகவே, மீன்பிடித் தொழிலிலே வேறுபாடு பார்க்காமல், உள்நாட்டு மீனவர்களுக்கும் அனைத்துச் சலுகைகளும் கிடைக்க, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, இந்த மீன்பிடித் தொழிலிலே, மீனைப் பதப்படுத்துவதற்கும், விற்பதற்கும் 5 கோடி ரூபாய் பணத் தொகை ஒதுக்கி, பெண்களையும் மேம்பாடு அடையச் செய்த இந்தத் திட்டத்திற்குப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகப் பாராட்டைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க, இந்த அரசு முன்வந்ததை ஏற்கெனவே வரவேற்று இருக்கிறோம்; பாராட்டியிருக்கிறோம். மீண்டும் அதையே செய்கிறோம். இருப்பினும், ஒரு சில கருத்துகளை இதுசம்பந்தமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். மால் முடித்தல், இரை கொருத்தல் போன்ற பணிகளைச் செய்பவர்களுக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கும் இந்த நல வாரிய உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதுபோல், இருபால் மீனவர்களுக்கும் இந்த





உதவிகள் கிடைப்பதை உத்தரவாதப்படுத்தக்கூடிய வகையில், வார்த்தைகள் இடம் பெற வேண்டுமென்று கருதுகிறோம்.

காணாமல் போகும் மீனவர்களுக்கு, ரூபாய் ஒரு இலட்சம் வழங்குவதாக இந்தச் சட்டமுன்வடிவு கூறுகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய விதிகளின்படி, காணாமல்போனவர் என்று அறிவிக்கப்படுவதற்கு ஏழு ஆண்டுகள் ஆகும். அப்படியென்றால் ஏழு ஆண்டுகள் கழித்த பிறகுதான், இந்த ஒரு இலட்சம் ரூபாய் உதவி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறோம். ஆம் எனில், இதற்குரிய பதில் ஆம் எனில், இதை ஒரு வருடமாகக் குறைக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறோம். இயற்கைச் சீற்றம்பற்றி, சட்டமுன்வடிவில் எதுவும் இல்லை. இயற்கைச் சீற்றத்திற்கும் இந்தத் தொழிலுக்கும் ஒரு நிரந்தரமான தொடர்பு இருக்கிறது. எனவே, இயற்கைச் சீற்றத்தால் படகு மற்றும் உபகரணங்கள் இழப்பு ஏற்படும்போது, உரிய இழப்பீடு வழங்குவதற்கான ஷரத்துகளும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். மேலும், இயற்கை மரணத்திற்கு, முறைசாராத் தொழிலாளர் நல வாரியத்தின்மூலம், ரூபாய் 15,000 வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சட்டமுன்வடிவில் அதற்கு ரூபாய் 10,000 மட்டும்தான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இதையும் 15,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற ஆலோசனைகளை முன்வைத்து அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலே, கடலில் சுருக்கு வலை உபயோகிக்க தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால், மீனவர்கள் எல்லாம், தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்துவதினாலே மீன் வளமே அழிந்துகொண்டிருக்கிறது. சிறிய படகுகளை வைத்திருக்கிற மீனவர்கள் எல்லாம், இந்தச் சுருக்கு வலையை உபயோகப்படுத்துவதில்லை. ஏனென்றால், அதிக விலை கொடுத்து சிறிய மீனவர்களால் இதை வாங்க முடியாது. அதனால், தடை செய்யப்பட்ட இந்தச் சுருக்கு வலையை உபயோகிப்பவர்களை, அரசு கண்காணிக்க வேண்டும். அதனால், மீனவ சமுதாயம் அழிந்துகொண்டிருக்கிறது என்று இந்தப் பேரவைக்குத் தெரியப்படுத்திக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இந்த அவையிலே அறிவித்தபடி, அதை நான் கேட்டுக்கொண்டபடி, மூவலூர் இராமாமிர்தம் திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பு வரை படித்திருந்த பெண்களுக்கு 15,000 ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** அதேதான், அதேதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** மீனவப் பெண்கள் 10 ஆம் வகுப்பு வரை படிப்பதற்கு, முதலிலே schools ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எங்கள் தொகுதியிலே school-ஏ இல்லை. 10 வது வகுப்புக்கு எங்கேபோய் மீனவப் பெண்கள் படிக்க முடியும்? ஆகவே, அவர்களுக்கு, 10 ஆம் வகுப்புவரை படித்தால்தான், "15,000 ரூபாய் உதவி" என்பதை நீங்கள் குறைக்க வேண்டும்.

பிற்பகல் 1-00

இரண்டாவதாக, மீன் பிடிக்கமுடியாத காலங்களில், பக்கத்திலேயுள்ள பாண்டிச்சேரி பகுதியிலே, 1,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; 90 கிலோ அரிசி கொடுக்கிறார்கள். நாம் இதுவரை அதற்கு ஒரு ஏற்பாடும் செய்யவேயில்லை. குறைந்தது, 30 கிலோ அரிசி கொடுத்தால்கூட, மீன் பிடிக்காத காலங்களில், 25 ரூபாய்க்குக் கருவாடு விற்றாலே, அந்த நாட்களில் அவர்கள் சாப்பாட்டிற்குச் சரியாகப் போய்விடும். ஆகவே, அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

கருவாடு விற்கிற பெண்களெல்லாம் bank-லே கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களெல்லாம் எப்படியென்றால், 2,000 ரூபாய், 5,000 ரூபாய், 7,000 ரூபாய் என்ற அளவுக்கு, அவர்களாலே அதைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. மற்ற எத்தனையோ பெரிய பெரிய கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்திருக்கிற நீங்கள், மீன் பிடிக்கின்ற பெண்கள் வாங்கியிருக்கிற அந்தச் சின்ன சின்ன தொகை, எல்லாவற்றையும் பார்த்தால், 1,000 ரூபாய், 7,000 ரூபாய். Maximum என்று பார்த்தால்கூட, 10,000 ரூபாய்கூட இருக்காது; அதைத் தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

முதலில், மீன் பிடிக்கிற பெண்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்யாமல், "நீ பத்தாவது படித்திருந்தால்தான் உனக்கு 15,000 ரூபாய்" என்று



சொன்னால், school இல்லை என்கிறார்களே? எங்கே போய்ப் படிக்க வைக்க முடியும்? ஆகவே, இதை உடனடியாகக் கவனித்து, 15,000 ரூபாய் திட்டத்தில், அவர்களுடைய படிப்பை 8-வது வரை என்றாவது குறைக்க வேண்டுமென்று, நான் உங்கள்மூலமாகக் கேட்டு, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, எல்லாக் கட்சிகளும், முக்கியமாக அ.தி.மு.க.-காரர்களும் மிகவும் பாராட்டுவார்கள். இப்பொழுது பாராட்டாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவ மக்கள்மீது, இந்தியத் திருநாட்டில், தமிழக வரலாற்றில் இதுவரையில் இல்லாத, மிகப் பெரியதொரு உபகரணத் திட்டமாக, மீனவ மக்களுடைய எதிர்கால வாழ்வை நோக்கி, இன்றைக்கு மீனவர் நல வாரியம் அமைத்த நம்முடைய வரலாற்று முதல்வர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மீனவ மக்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக, நம்முடைய சிதம்பரம் சட்டப் பேரவை உறுப்பினர் அருண்மொழிதேவன் அவர்கள் பேசுகின்ற வேளையிலே, இந்த வாரியத்திலே மீன்பிடித் தொழிலிலே அக்கறையுள்ளவர்கள் சேர்க்கப்பட வேண்டும்; அப்படிச் சேர்க்கப்படவில்லை என்கின்ற ஒரு தவறான கருத்தினை இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். இந்த நல வாரியத்திலே, குறிப்பாகப் பாரம்பரியத் தொழிலான கட்டுமரத் தொழில் செய்கின்ற மீனவர்கள் உறுப்பினர்களாகவும், அதைப்போல, நாட்டுப் படகு மீனவர்கள் உறுப்பினர்களாகவும், அதைப் போலவே விசைப் படகு மீனவர்கள் உறுப்பினர்களாகவும், மீன்பிடித் தொழிலில் சம்பந்தப்பட்ட வியாபாரம் செய்யக்கூடிய மீன்பிடி ஏற்றுமதியாளர் ஒருவர் இந்த வாரியத்தினுடைய உறுப்பினராகவும் இருக்குமாறும் முறைப்படுத்தி, இந்த மீனவர் நல வாரியம் அமையப் பெற்றிருக்கிறது என்பதனை இந்த அவைக்குச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், நம்முடைய மீனவர்

நல வாரியம் எப்படி அமையப்பெற வேண்டும் என்று இங்கே அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். மீன்பிடித் தொழில் என்று சொன்னால், அதிலே மீன்பிடிப்பவர்கள் மட்டும் அடங்குபவர்கள் அல்ல. இராயபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி போன்ற மீன்பிடித் துறைமுகப் பகுதிகளில், அந்த மீன்களைக் கூடையில் தூக்குகின்ற தொழிலாளர்கள், Ice-ஐ உடைத்து, அந்த மீன்களுக்கு Ice வைக்கின்ற தொழிலாளர்கள், இறால் மீன் ஏற்றுமதி இறக்குமதி செய்கின்றபோது, அந்த இறால் மீன்களின் தலையை உடைத்து, அதைப் பதப்படுத்துகின்ற தொழிலாளர்கள், இப்படிப் பலதரப்பட்ட தொழிலாளர்களெல்லாம் அதிலே அடங்குவர் என்கின்ற காரணத்திற்காகத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள், மிக ஆழமாக யோசித்து, இந்தத் திட்டத்தின்மூலம் யார்யாரெல்லாம் பயன்பெற வேண்டும் என்கின்ற வகையிலே, இந்தச் சட்டத்தை வடிவமைத்திருக்கின்றார்கள்.

குறிப்பாக, 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவின்போது, தமிழகக் கடற்கரையிலே இருந்த, இதைப்போன்ற தொழில் செய்கின்ற மீனவர்கள் அல்லாதவர்களும், நிறைய உயிரிழப்பிற்கும், நிறைய பொருளிழப்பிற்கும் ஆளாகியிருக்கின்றார்கள் என்பதனை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வகையிலே, மிக நல்ல முறையில் இந்த மீனவர் நல வாரியம் அமையப் பெற்றிருக்கின்றது. நம்முடைய அண்ணன் அவர்கள் சொன்னதைப் போல ராஜாக்கமங்கலம், முட்டம் பகுதியிலே மீன்பிடித் துறைமுகங்கள் கூடிய விரைவிலே அமைவதற்கான ஆக்கப்பணிகள் அனைத்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-05

குறிப்பாக, இந்தச் சட்டப் பேரவையிலேயே நான் எடுத்துச் சொன்னேன். நிறைய பகுதிகளில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலெல்லாம் நம்முடைய நிதியமைச்சர், அய்யா பேராசிரியர் அவர்கள் தலைமையிலே கூடிய அந்தச் சுனாமி சீரமைப்புப் பணிக் கூட்டத்திலே, எங்கெங்கெல்லாம் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு வசதியாகத் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பெற வேண்டுமோ, அங்கெல்லாம் அமைக்கப்பட வேண்டுமென்று நம்முடைய பேராசிரியர் அவர்கள், அந்தச் சுனாமி நிதிக் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே, நிறைய இடங்களில் மீன்பிடித் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும் என்பதனையும், இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.





அதைப்போலவே, நம்முடைய புவனகிரி சட்டப் பேரவை உறுப்பினர் செல்வி ராமஜெயம் அவர்கள், இங்கே சுருக்குமடியைக் கொண்டு கடலிலே மீன் பிடிக்கின்றார்கள். அதனால், மீனவர்களுடைய வாழ்வாதாரம் அழிந்து போய்க்கொண்டிருக்கின்றதென்று சொன்னார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டில், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், மிக ஆழமாகவும், அழுத்தமாகவும் சிந்தித்து, மீன்பிடிக்க இயலாத அந்த 45 நாட்களை, மீன் இனவிருத்தி நாட்களாக நம்முடைய தமிழகத்திலே அறிவித்த முதல் முதல்வர், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, மீனவர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட முதல்வருடைய ஆட்சியிலே, அதுபோன்று நடந்தால், அரசிற்கும், உரிய அதிகாரிகளுக்கும் தெரிவிப்பீர்களேயானால், அதுபோன்று சுருக்குமடியைக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்கின்றவர்கள்மீது, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை நான் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, நம்முடைய விளவங்கோடு உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜாண் ஜோசப் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, மீனவர்கள் காணாமல் போனால், ஏழு ஆண்டுகள் கழித்துதான் அவர்களுக்கு அந்த நிவாரணமும், உரிய அந்த நஷ்ட ஈட்டுத் தொகையும் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதையெல்லாம் கருத்தில்கொண்டுதான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, இரண்டு ஆண்டுகளில் அந்த இன்சூரன்ஸ் மற்ற உதவிகளெல்லாம் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிற்கும், சம்பந்தப்பட்ட துறைக்கும் அறிவுறுத்திக் கடிதம் எழுதியுள்ளது.

அதைப்போலவே, சமீபத்திலே புயலால் காணாமல்போன மீனவர்களுக்கு உடனடி நிவாரணமாக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து, உதவித் தொகை வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இராமநாதபுரம் சட்டப் பேரவை உறுப்பினர் ஹசன் அலி அவர்கள், இந்த 45 நாட்கள் மீனவர்கள் மீன் பிடிக்காத காலத்தில், அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதனை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே நான் எடுத்துக் கூறியிருக்கின்றேன். அதை நம்முடைய முதல்வர் அவர்கள் பரிசீலித்து, அதற்கான ஒரு நல்ல தீர்வை விரைவில் காண்பார்கள் என்பதனை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பேசியதைப்போல மீனவர்களுடைய வாழ்வாதாரங்களைச் சிறப்பிக்கின்றவகையிலே, புயல், பெருமழை மற்றும் சுனாமி போன்ற பேரழிவுகள் ஏற்படுகின்ற காரணத்தால், உடனுக்குடன் அவர்களுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டுமென்கின்ற வகையிலேதான், சிறப்புக்குரிய இந்த மீனவர் நல வாரியம் அமையப் பெற்றிருக்கின்றது. அந்த வகையிலே நம்முடைய மீனவர்கள் விபத்தில் இறந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், இரு கைகளை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், இரு கால்களை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், இரு கைகள் மற்றும் ஒரு கால் இழந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், இரு கண்களில் பார்வை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு கால் இழந்தால் 50,000 ரூபாயும் என அறிவித்து, இதைப்போன்ற பல நல்ல திட்டங்களை இதில் உள்ளடக்கியிருக்கின்றார்கள். இதுபோன்ற திட்டங்கள் இதுவரையில் இல்லை. கடந்த ஆட்சிக் காலத்திலெல்லாம் மீனவர்கள் இறந்தால், அவர்களுடைய ஈமச் சடங்கிற்காக 500 ரூபாய் வழங்கப்பட்டது. நம்முடைய மீனவர் நல வாரியத்தின் சார்பாக, மீனவர்கள் இறக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு 10,000 ரூபாயும், அவர்களின் ஈமச் சடங்கிற்கு 2,500 ரூபாயும் வழங்க நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்கள்.

அதைப்போலவே, நம்முடைய மீனவ மக்கள் பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் படிக்கின்ற காலத்தில், அவர்களுக்கெல்லாம் மீனவர் நல வாரியம் மூலமாக ஊக்கத் தொகை வழங்க திட்டமிடப்பட்டிருக்கின்றது.

அதைப்போலவே, மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் திருமணத்திற்காக, ஆணாக இருந்தால் ரூ.3,000 எனவும், பெண்ணாக இருந்தால் ரூ.5,000 எனவும், இந்தத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படவிருக்கின்றது.

பிற்பகல் 1-10

அதைப்போல, நம்முடைய அரசினுடைய திட்டமாக இருக்கக்கூடிய கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரசவக் காலத்தில் முன் மூன்று மாதமும், பின் மூன்று மாதமும், ஆக ஆறு மாதம், மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம், மொத்தம் ரூ.6,000 இந்த வாரியத்தின் மூலம் வழங்கப்படவிருக்கின்றது.

அதைப்போலவே, 60 வயது நிறைந்த மீனவர்களுக்கு, மாதம் ரூ.400 முதியோர் ஓய்வூதியமும் வழங்கப்படவிருக்கின்றது.





அதைப்போல, நம்முடைய மீனவப் பெண்கள், கருவாடு காயவைக்கின்றவர்கள் என்று சொல்வார்கள். மீன்களை உலர வைத்தல் மற்றும் மீன்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள, நம்முடைய மீனவ மகளிருக்கு இத்திட்டத்தின்கீழ் உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன என்பதை இந்த நல்ல வேளையிலே தெரிவித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டங்களையெல்லாம், மீனவ சமுதாயம், இத்தகைய பெரும் பயன்களைப் பெறுவதற்கு ஏற்ப, ஒரு ஆணை பிறப்பிக்க முடியும். ஆனால், இந்த ஆணையை எதிர்காலத்தில் வேறு அரசு அமைந்து, அந்த ஆணையை நடைமுறைப்படுத்தாவிட்டால், ஏழையெளிய மீனவர்களுக்கு இந்தப் பயன்கள் கிடைக்காமல் போய்விடக்கூடும் என்பதால்தான் அவர்களுக்கு எதிர்காலத்தில் பயன்கிடைக்கக்கூடிய வகையில், ஒரு தனிச் சட்டமாக வகுக்கப்பட்டு, அந்தச் சட்டம் ஏழைகளின் காவலர், தமிழ் மக்களின் வரலாற்று முதல்வர், ஐயா மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் இன்று கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குப் பணிவுடன் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் அன்போடு கேட்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 21 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சி — 11-5-2007 மற்றும் 12-5-2007 ஆகிய நாட்களில் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுகோள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 11-5-2007 வெள்ளிக்கிழமை அன்று, காலை 10-00 மணிக்கு, "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில் மேதகு ஆளுநர் மற்றும் சட்டமன்ற கட்சித் தலைவர்கள் பாராட்டுரைகள் வழங்குவார்கள். உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12-5-2007 சனிக்கிழமை அன்று, காலை 11-00 மணிக்கு "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்களவைத் தலைவர் அவர்கள், பாராட்டுரை வழங்குவார்கள். உறுப்பினர்கள் அனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 14-5-2007 (திங்கட்கிழமை) அன்று, காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

97. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டுவருவதன் மீதான வரிவிதிப்பு விதிகளில் திருத்தங்கள் செய்தும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கு அதன் எதிரே குறிப்பிடப்பட்ட வரி வீதத்தை நிர்ணயம் செய்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 1.1.2007 ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டுவரப்படும் பொருட்களின் மீதான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

98. 2005-2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து மூன்றாவது அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

99. 2005-2006 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

100. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

101. 2005-2006 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

102. 2005-2006 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

103. 2005-2006 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

104. 2005-2006 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

261. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கை, செப்டம்பர் 2006. (தமிழ், ஆங்கிலம்)

262. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு, மே 2007. (தமிழ், ஆங்கிலம்)

263. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2006-2007)

264. அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2006-2007)

227670
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.